
கல்கி



KALKI
10.10.65
35 காசு

கல்கி பொருளடக்கம்




யுத்தத்தைத் தவிர்க்க விரும்புவது அதைக் கண்டு நாம் பயப்படுவதால் அல்ல, அதனை வெறுப்பதால்.

சமாதானத்துக்காகப் பாடுபடுவது நமது பலவீனத்தைக் கருதி அல்ல, நமக்குள்ள பலம் காரணமாகத்தான்.

- லிண்டன் பி. ஜான்ஸன்

விசுவாவசு புரட்டாசி 24-அக்டோபர் 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பிரிட்டன்
அமெரிக்கா
காமன் வெல்த்
'ஸியாட்டோ
சென்டோ
இந்தோனேசியா
பாகிஸ்தான்
PK
"நாங்கள் எல்லோரையுமே ஒரு கை பார்ப்போம்!"



மலர் 25 ● இதழ் 11

குறுகிய நோக்கத்தை விடுவோம்; தீர்க்க தரிசனம் பெறுவோம்!

ராஜாஜி

ஐ. நா. சபையின் பாதுகாப்புக் குழுக் கருத்துக்களை இந்தியா உடனுக்குடன் ஏற்பதும், ஒவ்வொரு நிலையிலும் பாகிஸ்தான் தயங்கிக் காலம் தாழ்த்துவதுமே போர்முனையிலும் உலக அரங்கத்திலும் நம்முடைய வெற்றிக்குச் சான்றாகும். தோல்வியுற்றவர் நம்பிக்கையுடன் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கவும் தயங்குவதைக் காண்கிறோம். நம்முடைய தரப்பின் சரியான போக்குக்கு இதனைக் காட்டிலும் வேறு புறச் சான்றுகள் தேவையில்லை. தன்னால் நிரூபணமாகி வரும் இவ்வுண்மை குறித்து நாம் அதிகமாகக் கூச்சலிட்டுக் கசப்பை வளர்க்காதிருத்தல் வேண்டும்.

நமக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பொதுவான பிரச்னைகளும், பொதுவான ஆபத்துக்களும் உள்ளன. இவற்றை நாம் இருவரும் கூடிச் சமாளிக்க வேண்டும். நாமிருவருமாகக் கூடிச் சமாதானத்துக்கு முயல வேண்டும். இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு முன் அயூப்கான் அவர்கள் கூறிய யோசனையை இன்று நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த யோசனையைக் கூறும்போது அவர் எந்த மன நிலையில் இருந்தாரோ அந்த மன நிலையை நாம் இப்போது பெற வேண்டும். 'நாம் இருவரும் பாதுகாப்புக்காகக் கூட்டுச் சேரலாம்' என்று அயூப்கான் கூறியபோது ஜவாஹர்லால் அவர்கள் 'யாரை எதிர்த்துப் பாதுகாப்பு?' என்று கிண்டலாகக் கேட்டு, விஷயத்தை அத்துடன் தள்ளுபடி செய்து விட்டார். 1962ம் ஆண்டு அக்டோபரில் சீனம் நிகழ்த்திய ஆக்கிரமிப்பு நேரு அவர்களின் கேள்விக்கு மறக்கவொண்ணாதபடி விடை சொல்லி விட்டது. அப்போது நாம் இழந்த ஆயிரக்கணக்கான சதுர மைல் பரப்பும், ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளும் இன்றளவும் சீனத்தின் வசமே உள்ளன. இந்த நஷ்டத்தை மாற்றுவதற்கில்லை என்பது போலவே நம் தரப்பில் விட்டுக் கொடுத்து விட்டோம். முன்பு அயூப் கான் கூறியதிலிருந்த விவேகத்தையும், தீர்க்கதிருஷ்டியையும், நல்லெண்ணத்தையும் இப்போதேனும் நம்மிரு நாடுகளும் திரும்பப் பெற்றாக வேண்டும். இந்த ஆண்டில் நடைபெற்றுள்ள எரிச்சலூட்டும் சம்பவங்கள் நம்மை இத்தகைய விவேகமான போக்கிலிருந்து தடுக்கக் கூடும். ஆனால் சமீப காலத்துத் துர்ச் சம்பவங்களே நம்மிரு நாடுகளுக்கும் ஒரு படிப்பினையும் ஆகும். நட்பைப் பற்றிப் பேசுவதை விடப் போரைப் பற்றிப் பேசுவதே தேசபக்தி என்று சிலர் அறிவின்றி எண்ணுகின்றனர். இவர்களின் போர் விருப்பத்தைக் கட்டுப்படுத்தி நியாயமான முறையில் பெறக் கூடிய சமாதானத்தில் ஆர்வமூட்ட வேண்டும்.

சமீபத்துச் சண்டை நமக்கு உணர்த்தியுள்ள உண்மைகள் யாவை? இருநாட்டு ராணுவங்களும் தீவிரமான போர்ப் பயிற்சி பெற்றுள்ளன. எனவே,

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா
— பாரதியார்

பொது எதிரியை எதிர்த்து இரு நாட்டு ராணுவமும் ஒத்துழைத்தால் மிகவும் அநுகூல நிலையில் இருப்போம். யுத்த ஆபத்து என்றால் என்ன என்பதையும், அப்போது எப்படிச் செயல்பட வேண்டும் என்பதையும் இரு நாட்டிலும் (ஸிவிலியன்) பொதுமக்கள் யாவரும் இப்போது உணர்ந்துள்ளோம். இதனால் மக்கள் மனத்தில் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையும், தூய்மையும் உண்டாகியுள்ளன. யுத்தக் கொடுமைகளுக்காக நாம் தெய்வங்களைப் பழிக்காதிருப்போமாக! காலத்தின் நீண்ட ஓட்டத்தில் நமக்கு எது நன்மை தரும் என்பதை ஆண்டவனே அறிவான்! அதற்கேற்ப நடத்தி வைப்பான்! பெருத்த விபரீதம் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை என்றும், நடந்து போன சம்பவங்களிலிருந்து சில நல்ல பாடங்களைப் பெறலாம் என்றும் உணர்வோம்.

நேற்று எனக்கு நானே சம்பந்தமில்லாமல் சிந்தித்துக் கொண்டிருந்தேன்: 'கராச்சியிலும் லாகூரிலும் ராவல்பிண்டியிலும் போர் நிறுத்தக்கோட்டுக்கு ஒருபுறமுள்ள பாகிஸ்தானியரும், தில்லியிலும் ஆக்ராவிலும் லக்னௌவிலும் போர்நிறுத்தக் கோட்டின் மறுபுறமுள்ள இந்தியரும் ஒரே மொழியைத்தான் பேசுகின்றனர்; ஏறக்குறைய ஒரே போன்ற உடைதான் உடுத்திக் கொள்கின்றனர்; பெரும்பாலும் ஒத்த பழக்கவழக்கங்களைத்தான் பின்பற்றுகின்றனர்; ஒரே மெட்டுக்களைத்தான் முணுமுணுக்கின்றனர். வடக்கே வாழ்பவர்களும் இரு நாடுகளைச் சேர்ந்தவர்களுமான என்னுடைய சகோதர மக்களிடையே காணும் இவ்வளவு ஒற்றுமையை — மொழியிலோ, பழக்க வழக்கத்திலோ, பண்பாட்டிலோ, மனோபாவத்திலோ வட இந்தியருக்கும் நான் வசிக்கும் தென் இந்தியப் பகுதியினருக்குமிடையே கூடக் காண்பதற்கில்லை எனச் சொல்லலாம். இருந்த போதிலும் ஒத்த இரு மக்கள் போரிட்டு மடிய வேண்டியுள்ளதே' என்பதை எண்ணிப் பார்த்தேன். நாம் போரிட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. நமது யுத்தப் பிரியர்களின் கோஷத்தைக் கேட்பதாயின் மற்ற எல்லா அம்சங்களையும் மறந்து எதிராளிகளுடன் இறுதி வரை போரிட்டுத்தான் ஆக வேண்டும். இவ்விதம் நேராதபடி நமது உள்ளங்களில் ஆட்சி செலுத்தும் ஆண்டவன் நம்மை நல்வழியில் செலுத்துவாராக! தத்துவ சாஸ்திரங்கள் அறிந்த நமது ராஷ்டிரபதி வேகமும் கோபமும் மடமையும் நம்மை ஆட்கொள்ளாமல் நமக்கு வழி காட்டுவாராக!

(இச்சமயத்தில் மொழியைக் கொண்டு ஒற்றுமை ஏற்படுத்துவது பற்றியும் என் சிந்தனை படர்ந்தது. ஒரே மொழியானது மக்களை ஐக்கியப்படுத்துகிறதெனில் பாகிஸ்தானுடன் சண்டையே ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை; பாகிஸ்தான் இந்த விஷமத்தனமான, விபரீத விளையாட்டைத் தொடங்கியிருக்க வேண்டியதேயில்லை. எனவே, இப்போதேனும் பிரதமரவர்கள் ஹிந்தித் திட்டத்தை நிறுத்தி, ஹிந்தி பேசாதவருக்குச் சமநீதியும், மனநிம்மதியும், காப்பும் அளிக்க வேண்டும். ஏதோ சில அம்சங்களை விட்டுக் கொடுப்பதோ, அநுதாபம் தெரிவிப்பதோ மட்டும் போதாது. அரசியல் சாஸனத்தில் ஆட்சி மொழி பற்றிக் கூறும் பதினேழாம் பிரிவை அடியோடு மறந்துவிட வேண்டும். எம்மாறுதலுமின்றி, முன்பு நடந்து வந்தாற் போலவே நிர்வாகம் தொடர வேண்டும். மொழிப் பிரச்னையைப் பற்றிப் பேச்சு எழ இடமே தரலாகாது.)

மறுபடியும் நிகழ்காலப் போர்ப் பிரச்னையைப் பார்ப்போம். இந்தியா — பாகிஸ்தான் சச்சரவுக்கு முடிவு காண பிரிட்டனும் அமெரிக்காவும் முயல வேண்டும் என்று ஹாரால்ட் வில்ஸன் கூறிய யோசனையை அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன் ஏற்கவில்லை என்று 'நியூஸ் வீக்' பத்திரிகை கூறுகிறது. 'இது ஐ. நா. சபை தீர்க்க வேண்டிய பிரச்னை; இது போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையைத் தீர்ப்பதாலேயே ஐ. நா.வுக்குக் கௌரவமும், சக்தியும் பெருகும்' என்று ஜான்ஸன் அவர்கள் கருதுவதாகவும், இது காரணமாகவே அமெரிக்காவில் பெரும் நீதிபதியாயிருந்த கோல்ட்பேர்க் அவர்களை ஐ. நா.வில் அமெரிக்கப் பிரதிநிதியாக அவர் நியமித்துள்ளதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன் மூன்றும் தமது செல்வாக்கைப் பிரயோகித்து ஐ. நா. சபையானது காச்மீரப் பிரச்னையில் வெற்றிகரமாகத் தீர்வு காண வகை செய்ய வேண்டுமென்று பிரிட்டனின் வெளிவிவகாரக் காரியதரிசியும் கூறியுள்ளார்.

காச்மீரம் இந்தியாவுடனேயே இணைந்து விட்ட பகுதி என்பது பற்றி நமக்குச் சர்வ நிச்சயமெனில் நாம் இது குறித்துத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அதிகம் வற்புறுத்துவதே சந்தேகத்துக்கு இடம் தரும். 'உறுதியாகிவிட்ட உண்மை' என்று எதையுமே சாதிப்பதற்கில்லை. ஸயன்ஸில் ஆராய்ச்சிகள் செய்து கண்டு பிடித்து நீண்ட காலம் ஸ்திரமாகக் கருதப்பட்டு வந்த 'உண்மை'கள்கூடக் காலக்கிரமத்தில் வேறு ஆராய்ச்சிகளால் மாற்றப்பட்டிருக்கின்றன. எனவே, அதைவிட மாறுபாடுக்கு அதிக இடம் தரும் அரசியல் வாழ்வில் உறுதியாகி விட்டதாகச் சில 'உண்மைகளை'க் கருதிச் சித்தாந்த ரீதியில் பிடிவாதம் புரிவதில் அர்த்தமில்லை. ஒன்றையொன்று அழித்துக் கொள்ளும் சுதேசியத்துக்கு மேம்பட்ட சக்தி வாய்ந்த சர்வதேசியத்தின் நுழை வாயிலில் நாம் இருக்கிறோம். இச்சமயத்தில் மறைந்து போகும் ஒரு சகாப்தத்தின் சக்கையைப் பற்றிச் சண்டையிடாமல் ஐ. நா.வைப் பலப்படுத்தி உலக சர்க்காரும், உலக நீதி முறையும் நடைமுறைக்கு வருவதற்குப் பாடுபடுவோம்.

தீர்க்கம் பச்யத மா ஹ்ரஸ்வம்

"குறுகிய பார்வையை விட்டுத் தீர்க்க திருஷ்டியுடன் நோக்குவோம்!"

ராஜாஜியின் கருத்துக்கள்

இதை எழுதும் போது பாகிஸ்தான் ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லி ஐ. நா. பாதுகாப்புச் சபையின் யோசனைகளை நிராகரித்து வருகிறது. இந்தியா இணங்கிய போதிலும் பாகிஸ்தான் மறுத்து வருகிறது. இது வருந்தத் தக்கது. இதே போல் பாகிஸ்தான் தொடர்ந்து செய்தால் நிலைமை முற்றித் தீவிரமாகி விடும். பாகிஸ்தானுக்கு அந்நிய உதவி ஏதும் கிடைக்கச் செய்யக் கூடாதெனப் பாதுகாப்புச் சபை முடிவெடுக்க வேண்டியிருக்கும். இவ்வாறு பாதுகாப்புச் சபை உத்தரவிட்டால், தற்போது பாகிஸ்தானுக்கு உதவும் நாடுகள் தாமாக உதவியை நிறுத்தும் கூச்ச நிலைக்கும் தப்பபிப்பிராயத்துக்கும் ஆளாகாமல், உலக அரங்கின் சொற்படி நடக்கும் வாய்ப்பு ஏற்படும்.

உலக சபை இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒரே நிலையில் வைத்து எடைபோடுவதால் பாகிஸ்தானின் பிடிவாதம் ஓங்கும். இது வரை பாகிஸ்தான் துராக்கிரகம் செய்தும் அத்துடன் இந்தியாவைச் சமமாகப் பாவித்து வந்ததற்கு ஏதாவது நல்ல உள்நோக்கம் இருந்திருப்பினும், இனியும் அவ்வாறு செய்வது நியாயமாகாது. தயக்கமின்றிப் பாகிஸ்தானை ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிடில் போர் நிறுத்தத் தீர்மானத்தாலும், அதன் மீது எழுந்த நம்பிக்கையாலும் ஏற்பட்ட நல்ல விளைவுகள் நசித்துப் போகும்.

* * *

திறமையுடன் சொற்களைக் கையாண்டு தீர்மானங்களை உருவாக்குவதால் அபிப்பிராய பேதங்களையும் மோதல்களையும் தீர்த்துவிட முடியாது என்று ஐ. நா.விலுள்ள மலேஷிய தூதர் ஸ்ரீ ரமணி அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். "அழகான வாசகத்தையுடைய தீர்மான நகல் நமது கைக்குக் கிடைக்கலாம். ஆனால் இது ராஜரீகமாகாது" என்றார் ஸ்ரீ ரமணி. நாளுண்டுகளாக நாம் பிரிட்டனின் ஆட்சியை எதிர்த்து இப்படித்தான் ஆணித்தரமான சொற்போர் தீர்மானங்கள் நிறைவேற்றி வந்தோம். ஆனால் காந்தி அவர்கள் 'ஒத்துழையாமை' என்று காரியரீதியில் இறங்கின பின்தான் பலனடைந்தோம். எனினும் இன்னமும் நாம் அழகிய பெயரெச்சத்தையும், வினையெச்சத்தையும், சொல்லடுக்குகளையுமே முக்கியமாக எண்ணுகிறோம். ராஜரீகம் என்பது வேறு விஷயம்.

* * *

ராஜ்ய சபையில் ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த சுதந்திரக் கட்சி அங்கத்தினராயிருந்த ஸ்ரீ சங்கர பிரதாப சிங் தேவ் காலமானபடியால் அவர் ஸ்தானத்தில் இப்போது ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இது ராஜ்ய சபைத் தேர்தல் அமைப்பில் உள்ள ஒரு குறைபாட்டை எடுத்துக் காட்டுகிறது. பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மாநில சட்ட சபையில் இடம் பெறும் பல்வேறு கட்சிகள் மத்திய ராஜ்ய சபையில் விகிதாசார பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்கிற நோக்கத்தில் தான் ராஜ்ய சபைக்கான தேர்தல் நடக்கிறது. ஆனால், இடைக்காலத் தேர்தலில் குறிப்பிட்ட மாநிலத்துச் சட்ட சபையின் எல்லா அங்கத்தினர்களுமாகச் சேர்ந்து காலியான அந்த ஒரு ஸ்தானத்துக்குரியவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே சட்டசபையில் பெரும்பான்மை பலமுள்ள ஆள்கிற கட்சியே இடைக்கால ஸ்தானங்கள் யாவற்றையும் கைப்பற்ற முடிகிறது. இடைக்காலத்தில் ராஜ்ய சபையிலிருந்து விலகும் அங்கத்தினர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ அந்தக் கட்சிக்கே அந்த ஸ்தானத்தைக் கொடுப்பது என்ற கௌரவமான சம்பிரதாயத்தைப் பின்பற்றினால் அரசியல் சாஸனத்தின் உட்பொருளையும் மதித்ததாகும். எல்லா வகையான கருத்துக்களும் பூரணமாக வெளிப்படவேண்டும் என்பதற்காகவே ராஜ்ய சபையை நமது சாஸனம் அமைத்துள்ளது. இந்த நோக்கத்தை ஆளும் கட்சியினர் மதிக்காதிருப்பது வருந்தத் தக்கது.

* * *

'இந்தியாவிடமுள்ள நட்பை விடப் பாகிஸ்தானிடமுள்ள நட்புக்கே பிரிட்டன் பல ஆண்டுகளாக் முதலிடம் தந்திருக்கிறது' என்று ஸ்ரீ மொரார்ஜி அவர்கள் குறை சொல்கிறார். இரு நண்பர்கள் அல்லது இரு மனைவியரிடம் முற்றிலும் சமமான அன்பு காட்டுவது அவ்வளவு எளிதல்ல. நம்மிடமும் நட்புக் காட்ட வேண்டும் என்று விரும்பிக் கேட்கலாமேயன்றி அதை அளந்து பார்த்துச் சமத்துவம் கோருவதற்கில்லை. ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்கள் இவ்வாறு கூறினாலும் ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் அவர்கள், நாம் காமன்வெல்த்தை விட்டு விலகலாகாது என்றே கருதுகிறார். காச்மீர வியவகாரத்தில் பிரிட்டனின் போக்குத் திருப்திகரமாக இல்லாவிடினும், காமன்வெல்த்தை விட்டு வெளியேறும் கருத்தைத் தாம் ஆதரிக்கவில்லை என்று ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்களும் கூறியுள்ளார்.

* * *

தாஷ்கெண்டில் இந்தியப் பிரதமரும் பாகிஸ்தான் பிரதமரும் கூடிப் பேசலாம் என கோஸிஜின் அனுப்பியிருந்த அழைப்பு குறித்து நம்பிக்கை வைத்திருந்தோம். ஆனால் ருஷியா பட்சபாதமாக நடக்கும் என்று பாகிஸ்தான் ஐயப்பட்டு நமது நம்பிக்கையைக் குலைத்து விட்டது. ருஷியத் தலைவருடைய நுட்பமான மனப்போக்கை பாகிஸ்தானியர் அறியத் தவறிவிட்டனர். இரு நாடுகளிடையே சமாதானம் செய்துவைக்க விரும்புகிறவர்கள் பகிரங்கமாக (sic) பளிச்சென்று தங்கள் கருத்தை வெளியிடுவதற்கில்லை. சச்சரவிடும்

நாட்டுத் தலைவர்களை ஒருங்கே கொண்டு வருவதற்காக அவர்கள் நாசூக்காகத்தான் பேச வேண்டும்.

இந்தியா — பாகிஸ்தான் போரில் அமெரிக்காவும் ருஷியாவும் ஒரே திசையில் செல்வதால் ஐ.நா.வுக்குப் புத்துயிர் பிறந்திருக்கிறது. இந்தியா—பாகிஸ்தான் போரை விஸ்தரிக்கச் சீனம் விரும்புவதுபோல் ருஷியா விரும்பவில்லை; அது சமாதானத்துக்கே மனப்பூர்வமாக முயல்கிறது என்று நம்புகிறவர்கள், நீரில் மூழ்கும்போது கிடைத்த ஒரு காப்புக் கயிறாக ருஷிய யோசனையைப் பிடித்துக் கொண்டு கரை சேரவேண்டும்.

நார்வேயில் சோஷலிஸச் சார்பில்லாத நான்கு கட்சிகள் ஒன்று கூடித் தேர்தலில் வெற்றி பெற்றதால் முப்பதாண்டு சோஷலிஸ ஆட்சி முற்றுப் பெற்றுவிட்டது. விலைவாசிகளும் வரிகளும் பெருமளவில் உயர்ந்ததே மக்கள் வலது சாரிக்குத் திரும்பியதன் காரணம் என்று கூறப்படுகிறது. இது வரை நடைபெற்று வந்த சோஷலிஸ ஆட்சியில் சர்க்கார் எடுத்துக் கொண்டு நிர்வகித்த தொழில்களில் ஊழல்கள் பெருகி யிருந்தனவாம். சோஷலிஸச் சார்பற்ற புது ஆட்சியாளர், சர்க்கார் துறையைக் கட்டுப்படுத்துவதாகவும் வரி முறையை மாற்றி மமைத்துப் பணவீக்கத்தைக் குறைப்பதாகவும் வாக்களித்திருக்கிறார்கள்.

ரஷ்யத் தலைவர் ப்ரெஷ்னேவின் இரண்டு கருத்துக்களை இந்திய அரசியல் வாதிகள் கவனிக்க வேண்டும். ருஷியா பட்சபாதமின்றி, இந்தியா — பாகிஸ்தான் இரு நாடுகளிடமும் நட்போடு சமாதானத்துக்கு முயல்வதால், இவ்விரு தேசங்களிலும் சர்வதேசத் துறையிலுமே ருஷ்யாவின் மதிப்பு உயர்ந்துள்ளதாக அவர் கூறியிருக்கிறார். சீனத்துக்கும் ருஷியாவுக்குமிடையே முன்போன்ற ஒற்றுமையை ஏற்படுத்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சென்ற ஆண்டில் மேற்கொண்ட முயற்சிக்குச் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆதரவளிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். வேறுபாடுகளை நீக்கிக்கொள்ள மேலும் முயன்றுகொண்டே இருக்க வேண்டுமென்பது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் நம்பிக்கை.

அந்நிய நாட்டிலுள்ள நமது பத்திரிகை நிருபர்கள் சிலர் அனுப்பும் விமரிசனங்கள் குறித்து Eastern Economist பத்திரிகையில் ஸ்ரீ வி.பி. அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்:

''இந்த நிருபர்கள் தரும் தகவலுக்குப் பொறுப்புள்ள எந்த அமெரிக்க அதிகாரியையும் மேற்கோள் காட்ட முடியாமலிருக்கும் போதே, தாம் கூறுவதுதான் அமெரிக்க சர்க்காரின் கருத்து என்று தொனிக்குமாறு எழுதுகின்றனர்.

இந்தியா — பாகிஸ்தான் சச்சரவின் போக்கைப் பற்றி அமெரிக்க அரசாங்கம் என்ன கருதுகிறது என்பது நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கருத்தைப் பற்றிய வெறும் ஹேஷ்யங்களைப் பிரசாரம் செய்வதில் எவ்வித லாபமுமில்லை. இந்திய-பாகிஸ்தான் சச்சரவுக்கு யார் பொறுப்பு, அல்லது இது யாருடைய குற்றம் என்கிற கேள்விக்கு அமெரிக்க சர்க்காரே வெளிப்படையான, அதிகாரபூர்வமான அறிக்கை மூலம் விடை சொல்கிற வரையில் நம் தேசம் தாராளமாகக் காத்துக் கொண்டிருக்கலாம்.''

ஸ்ரீ வி. பி. கூறுவதை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். நாம் நல்லுறவுடன் வாழ வேண்டிய வல்லரசுகளைப் பற்றிய ஹேஷ்யச் செய்திகளாலும் விமரிசனங்களாலும் தீமைதான் ஏற்படுகிறது.

ஒரே குடும்பத்தில் சகோதரர்களிடையேயும், மற்ற நெருங்கிய உறவினரிடையேயும் போதிய காரணமின்றி வெறுப்பு ஏற்பட்டு ஆழப் பதிந்து விடுவதை நான் அநுபவபூர்வமாகப் பார்த்திருக்கிறேன். வெறுப்பு முளைவிட்டு விட்டால் போதும், அது தானே தூண்டுதல் பெற்று, காரணங்களையும் கற்பித்துக்கொண்டு மேன் மேலும் வளர்ந்துவிடும். தேசங்கள் விஷயமும் இப்படியே. இனம், மதம், கொள்கை மாறுபாடு இவை காரணமின்றியே தேசங்களிடையே போர் ஏற்படுவதை ஜூலியன் ப்ளிட் அவர்கள் சமீபத்திய 'ஸ்வராஜ்யா' இதழில் அழுத்தமாக விளக்கியிருக்கிறார். சச்சரவுக்கு அடிப்படைக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால், உலகின் அநேக விவகாரங்களைப் போல், இதுவும் ஒரு மாயையின் மீதே எழுந்தது எனக் காண்போம்.




GOLDEN B.B.C° PUFF
GOLDEN B.B.C° PUFF
பிரிட்டானியா
கோல்டன் ப:ப்
GOLDEN B.BIC° PUFF
GOLDEN PUFF
BRITA
பிரிட்டானியாவினுல் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கோல்டன் ப:ப் பிஸ்கட்டுகள், புத்தம் புதியவை, முறுகலானவை, புஷ்டிச் சத்தும் உள்ளவை. டீ அல்லது காபி அருந்தும்போது, ஜாம், வெண்ணெ, அல்லது பாற் கட்டியுடனே தின்பதற்கு மிகச்சிறந்தவை. அவற்றை பரீட்சை செய்து பாருங்கள்—வாயில் போட்டதும் கரைந்து போகின்றன. இன்றே கொஞ்சம் வாங்கி, பிரிட்டானியா கோல்டன் ப:ப் பிஸ்கட்டுகளின் புத்தம் புதிய சுவையின்பத்தை அனுபவியுங்கள்.
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள்
JWTBC 5910 AR



பல்சுவைப் பக்கம்
(1)

உயரே ப(பி)றந்தாள்!

விமானத்திலே ஒரு குழந்தை பிறந்தது என்ற செய்தியொன்று சில வாரங்கள் முன்பு நம்மை வியக்கச் செய்தது. 'ஃப்ராங்பர்ட்'டிலிருந்து நியூயார்க் சென்று கொண்டிருந்தது 'லுப்தான்ஸா 404' விமானம். அதிலே ஸ்ரீமதி ஹெல்கா ஹெர்ஜாக் என்ற ஒரு விவசாயியின் மனைவியும் இருந்தாள்.

விமானமோ 35000 அடி உயரே நியூ பவுன்லாந்து மேலே பறந்து கொண்டிருந்தது. நேரம் பிற்பகல் இரண்டு மணி இருக்கும். அந்தப் பெண்ணுக்கு இடுப்பு வலி காண ஆரம்பித்து விட்டது.

ஆனால் விமானத்தில் மருத்துவரோ அல்லது மருத்துவப் பணியாளோ ஒருவரும் இல்லை. இதனை அறிந்த அந்த விமான ஓட்டி (காப்டன்) உடனே நூறு மைல் தொலைவில் மற்றொரு 'லுப்தான்ஸா' விமானம் பறந்து செல்வது நினைவுக்கு வந்தவுடன் செய்தி அனுப்பினார் அதற்கு. அந்த விமானம் ம்யூனிச்சிலிருந்து நியூயார்க் சென்று கொண்டிருந்தது.

தற்செயலாக அந்த விமானத்தில் டாக்டர் ஹெர்பர்ட் என்ற மருத்துவ நிபுணர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் விமான ஓட்டியின் அருகிலேயே அமர்ந்து இந்த விமானத்தில் உள்ள விமானப் பணிப் பெண்ணுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினாராம்.

குழந்தையும் பிறந்தது. சுகப் பிரசவம்தான். அந்தக் குழந்தை சிறுமியாக வளர்ந்து பள்ளியில் சேர்க்கையில் விண்ணப்பத் தாளில் பிறந்த ஊர் என்பதற்கு என்ன எழுதுவாள்? அக்ஷரேகை 49.35 டிகிரிகள் வடக்கே தீர்க்கரேகை 64.4 டிகிரி மேற்கே என்றுதான்!


ஆதாரம்: ஜெர்மன் நியூஸ் வீக்லி
தகவல்: ஒய். வி. விஸ்வேஸ்வரன்



பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஜனாதிபதி அவர்கள் நாட்டின் ஒவ்வொரு சாதாரண பிரஜையும் தம்மைச் சந்தித்துக் குறைகளைத் தெரிவிக்க அனுமதிக்கின்றார். அவர்கள் இருவரும் பேசும் பொழுது எந்த அதிகாரியும் குறுக்கிட முடியாது. ஜனாதிபதியிடம் என்ன பேசப் போகிறோம் என்று முன் கூட்டியே யாரிடமும் தெரிவிக்க வேண்டிய அவசியமும் கிடையாது. வேலை நாடி வரும் இளைஞன், ஓய்வு காலப் பணம் பெறுவதில் தாமதம் என்று வரும் வயோதிகர், பையனுக்கு அட்மிஷன் நாடி வரும் தந்தை, ஜீவனாம்சம் தேடி வரும் மனைவி, அனைவரையும் அன்புடன் இருக்கச் சொல்லி அவர்கள் கூறுவதைக் கேட்டு அதற்கு ஆவன செய்கின்றார். இப்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குறைந்தது 7000 நபர்களுக்கு மேல் ஜனாதிபதியைக் கண்டு செல்கின்றனர்.

ஆரம்பப் பள்ளியில் இடம் கிடைக்காத நண்பர்கள் உடனே கிராண்ட் டிரங்கில் 'ரிசர்வ்' செய்துவிடாதீர்கள், ஜனாதிபதியைப் பார்க்க. இது நடந்து வருவது பிலிப்பைன்ஸில்!

— சாந்தா பத்மநாபன்



கவியின் நோக்கில் கலைமகள்

புகழேந்தி

வெள்ளைத் தாமரையி லமர்ந்திருப்பா ளவள்
வீணையைக் கைகளில் கொண்டிருப் பாள்!
கள்ளைத்தீர்க் கலைச் சுவையினைக் கனிவுடன்
கவியின் நாவினில் நின்றளிப் பாள்!

தும்பைப் பூவண்ண மேகலைகட்டி நல்ல
தூய்மைக் கனிகல னுகந்திடு பாள்!
எம்பிமனம் எங்கு சென்றிடினும் - அவள்
ஏணியைப் போலவே தாங்கிநிற் பாள்!

கன்னமினாச் சிறுஉள்ளங் கனில வள்
கவிப்பொழி சூடி கொண்டிருப் பாள்!
வெள்ளமெனப் பெருக் கெடுத்திடக் கற்பனை
வேகத்தில் பாய்ந்து நடம்புரி வாள்!

செல்வம் தழைத்திடச் செய்திடுவா ளவள்
சேமமாய் வாழவே துணைபுரி வாள்!
அல்லலைப் போக்கியே அன்பினைக் கொட்டி
அரைக்கணத் தேயருஞ் செயல் முடிப்பாள்!

நல்லது செய்திடில் நானிலம் போற்றிட
நல்லருள் புரிந் துயர்த்திடு வாள்!
அல்லது செய்திடில் ஆவேசம் கொண்டுடன்
அழித்துக் கோபத்தால் தீர்த்திடு வாள்!!



டயருக்குள் ட்யூப்

என் ஊர் கள்ளிப்பட்டி. இங்கு கிருபானந்தவாரி யார் வந்தார். பள்ளியில் படிக்கும் சிறுவர்களும் சிறுமியர்களுமே கூட்டத்தில் முன்னால் அமர்ந்திருந் தனர். ஆகவே வாரியார் மிகப் பெரிய தத்துவங்களை யெல்லாம் சின்னச் சின்னக் கதைகள் மூலம் விளக்கிச் சிரிக்க வைத்தார். ஓர் இடத்தில், ''இது ஆடை. ஆடைக்குள் உடம்பு. உடம்புக்குள் உயிர். உயிருக் குள்ளே இறைவன். உயிரைக் கண்ணால் பார்க்க முடி யுமா? ஆகவே இறைவனையும் கண்ணால் பார்க்க முடி யாது'' என்று சொல்லி, ''இது விளங்குகிறதா?'' என்று ஒரு மாணவனைக் கேட்டார். அவன் எழுந்து விளங்கவில்லை என்றான். ''விளங்கவில்லையா? சரி. இப்படிச் சொல்கிறேன்'' என்றார். ''சைக்கிள் சக்க ரம். சக்கரத்தில் டயர், டயருக்குள்ளே ட்யூப். ட்யூபுக்குள்ளே காற்று. காற்றைக் கண்ணால் பார்க்க முடியுமா? அதுபோல இறைவனையும்...'' என்று சொல்லி நிறுத்தினார். கூட்டத்தின் சந்தோஷ ஆர வாரம் அடங்க ஐந்து நிமிடங்கள் பிடித்தது.


கே. ஆர். ஜெயந்திநாதன்

சினிமாவும் 'சுக்லாம்பரதரமும்'

சினிமாவுக்கும் சுக்லாம்பரதரத்துக்கும் என்ன சம்பந்தமா? சம்பந்தம் இருக்கிறது. மைசூர் ராஜ் யம் ஹுன்சூர் நகரிலுள்ள ஒரு தியேட்டரில் தினசரி முதல் காட்சி 'சுக்லாம்பரதரம்' குட்டிக் கொண்டு தான் ஆரம்பமாகின்றது. ஆமாம்! 'சுக்லாம்பர தரம்' என்று தொடங்கும் பாடலை இசைத்தட்டில் போட்டுவிட்டுத்தான் காட்சிகளை ஆரம்பிக்கிறார்கள்!



பிரிட்டிஷ் பாராளுமன்ற விநோதங்கள்!



★ பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஒரு தனி அறையில் நூற்றுக் கணக்கில் மூளைகள் அடிக்கப்பட்டு ஒவ்வொரு மூளையிலும் சிவப்பு நாடா வளைத்துக் கட்டப்பட்டிருக்கும். முன் காலத்தில் பாராளு மன்றத்துக்கு வரும் உறுப்பினர்கள் வாள் போன்ற கருவிகளுடன் வருவார்கள். விவாதம் முற்றும்போது சில சமயங்களில் சல சலப்பு ஏற்படும். இதனால் போர்க் கருவிகளைத் தனியே ஓர் அறை யில் வைக்க விதி செய்யப்பட்டது. அதை இன்றும் அப்படியே பாதுகாத்து வருகின்றனர்.

★ இன்றும் பாராளுமன்றக் கூட்டம் நடப்பதானால் ஒரு சிறு காவலர் கூட்டம் எரியாத விளக்குகளைத் தூக்கிக்கொண்டு கீழ்ப்புற அறைகளைச் சோதனை இடுகின்றனர். யாரும் இருக்க மாட்டார்கள் என்று தெரிந்தாலும், பழக்கத்தின் காரணமாக இதைச் செய்கின்ற னர். காரணம் 1605ம் ஆண்டில் ஒருவன் பாராளுமன்றத்தை வெடியினால் தகர்க்க வெடியுடன் கீழ்ப்புற அறையில் பதுங்கியிருந்து பிடிபட்டான். அதுமுதல் இந்த ஏற்பாடு.





★ மன்றக் கூட்டங்கள் நடக்கும்போது வெளிச்சம் போதவில்லையெனில் ஒருவர் எழுந்து மன்றத் தலைவரை, ''தயவு செய்து மெழுகுவர்த்திகளை வரவழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என்பார். ஆனால் அதிகப்படி யாக ஓரிரு மின்சார விளக்குகள் போடப்படும். ஆனால் அவர் மெழுகு வர்த்தியைத்தான் கேட்பார்!

— சரவணன்


போர்முனையில் உண்மைக்கதை
கேம்கரான் நகர் போர்முனையில் ஹவல்தார் அப்துல் ஹமீத் மூன்று பாகிஸ்தான் பாட்டன் டாங்குகள் வருவதைக் கண்டார்.
இதோ எதிரிகள் டாங்கிகளில் வருகிறார்கள். நான் ஏதாவது தந்திரம் செய்து அவர்கள் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்!
ஆம்! ஜீப்பில் டாங்கிகளுக்குத் துப்பாக்கி பாய்ந்து சுட வேண்டியது தான்!
மூன்று டாங்கிகளை அழித்த ஹமீதை நாலாவது டாங்கி சுட்டு வீழ்த்தியது.
நாட்டுக்காக வீர மரணமெய்திய ஹவல்தார் அப்துல் ஹமீதுக்குப் பரம வீர் சக்கரம் இந்திய சர்க்கார் வழங்கியுள்ளனர்.
அமரர் ஹமீது!

புத்தக உலகம் - லஞ்சம் வாங்காதவர்!

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு பெரிய அதிகாரி இருந்தார்.

அவர் இலஞ்சமே வாங்க மாட்டார்.

அவர் மற்றவர்களை இலஞ்சம் வாங்க விட மாட்டார்.

அவர் தமது உற்றார் உறவினர்களையோ, மிகவும் வேண்டியவர்களையோ அரசாங்கப் பதவிகளுக்கு நியமிக்க மாட்டார்.

அவர், அவர்களுக்கு அரசாங்க சம்பந்தப்பட்ட எந்த வித உதவியும் செய்ய மாட்டார். அவர்களாக உதவி பெற்றால் தாம் தலையிட்டு அந்த உதவி அளிக்காமல் செய்து விடுவார்.

ஓர் அதிகாரியைப் பற்றிய இந்த விவரங்கள் ஒரு கட்டுக்கதையில் வருவன போலிருக்கின்றன அல்லவா? ஆனால், உண்மையில் அப்படிப்பட்ட மனிதர் ஒருவர் இருந்தார்; அதுவும் சில வருஷங்களுக்கு முன்னரேயே.



பிலிப்பைன்ஸ் குடியரசு ஜனாதிபதியா யிருந்த ரமான் மக்ஸேஸே அவர்களின் வாழ்க்கையைப் பற்றி கார்லஸ் ரொமுலோவும், மார்வின் கிரேயும் 'மக்ஸேஸேயின் கதை' என்ற தலைப்புடன் எழுதியுள்ளது ஒரு கதையைப் போலவே அமைந்திருக்கிறது.

ஒரு விவசாயத் தொழிலாளியாயிருந்த மக்ஸேஸே தமது இடைவிடா உழைப்பினாலும், தேசாபிமானத்தாலும், வீர தீரச் செயல்களினாலும், ஏழை மக்களிடம் கொண்டிருந்த மட்டற்ற அபிமானத்தினாலும் தலைமைப் பதவியை அடைந்ததைப் பற்றிய விவரங்கள் "புத்தகத்தில் தரப்பட்டி

பிலிப்பைன்ஸ் குடியரசு திட்டத்தட்ட அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசு முறையில் அமைக்கப்பட்டதாகும். குய்ரினோ என்பவர் அதன் ஜனாதிபதியா யிருந்தபோது நடந்த பொதுஜனத் தேர்தலில் 1953ல் மக்ஸேஸே அவருக்குப் போட்டியாக நின்று வெற்றி பெற்றார்.

ஜனாதிபதி வசிக்கும் அரண்மனைக்கு மாலக்கனும் என்று பெயர். புது ஜனாதிபதி பதவி ஏற்பதற்கு முன்னால் அந்த அரண்மனைக்குச் செல்ல வேண்டும். அங்கே போய்ப் பழைய ஜனாதிபதியைப் பதவி ஏற்கும் பிரமாணம் செய்யுமிடத்துக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும். இருவரும் ஒரே வண்டியில் அப்படிச் செல்வது சம்பிரதாயம்.

மக்ஸேஸேயிடம் 1918ம் வருடத்திய போர்டு 'டி மாடல்' வண்டி இருந்தது. அதில் அவர் ஏறிச் செல்ல விரும்பினார். ஆனால் அது பழுதாயிருந்ததால், வேறு ஒரு பழைய போர்டு மோட்டார் வண்டி வேண்டுமென்றார். பலர் ஊர்களெல்லாம் சுற்றி ஒரு வண்டியைப் பிடித்து வந்தனர். அதற்கு மேல் மூடி கிடையாது. ஜனாதிபதியாக வரப் போகிறவர் அதில் ஏறி லட்சக்கணக்கான மக்கள் பின்தொடர அரசாங்க மாளிகைக்குச் சென்றார்.

மாலக்கனும் ஓர் அழகான மாளிகை. அதில் வசித்து வந்த ஜனாதிபதி குய்ரினோ ஒரு மகாராஜாவைப்போல் ஆடம்பரமாக வாழ்பவர். அவர் ஜனாதிபதிகளுக்கென்று விடப்பட்டிருந்த முதல்தரமான கிறிஸ்லர் மோட்டார் வண்டியில்தான் செல்வது வழக்கம்.

அவர் மாக்ஸேஸேயை வரவேற்பதற்காக அரண்மனையின் வாசற்பக்கம் வந்தபோது புதிய ஜனாதிபதி பழைய போர்டு வண்டியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்துத் திகைத்துப் போய்விட்டார். பிறகு மாக்ஸேஸேயைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு கிறிஸ்லர் வண்டியில் ஏறச் செய்தாராம்.

மக்ஸேஸே எந்தக் காரியத்தையும் தாமாகச் செய்து பழக்கமுள்ளவர். டெலிபோனில் யாரையாவது கூப்பிட வேண்டுமானால், 'எக்ஸ்சேஞ்ச' குமாஸ்தாவைக் கூப்பிட்டுக் கொண்டிருப்பதில்லை. தாமாக நேராகவே 'டயல்' செய்வார். சில சமயங்களில் டெலிபோன் காரியாலயத்துக்குப் போன் செய்யும்போது குமாஸ்தாக்கள் சரிவரப் பதில் சொல்ல மாட்டார்கள். அப்போது "நான்தான் ஜனாதிபதி பேசுகிறேன்" என்பார்.

ஜனாதிபதி மாளிகையில் ஓர் அறையிலிருந்து இன்னொரு அறைக்குச் செல்லும்போது சேவகர்கள் கதவைத் திறப்பது வழக்கம். மக்ஸேஸே அதற்காகக் காத்துக் கொண்டிருப்பதில்லை. தாமாகவே படார் என்று கதவைத் திறந்து கொண்டு போவார். அப்படிச் செய்யும்போது ஒரொரு சமயம் கதவுக்கு வெளியே தூங்கி வழிந்து கொண்டிருக்கும் சேவகர்களைக் கதவு தாக்கும்.

அவரது காரியதரிசிகள், அவர் தாமே கதவைத் திறந்து கொள்ள வேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். ஒரு நாள் மாளிகையில் ஓர் அறையின் கதவு

படார் படார் என்று அடிக்கப்படும் சப்தம் கேட்டது. காரியதரிசிகள் ஓடிவந்து பார்த்தார்கள். மக்ஸேஸே உட்புறமிருந்து கதவைப் பலமாகத் தட்டிக் கொண்டிருந்தார். ஏனெனில் சேவகன் எங்கேயோ போய் விட்டான். தாமாகவே கதவைத் திறந்து கொள்ளக் கூடாது என்ற சம்பிரதாயத்தைப் பின்பற்றுவதற்காக அவர் அப்படிச் செய்தாராம்.

பதவி ஏற்ற பிறகு நமது பழைய போர்டு மோட்டார் வண்டியைத் தாமே ஓட்டிக் கொண்டு போவார். அப்போது தலைமயிரை கிராப் செய்து கொள்ள வேண்டுமென்று தோன்றினால் வழியில் தம் கண்ணில் முதலில் படும் சலூனுக்குச் சென்று கிராப் செய்து கொள்வார். ஸலூன் எவ்வளவு சிறியதாயிருந்தாலும் அதைப் பற்றி அவர் லட்சியம் செய்வதில்லை.

லஞ்சம் வாங்குவதெப்படி? லஞ்சம் கொடுப்பது எப்படி? அரசியல் தலைவர்களும், அரசாங்க 'காண்ட்ராக்டு'கள் பெறுவதெப்படி? அவர்களும், அரசாங்க அதிகாரிகளும் தங்கள் தங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் உத்தியோகங்களில் வைப்பதெப்படி? இவையெல்லாம் ஜனாதிபதி குய்ரினோவின் நிர்வாகத்தின் கீழ் ஒரு கலை அந்தஸ்தை அடைந்துவிட்டிருந்தன. பிலிப்பைன்ஸ் குடியரசில் லஞ்ச மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. மக்ஸேஸே இந்த நிலைமையை அடியோடு மாற்றத் தீர்மானித்தார்.

அவர் பதவி ஏற்ற மாத்திரத்தில் பொது ஜனங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். "என்னுடைய பிறந்த தினமன்றோ, கிறிஸ்துமஸ் பண்டிகையின்போதோ மற்ற விசேஷ தினங்களின்போதோ என் குடும்பத்தினரைத் தவிர வேறு யாரும் எனக்கு எதுவும் கொடுக்கக்கூடாது. நீங்கள் உண்மையிலேயே என்னைத் திருப்திப்படுத்த விரும்பினால் எனக்காகச் செலவிடும் பணத்தை ஏழைகளுக்காகச் செலவிடுங்கள்!"

இது வேண்டுகோள் என்று பெயரே தவிர உண்மையில் ஓர் அரசாங்க உத்தரவு மாதிரிதான்.

மக்ஸேஸே சட்ட சபை அங்கத்தினராயிருந்த போது, "எல்லா அங்கத்தினர்களும், அரசாங்க அதிகாரிகளும் தங்கள் சொத்தைப் பற்றிய தகவல்களை எழுதித் தரவேண்டும்" என்று கட்டாயப்படுத்தும் ஒரு மசோதா கொண்டு வந்தார். ஆனால், அதை யாரும் ஆதரித்து வோட் செய்யவில்லை.

அவர் பதவி ஏற்ற சில தினங்களுள் அந்த மசோதாவை அவரே சட்டமாக்கி உத்தரவு பிறப்பித்தார். அவர் முதன் முதலாகத் தமது சொத்துக்களைப் பற்றிய விவரமான ஜாபிதாவைத் தாக்கல் செய்தார்.

அதிகாரிகளின் லஞ்ச ஊழல் புகார்களைப் பற்றிய புகார்களை அவர் தாமே நேரில் விசாரிக்கத் தொடங்கினார்.

அவருக்குக் குடும்பம், உறவினர் என்றால் பிராணன். ஆனால், அதற்காக அவர்கள் யாருக்கும் தாம் ஜனாதிபதி என்ற முறையில் உதவி செய்ய மறுத்தார். அது மட்டுமல்ல. அவர்களாகச் சொந்த முறையில் ஏதாவது அரசாங்கச் சலுகை பெறுவதையும் தடுத்துவிட்டார்.

அவர் தம்பி ஒரு வக்கீல். ஆனால் அரசாங்க சம்பந்தப்பட்ட எந்த வழக்கிலும் அதன் சார்பிலோ, அல்லது அதற்கு எதிராகவோ ஆஜராகக் கூடாது என்றார்.

அவர் சிறிய தந்தை அம்பிரோஸ் மக்ஸேஸே என்பவர் ஒரு ஸிமெண்ட் வியாபாரி. அவர் எத்தனையோ வருஷ காலமாக அந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர். பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துக்குச் சொந்தமாக ஸெபு-போர்ட்லண்டு ஸிமெண்ட் கம்பெனி என்று ஒரு கம்பெனியின் காண்டிராக்ட் ஒன்று அம்ப்ரோஸுக்குக் கிடைத்தது. மக்ஸேஸே ஜனாதிபதியாயில்லாதிருந்தாலும் கூட அது அவருக்குக் கிடைத்திருக்கும். ஆனால் ஜனாதிபதி அந்தக் காண்டிராக்ட் அளித்த உத்தரவை ரத்து செய்துவிட்டார்.

தமது சிறிய தந்தை எத்தனையோ சொல்லிப் பார்த்தும் ஜனாதிபதி கேட்கவில்லை.

அவர் இதேபோல் அரசாங்க ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதிலும் கவனஞ் செலுத்தினார். ஒரு சமயம் அவர் ஸாமர் என்ற ஊருக்குச் சென்றிருந்தபோது பிரசவிக்கவிருந்த ஒரு வாலிப ஸ்திரீ தக்க வைத்திய உதவி இல்லாமல் இறந்துவிட்டாளென்று கேள்விப்பட்டார்.

"ஸாமரில் அரசாங்க வைத்தியர் யாருமில்லையா?" என்று விசாரித்தார்.

"இருக்கிறார்" என்று பதில் வந்தது.

"இந்த ஸ்திரீ வைத்தியசாலைக்கு வந்த போது அவர் எங்கிருந்தார்?" என்று கேட்டார் மக்ஸேஸே.

"அவர் மனிலாவுக்குச் சென்றிருந்தார்."

"எதற்காக?"

"தங்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் கலந்து கொள்வதற்காக."

மக்ஸேஸே மிகவும் கோபமடைந்தார். மறு நிமிஷம் ஓர் உத்தரவு கிளம்பியது. "எந்த அரசாங்க ஊழியரும் தமது காரியாலயத்தை விட்டு அரசாங்கக் காரியங்களுக்கன்றி வேறு எதற்கும் செல்லக்கூடாது!" என்பதுதான் அந்த உத்தரவு. "இது என்னையும் கட்டுப்படுத்தும்" என்று கூறினார்.

பிலிப்பினோவாசிகளுக்குக் குறித்த காலப்படி நடந்துகொள்ளும் கெட்ட வழக்கம் கிடையாது! நமது தேச அரசியல் தலைவர்கள் பலரைப் போல மக்ஸேஸேயின் அகராதியில் எட்டு மணி என்றால் எட்டு அடித்து ஒரு நிமிஷம் என்று அர்த்தமல்ல. அவர் அப்படிக் காலந் தவறாமல் நடந்து கொண்டு மற்றவர்களையும் அப்படி நடக்கச் செய்தார். அந்த ஊர்க்காரர்கள் பின்வருமாறு பேசிக்கொள்வது வழக்கமாம்:

"நாளை ஒன்பது மணிக்குக் கட்டாயம் வந்துவிடு."

"பிலிப்பினோ நேரப்படியா, மக்ஸேஸே நேரப்படியா?"

'மக்ஸேஸே நேரம்' என்றால் சரியாக ஒன்பது மணி என்று அர்த்தம்.

இரும்பு மனிதன்

அநாயாசமாகவும், அலட்சியமாகவும் போலி வேஷம் போட்டு ஆயிரக்கணக்கில் பணத்தை வாரிச் சுருட்டிய பெருமை கவுண்ட் விக்டர் லஸ்டிக் என்னும் ஆசாமியைச் சேரும். பேச்சின் நயத்தாலேயே எதிராளியை வசீகரப்படுத்தி அவர்களாகவே பணத்தை எடுத்துக் கொடுக்க வைக்கும் சாமர்த்தியசாலி. பாரிஸ் நகரில் உள்ள பிரும்மாண்டமான கலைச் சின்னமான, எஃபில் எஃகுக் கோபுரத்தை இரண்டு தடவைகள் விற்றவன் என்ற தனிப் புகழைப் பெற்றவன் விக்டர் லஸ்டிக்.

நுணுக்கம் தெரிந்த சூதாடியாக வாழ்க்கையை ஆரம்பித்த விக்டர், சில்லறை மோசடிகளில் பங்கு கொண்டு, இருபத்தி ஐயாயிரம் டாலர் பெறுமான அமெரிக்க சர்க்கார் பத்திரங்களுக்குச் சொந்தக்காரனானான். அதை முதலாக வைத்துக் கொண்டு தன்னுடைய வாசாலக வியாபாரப் பெருக்கத்தைத் தொடங்கினான்.

அமெரிக்காவில் கான்ஸாஸ் பகுதியில் சலீனா என்னும் ஊரில் உள்ள சேமிப்பு பாங்கி நிறுவனம் ஒன்று உபயோகமில்லாத 'மார்ஸ்டன் ஃபாம்' என்ற சொத்தை அடமானமாக ஏற்றுக் கொண்டு கடன் கொடுத்திருந்தது. கடன் வாங்கிய நபர், பணம் கொடுக்க முடியாத நிலையில் அந்தச் சொத்து பாங்கியைச் சேர்ந்து விட்டது. அந்தப் பாங்கி நிர்வாகி டார்மட் கிரீன் என்பவர், எப்படியாவது அந்தப் பண்ணையை மலிவாகவாவது தள்ளிவிட்டுப் பாங்கிக்கான நஷ்டத்தைக் குறைக்க வேண்டும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய ரகசியமான இந்தக் கவலை பற்றி எப்படியோ தகவல் கிடைத்த விக்டர் லஸ்டிக் 1924ம் ஆண்டில் ஒரு நாள் சலீனா நகருக்கு வந்து சேர்ந்தான்.

அவனுடைய அதி நாகரிக ஆடை, மேதாவி போன்ற பேச்சு, வெளிநாட்டு உச்சரிப்பு எல்லாம் சேர்ந்து டார்மட் கிரீனைப் பிரமிப்புக்குள்ளாக்கின. அந்த ஆசாமி எதற்காக வந்திருக்கிறான் என்று தெரியாத பாங்கி நிர்வாகி, ''தங்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்யக் காத்திருக்கிறேன்'' என்றார் உபசரிப்பாக.

''உங்கள் முன்னால் அமர்ந்திருப்பவன், உலக யுத்தத்தின் விளைவாக ஐரோப்பாவிலிருந்து குடி பெயர்ந்து சொத்து சுதந்திரங்களை யெல்லாம் ஓரளவு காசாக்கிக் கொண்டு இங்கு புது வாழ்வு தொடங்க வந்துள்ள நிலப் பிரபு. இந்த வட்டாரத்தில் உங்கள் பாங்கியின் ஆதீனத்தில் உள்ள 'மார்ஸ்டன்





புகழ் பெற்ற போலிகள்

ஃபாமைப் பற்றிக் கேள்விப்பட்டேன். இங்கு வந்து அதைச் சுற்றிப் பார்த்தேன். எனக்குப் பிடித்திருக்கிறது. சரியான விலைக்குக் கிடைத்தால் அதை வாங்கிப் போடலாம் என்று உத்தேசம்'' என்று விக்டர் லஸ்டிக் ஆரம்பித்தான்.

பாங்கி நிர்வாகிக்கு உள்ளூறப் பரமானந்தம். ''ஆஹா! நியாயமான விலைக்கு உங்களுக்கு அது கிடைக்கும்'' என்று சொல்லிவிட்டு ஆவலுடன் பதிலுக்குக் காத்திருந்தார்.

''ஆஸ்திரியா நாட்டிலிருந்து என்னுடன் கொண்டு வந்த குடும்ப நகைகளை, இங்கு வந்தவுடன் பணமாக மாற்றி அவைகளை உங்கள் நாட்டு சர்க்கார் கடன் பத்திரங்களாக மாற்றி வைத்தேன். இதோ இந்தக் கவரில் இருபத்தி ஐயாயிரம் டாலர் பெறுமான பத்திரங்கள் இருக்கின்றன. இதற்கு 'மார்ஸ்டன் ஃபாம்' எனக்குக் கிடைக்குமா?'' என்று கேட்டுக் கொண்டே அலட்சியமாக விக்டர் தன் கோட்டுப் பாக்கெட்டிலிருந்த கவரை எடுத்து டார்மட் கிரீன் முன்னால் போட்டான்.

பாங்கிக்காரர் அந்தக் கவரில் கண்ணோட்டம் விட்டார். எல்லாம் அசல் சர்க்கார் பத்திரங்கள். அடமானத்தில் மூழ்கிய அந்தச் சொத்துக்கு இருபத்தி ஐயாயிரம் டாலர் கிடைத்தால் பாங்குக்குக் கொள்ளை லாபம் என்று மனக் கணக்குப் போட்டார். ''இந்தத் தொகைக்கு அந்தச் சொத்து உங்களுக்குக் கிடைக்கும்'' என்றார் அழுத்தலாக.


விக்டர் அந்தப் பத்திரக் கவரைப் பத்திரமாக எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். ''மகிழ்ச்சி! நாளைப் பகலில் இந்த விற்பனை சம்பந்தமாக உங்கள் தஸ்தாவேஜுகளைத் தயாரித்துக் கொண்டு நான் தங்கியிருக்கும் ஹோட்டல் அறைக்கு வாருங்கள். இன்னொரு சின்ன விஷயம். என்னிடம் மேலும் இருபத்தி ஐயாயிரம் டாலர் பெறுமான சர்க்கார் பத்திரங்கள் இருக்கின்றன. இதைப் பணமாக மாற்றி வைத்துக் கொண்டால்தான் உடனடியாக வாங்கவிருக்கும் சொத்துக்களைச் சீர்ப்படுத்தி அபிவிருத்தி செய்ய முடியும். ஆகையால் நீங்கள் குறிப்பிட்ட தஸ்தாவேஜுகளைக் கொண்டு வரும்போது இருபத்தி ஐயாயிரத்துக்குச் சில்லறை டாலர் நோட்டுக்கள் கொண்டுவர முடியுமா?'' என்று கேட்டான்.

டார்மட் கிரீன் மதிப்பில் விக்டர் இப்போது மேலும் உயர்ந்து விட்டான். ''அப்படியே செய்கிறேன்'' என்று பெருமையுடன் பதிலளித்து விக்டருக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

மறுநாள் டார்மட் கிரீனும் அவருடைய சக நிர்வாகியும் விக்டரைச் சந்திக்க ஓட்டல் அறைக்கு வந்தார்கள். கையில் இருபத்தி ஐயாயிரம் டாலர் நோட்டுக்களும் சொத்து விற்பனை தஸ்தாவேஜியும் அவர்களிடம் தயாராக இருந்தன. அவர்களை உட்கார வைத்துவிட்டு விக்டர் அலட்சியமாக மேஜை டிராயரைத் திறந்தான். ஒரு பெரிய கவரை எடுத்து ஓரத்தில் கிழித்தான். ''ஐம்பதினாயிரத்துக்கான பத்திரங்களை எடுத்து எண்ணி வைத்திருக்கிறேன்'' என்று அலட்சியமாகச் சொல்லி டிராயரை மூடினான். ''எங்கள் தேசத்தில் இந்த விதமான வியாபாரத்தை ஒரு சிறிய கொண்டாட்டத்துடன்தான் முடிப்போம்! உங்களுக்கு ஆட்சேபனை இருக்காது என்று நம்புகிறேன்'' என்று சொல்லி, பானங்களைப் பாட்டில்களிலிருந்து தாராளமாக ஊற்றி வழங்கினான். பாங்கி நிர்வாகிகளுக்கு அவன் ஒரு பிறவிப் பணக்காரன் மாத்திரம் அல்ல, ஒரு கனவானும்கூட என்ற எண்ணம் எழுந்தது. இந்த பானக் கொண்டாட்டம் முடிந்தவுடன் பாங்கிக்காரர்கள் தாங்கள் கொண்டு வந்த தஸ்தாவேஜிகளையும், இருபத்தி ஐயாயிரம் டாலர் நோட்டுக்களையும் விக்டரிடம் கொடுத்தார்கள். விக்டர் அலட்சியமாக மேஜை டிராயரைத் திறந்து பத்திரக் கவரை எடுத்துக் கொடுத்தான். டார்மட் கிரீன் அதை அப்படியே கோட் பையில் போட்டுக் கொண்டு கிளம்பினார். முதல் நாள் அவர் கைப்படத் தொட்டு இருபத்தி ஐயாயிரம் நோட்டுக்களை எண்ணியிருக்கிறார். மேலும் ஓர் அசல் கனவான் முன் எண்ணிப் பார்ப்பது கௌரவக் குறைவு அல்லவா?

பாங்கிக் கட்டிடத்துக்குத் திரும்பிப் பையிலிருந்த கவரைத் திறந்து பத்திரங்களை எண்ண நினைத்தபோதுதான் டார்மட் கிரீனின் முகம் பேயறைந்தது போல் மாறியது. கவருக்குள் இருந்தவையெல்லாம் அழகாகக் கத்தரித்து வைக்கப்பட்ட தினசரி செய்தித் தாள்கள்! கிரீன் விழுந்தடித்துக் கொண்டு ஓட்டல் அறைக்கு ஓடினார். அறை காலி. விக்டர் பெட்டி படுக்கைகளுடன் அந்தர்தியானமாகி யிருந்தான்.

கையிலிருந்த முதலை இந்த விதத்தில் இரட்டைப் பங்காக்கிக் கொண்டு தலைமறைவான விக்டரைச் சில நாட்களில் பாங்கிக்காரர்கள் கொடுத்த புகார் மீது போலீசார் பிடித்துவிட்டார்கள். விசாரணைக்கு அவனை விலங்கிட்டு, பாங்கியின் வக்கீலும், துப்பறிபவர் ஒருவரும் ரயிலில் அழைத்துச் சென்றார்கள். விக்டர் கொஞ்சம் கூட மனம் தளரவில்லை. கூட வந்த எதிர்த்தரப்பு வக்கீலிடம், 'ஐயா! நீங்கள் தாராளமாக என்மீது வழக்கு தொடரலாம். பத்திரிகைகளிலெல்லாம் என் பெயர் அடிபடும். கூடவே உங்கள் பாங்கியின் பெயரும் அடிபடும். இவ்வளவு சுலபமாக, எளிதாக ஒரு பாங்கி ஒரு தனி நபரிடம் ஏமாந்து போய்விட்டதே என்று எல்லோரும் சிரிப்பார்கள். அப்புறம் பாங்கியில் யார் நம்பிப் பணம் போடுவார்கள்? இதையெல்லாம் யோசித்தீர்களா?'' என்றான். வக்கீலுக்கு அவன் வாதம் சரியானதென்று பட்டது. பாங்கி நிர்வாகிகளிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொன்னார் வக்கீல். பாங்கிக்காரர்கள் பயந்து போய்விட்டார்கள். வழக்கை வாபஸ் வாங்க முனைந்தார்கள். ஆனால் விக்டர் சும்மா இருக்கவில்லை. தன்னை விலங்கிட்டு விசாரணை நடக்கும் ஊருக்கு அழைத்து வந்ததற்காக பாங்கியின் மீது ஆயிரம் டாலருக்கு நஷ்டஈடு கோரி வழக்குப் போடப் போவதாக அறிவித்தான். அப்போது பாங்கி ஏமாந்தது பற்றிய செய்திகளும்


உங்கள் கண்பார்வைக்கு பாதுகாப்பு
பெற இதை உபயோகியுங்கள்
பஜாஜ் ஸ்பாட்லைட்
பல்புகள்
கண்ணைக்கூசாத, துல்லியமான
வெளிச்சத்திற்கு
bajaj
230V
bajaj
MADE IN INDIA
பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
பஜாஜ்
heros'BE-229 TM

வெளியாகும் என்று மிரட்டினான். அவன் வாயை அடைக்க அந்த பாங்கி, ஏற்கனவே இழந்த இருபத்தி ஐயாயிரத்துக்குத் துணையாக மேலும் ஆயிரம் டாலரையும் கொடுத்தது!

இந்த வகையில் மேலும் பல சாகஸ மோசடிகளைச் செய்துவிட்டு விக்டர் லஸ்டிக் பாரிஸ் நகருக்கு வந்து சேர்ந்தான். பாரிஸில் அவனுக்கு ஒரு கூட்டாளியும் கூட. டேப்பர் டான் என்பது அந்தக் கூட்டாளியின் பெயர். இருவருமாக 'உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்ற ரீதியில் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தார்கள். பத்திரிகைகளில் யதேச்சையாக வெளியான செய்தி ஒன்று அவர்கள் உதவிக்கு வந்தது.

'பிரசித்திபெற்ற பாரிஸ் எஃபில் எஃகு கோபுரத்துக்குச் சிறு ரிப்பேர்கள் செய்ய தற்கே ஆயிரக் கணக்கான பிராங்குகள் செலவாகிறதென்றும், அந்தக் கோபுரத்தையே பிரித்து இரும்பாக விற்றுவிடுவது சர்க்காருக்குச் சாதகமா யிருக்கும்' என்றும் யாரோ எழுதியிருந்தார்கள்.

இதைப் படித்த விக்டர் தன் கூட்டாளி டேப்பர் டானிடம் ''இந்தக் கோபுரத்தை நாமே சர்க்காருக்குப் பதிலாக விற்றுவிடலாம்'' என்றான் அலட்சியமாக. டேப்பர் டானுக்கு தன் நண்பன் ஏதோ பைத்தியக்காரத்தனமாக உளறுவது போலத்தான் தோன்றியது. ஆனால் சீக்கிரமே அவன் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அவனையே வியப்பிலாழ்த்தின.

சில நாட்கள் கழித்துப் பாரிஸ் நகரிலுள்ள ஐந்து பெரிய வியாபாரிகளுக்குச் சர்க்கார் டெபுடி டைரக்டர் ஜெனரலிடமிருந்து தனித் தனியே கடிதங்கள் வந்தன. விக்டர் தான் சர்க்கார் முத்திரையிட்ட கடிதங்களை எப்படியோ தயார் பண்ணி அவைகளை அனுப்பி வைத்தான்.

குறிப்பிட்ட நாளில் ஒரு பிரபல ஹோட்டல் அறையில் அந்த ஐந்து நபர்களும் விக்டரைச் சந்தித்தார்கள். விக்டர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, 'நண்பர்களே! இந்த நாட்டு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும், சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரான எனக்கும் மாத்திரம் தெரிந்த ஒரு மாபெரும் ரகசியத்தை இப்போது உங்களிடம் பகிர்ந்து கொள்ளப் போகிறேன். ஆகையால் விஷயம் முக்கியத்துவம் வாய்ந்தது. 1889ம் ஆண்டில் ஏழு ஆயிரம் டன் உயர்ந்த ரக எஃகைக் கொண்டு எழுபது லட்சம் பிராங்குகளுக்கு மேலாகச் செலவழித்து எழுப்பப்பட்ட நம் எஃபில் கோபுரம் பராமரிப்பு என்ற வகையில் நிறையப் பணத்தை விழுங்குகிறது. அது மாத்திரமல்ல! அந்தக் கோபுரத்தினால் எந்தவிதப் பிரயோசனமுமில்லை. ஆகவே சர்க்கார் அதைப் பிரித்து இரும்பாக விற்கத் தீர்மானித்துவிட்டது. உங்களில் யார் அதிகமான தொகைக்கு டெண்டர் போடுகிறீர்களோ அவர்களுக்கு அந்தக் 'கோபுரத்தைப் பிரித்து எடுத்துப் போகும் உரிமை கிடைக்கும்'' என்றான்.

கூடியிருந்த ஐவரும் இந்த வியாபாரத்தில் எவ்வளவு லாபம் கிடைக்கும் என்று கணக்கிட்டார்கள். குறிப்பிட்ட தேதிக்குள் டெண்டர் அனுப்புவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள். அவர்களில் சற்று ஏமாந்தவரான ஆண்ட்ரீ போஷன் என்பவனை அப்போதே விக்டர் இந்த வியாபாரத்துக்குத் தேர்ந்தெடுத்துவிட்டான் மானசீகமாக.

டெண்டர்கள் ஒழுங்காக வந்தன. டேப்பர் டான் ஆண்டிரீயைச் சந்தித்து அவன் டெண்டர் ஒப்புக் கொள்ளப்பட்டதாகச் சொல்லிப் பணத்துடன் ஓட்டல் அறைக்கு வரச்சொன்னான். இந்தச் சர்க்கார் விவகாரம் ஓட்டல் அறையில் நடப்பது பற்றி ஆண்ட்ரீக்கு ஒருவிதச் சந்தேகம் தோன்றுவதைக் கவனித்த டேப்பர் டான், தன் குருவான விக்டரிடம் சொன்னபோது அதற்கும் ஒரு நாடகமாடத் திட்டமிட்டான் விக்டர்.

ஆண்ட்ரீ பணத்துடன் ஓட்டல் அறைக்கு வந்தபோது விக்டரும் டேப்பர் டானும் இருந்தார்கள். ஆண்ட்ரீயை அமரச் சொல்லிவிட்டு விக்டர், டேப்பர் டானைப் பார்த்து, ''நான் இந்தப் பேரத்தை முடித்துக்கொண்டு சரியாக மூணு மணிக்கு அரசாங்கக் கட்டிடத்தில் உள்ள என் காரியாலயத்துக்கு வந்து விடுவேன். அப்போது கையெழுத்துக்கான இதர பேப்பர்களை எடுத்து வை'' என்று அவனை அனுப்பி வைத்தான். ஆண்ட்ரீ முகத்தில் நம்பிக்கை மலர்வது கண்டு தணிந்த குரலில் 'இந்தப் பேரத்தை நியாயமாக என் காரியாலயத்தில்தான் நடத்த வேண்டும்.. ஆனால் அங்கு நாலு பேர் கூட இருக்கும் போது மனம் திறந்து பேச முடியாது. இந்தப் பேரங்களில் என்போன்றவர்கள் தனிப்பட்ட முறையில் கொஞ்சம் கிம்பளம் எதிர்பார்ப்பது உங்களுக்குத் தெரியும். அதற்காகத்தான் இந்த ஓட்டல் அறை. நாளைக்கு நீங்கள் முடிவான உத்தரவை அங்கே வந்து பெற்றுக் கொள்ளலாம்'' என்றான்.

அப்பாவி ஆண்ட்ரீ அசட்டுச் சிரிப்புடன் 'இது தெரியாதா? உங்களுக்குத் தனிப் பணம் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சொல்லி டெண்டர் தொகையுடன் விக்டருக்கும் தனிப்பட்ட சன்மானம் அளித்தான்.

அன்று இரவே விக்டரும் டேப்பர் டானும் பாரிஸிலிருந்து கிளம்பி அண்டை தேசத்துக்குப் போய்விட்டார்கள். மறுநாள் முதல் பிரஞ்சுச் செய்திகள் வரும் பத்திரிகைகளை உன்னிப்பாய்க் கவனிக்கத் தொடங்கினார்கள். ஆண்ட்ரி போஷன் எஃகுக் கோபுரத்தை விலை பேசிய செய்தி வெளியாகவே இல்லை. பாவம் ஆண்ட்ரீ தான் ஏமாந்ததை வெளியே சொல்ல வெட்கப்பட்டுச் சும்மா இருந்துவிட்டான்!

இதைப் பயன்படுத்திக் கொண்டு விக்டர் மீண்டும் சில நாட்கள் கழித்து அதே கோபுரத்தை வேறு ஆசாமியிடம் விலை பேசிப் பணத்தை அமுக்கினான்.

கடைசியாக அமெரிக்க டாலர் நோட்டுக்களைச் சொந்தத்தில் தயாரித்த குற்றத்திற்காக 1935ம் ஆண்டில் இருபது ஆண்டு தண்டனை பெற்ற கவுண்ட் விக்டர் லஸ்டிக் பன்னிரண்டாவது ஆண்டு சிறைவாசத்தின் போது காலமானான்! திறமையாக மோசடி செய்வதில் அப்புறம் அவனை யாரும் மிஞ்சவில்லை!

— இருவேரகத்தான்

ஆதாரம்: ரீடர்ஸ் டைஜஸ்ட்

வாசுகி உள்ளே நுழைந்தாள். கவர்க் கடிகாரம் ஏழு அடித்தது. ரங்கதுரை படிப்பதாக பாவனை செய்து கொண்டிருந்த செய்தித் தாளை மடித்து மேஜை மேல் வைத்து விட்டுச் சோம்பல் முறித்தான்.

''அப்பாடா! அலுப்பாயிருக்கு வாசுகி. ஏழு மணிக்கே சாப்பிட்டுப் படுத்து விட்டால் தேவலே போல் இருக்கு.'' ஒரு நிமிஷம் நிறுத்திவிட்டு அவளைப் பக்க நோக்காகப் பார்த்தான். ''என்னமோ தெரியலில்லே, இப்போதெல்லாம் சீக்கிரமே பசிக்க ஆரம்பிச்சுடுது.''

அவள் முகம் சட்டென்று சிவந்தது. அவன் பேச்சின் ரீங்காரத்தைப் புரிந்து கொண்டதன் விளைவாக. தெரிந்த பேச்சுத் தான். புதிதல்ல. திங்கள், புதன், வெள்ளி மூன்று தினங்களிலும் மாலை ஆறு முதல் ஏழு வரை அவனிடம் இந்தப் பரபரப்பு. அவள் சென்று வரும் வரையில் படிப்பதாய் பாவனை, சித்தனை படிந்த மேல் பார்வையின் வயிப்பு, அருவமான எண்ணப் பிசிறல்களுக்கு ஈடு கொடுக்க முடியாத சலனம். நேராகச் சொல்ல மாட்டான்; தடுக்க மாட்டான். ஆனால் மௌனத்தையே கண்டனமாக்கி விடும் தன்மை. தன் உணர்ச்சிகளையே நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி அந்தக் குழறுபடியில் தன்னையும் அவளையும் ஒருங்கே வருத்திக் கொள்ளும் பொருமல். அவளுக்குத் தெரிந்ததுதான் இதெல்லாம். ஆயினும், ஒவ்வொரு முறையும் அதிர்ச்சியே.

''என்ன, பதிலையே காணோம்?''

''இனி மேல் ஆறு மணிக்கே சமையலே முடிச்சு வைச்சுடறேன்.''

''ஏன், எட்டரை மணிக்குள் ஆறி அவலாய்க் கிடக்கவா?''

''இப்போத்தானே சொன்னீங்க, ஏழு மணிக்கே பசிக்கிறதுன்னு?''

அவன் சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டான். ஒரு நிமிஷத்துக்குள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி விட்டதன் அவமானத்துடன், தன் வார்த்தைகள் உண்மையில் வெளிப்படையான பொருளுடையவை

குரு



தட்சிணை

ஆர். சூடாமணி



யல்ல, தொனிப் பொருளைக் குறிக்கும் சைகைகள் என்ற எண்ணத்தில் குப்பென்று வேர்த்து விட்டது. அந்தக் குறிப்புகளை அவள் புரிந்து கொள்வதற்காகவே சொன்னானென்றாலும்கூட, தன் அந்தரங்கத்தை அவள் உணர்ந்து கொள்ளும் நினைப்பில் தவிப்பும் இல்லாமல் இல்லை. தான் சிறுமையினின்று மேலெழ இயலவில்லையானாலும் அவள் முன் தன்னைச் சிறுமையில் அம்பலப் படுத்திக் கொள்ளவும் தயக்கம். ஏதும் பட்டவர்த்தனமாக இல்லாமல் அவளாக அவன் எண்ணப் போக்கின் சாயலிலேயே ஒதுங்கிக் கொண்டு — அதற்குமேல் அவனது சந்தேகத்தைவெளிப்படையாய் ஆராயும் சங்கடத்தை அவனுக்கு அளிக்காமல் — தனது அந்த வாரத்தில் மும்முறை வெளிச் சென்று வருதலை நிறுத்திக் கொண்டு விட்டாளானால் அவனுக்கு மிகுந்த திருப்தியாகி விடும். ஆனால் அவள் அப்படி நிலைமையை அவனுக்கு எளிதாக்கித் தரத் தயாராயிருப்பதாய்த் தெரியவில்லை. அவன் தன் விருப்பத்தை வாய் திறந்தே சொல்லட்டுமென்று காத்திருக்கிறாளோ? அப்படிச் சொன்னால் அவள் பெண்மை தன் தாய்மையை நிலை நிறுத்தி வாதாடலாம். இப்போது முரண் புகை போல அடர்ந்தும், தூலமற்றதாய்க் கவிந்து கொண்டும் இருந்தது.

"நான் உள்ளே போய்ச் சமையலைத் தொடங்குகிறேன்" என்றாள் வாசுகி, சற்று நேரம் பொறுத்து.

"சரி."

அவள் உள்ளே சென்றாள். காஸ் அடுப்பை அவன் மூட்டியாயிற்று. ப்ரஷர் குக்கரைத் தூக்கி வைத்தால் அரை மணி நேரத்துக்குள் சாப்பாடு தயார். இது அன்றாடம் நடப்பது தான், அவனுக்குத் தெரியாததில்லை. அவள் பாட்டு கற்றுக் கொள்ளப் போக ஆரம்பிக்கு முன் அவனே, "இன்னும் அரை மணி கழித்து நீ சமையலைத் தொடங்கினால் கூடப் போதும்" என்று சொன்னவன்தான்.

அவள் வேலை செய்யும் போது அவன் பின்னால் வந்து நின்றான்.

"ரொம்பக் களைப்பாயிருக்கியே வாசுகி."

"அப்படி ஒண்ணும் இல்லியே?"

"குரல் ஏன் ஒரு மாதிரி இருக்கு? ரொம்பப் பாடினையா இன்னிக்கு?"

"வழக்கம் போல் ஒரு மணி நேரம் தானே? அதில் என்ன அதிகமாய்ப் பாடப் போறேன்? சொல்லப் போனால் இன்னிக்கு வழக்கத்தை விடக் குறைச்சல்."

"ஏன் அப்படி?"

"தொண்டை ஒரு மாதிரி கட்டிண்டாப்பலே இருந்தது. அதனாலே என்னை ஓய்வெடுத்துக்கச் சொல்லிட்டு மாஸ்டர்தான் ரெண்டு மூணு உருப்படி தனியாய்ப் பாடிக் காட்டினார்."

"ஓ! அவர் பாட்டைக் கேட்கத்தான் நீ போறியா?"

"நான் கற்றுக் கொண்ட கீர்த்தனைகள் தான். எனக்குச் சில இடங்களில் சந்தேகம் ஏற்பட்டது. அதைத் தெளிவு செய்ய அவர் பாடிக் காட்டினார்."

"உனக்குத் தொண்டைக் கட்டாய் இருக்கென்று ஓய்வெடுத்துக்கச் சொன்னாரா....?"

"ஆமாம்."

"உன்கிட்டே ரொம்பக் கரிசனம் போல இருக்கு. பாவம், நல்லவர்."

அவள் பதில் உரைக்கவில்லை.

"தொண்டைக் கட்டாயிருந்தாலும் பாடணும்னு போனியே, நீயும் அவருக்கு ஏத்த நல்ல சிஷ்யைதான்."

அவள் இதற்கும் பதில் சொல்லவில்லை.

ஊரில் எல்லோரும் சொல்லும் பேச்சு. அந்த வித்துவான் சீலரல்லவாம். அவரிடம் இசை பயிலச் செல்லும் பெண்களின் நிழலிலேயே அதிகக் கருமை கற்பித்து விடுவது பொது வழக்கம். வாசுகியைப் பற்றியும் நிழல் படிந்த பேச்சுக்கள் உலவத் தொடங்கின. அவன் லட்சியம் செய்யவில்லை. ஒளியிருக்கும் வரை நிழலைத் தவிர்க்க இயலாது. அது இயற்கையின் கூறு. அந்த இசைவல்லானின் மேதைச் சுடரே பல்வேறு நிழல்களுக்கு ஆதாரம் தந்திருக்கலாம். அதைக்

"ஊரில் எல்லோரும் சொல்லும் பேச்சு. அந்த வித்வான் ஸ்த்ரீலோலராம். அவரிடம் இசை பயிலச் செல்லும் பெண்களின் நிழலிலேயே அதிகக் கருமை கற்பித்து விடுவது பொது வழக்கம். வாசுகியைப் பற்றியும் நிழல் படிந்த பேச்சுக்கள் உலவத் தொடங்கின......" — சிந்தனையைத் தூண்டும் விதத்தில் குமாரி ஆர். சூடாமணி அமைத்துள்ள சிறுகதை இது.

குறித்து அவள் கவலையுறவில்லை. அவள் மட்டில் அவர் ஆசான்.

வாசுகி இளவயதில் பாடுவாள். பெண்ணின் திருமணத் தயாரிப்புகளின் ஓர் அம்சமாகத்தான் பெற்றோர் செய்த ஏற்பாடாயிருந்தது அந்தப் பொழுதுபோக்கு. ஆனால் அவளுக்கோ அது அவ்வளவில் அடங்கியிருக்க வில்லை. காரண — காரியத்தின் எல்லையைத் தாண்டி ஓர் ஆன்மிக இன்பமாகத் திகழ்ந்தது அவளுக்கு அந்தக் கலை. திருமணத்துக்குப் பின் நின்று போன அந்த இன்பத்துக்குத் தொடர்ச்சியை அவள் நாடினாள். மூன்று ஆண்டுகளுக்குப் பின் இவ்வாறு மாற்றூர் வந்து குடித்தனம் செய்யும் போது தன் வீட்டுக்கு அருகிலேயே பிரபல இசைக் கலைஞரின் இருக்கையைப் பற்றிக் கேள்வியுற்று அவரிடம் பாடம் கேட்க ஆரம்பித்தாள். முதலில் ரங்கதுரைக்கும் அது உவப்பாகத்தான். ஏதோ பொழுது போகட்டும் அவளுக்கு என்று நினைத்தான்.

வாரத்தில் மூன்று நாட்கள். ஒவ்வொரு மணி நேரம். மொத்தம் வாரத்தில் மூன்று மணிகள் அவள் தன் மனம் விழைந்த இனிய கலையில் செலவிட்டாள். தனக்காக வாழ்ந்தாள். மற்ற பந்தங்கள், கடமைகளிடையே தனக்கென எடுத்து வைத்து ஆசையாய்ப் போற்றி அணியும் ஒரு பூஷணமாய் அந்த மூன்று மணி நேரம் அவளிடம் இருந்தது. அப்படித் தனித்து வளர்த்துக் கொள்ளும் அந்த மன நிறைவில் மனிதப் பிறவி முழுமை பெற்று விடுவது போல அவளுக்குத் தோன்றியது. மற்ற சமயங்களில் கணவனுக்கு அன்பிலும் பணிவிடையிலும் தன்னை நல்கும் போது அது ஒரு வெறும் அடிமையின் தொண்டல்ல, முழுமை பெற்ற ஒரு மானிடப் பிறவியின் அன்பு என்பதாக அந்த உறவை அவன் மதிக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்; எதிர்பார்த்தாள்.

ஆனால் ரங்கதுரையைச் சாமானியத் தன்மை மலைப் பாம்பு போல் சிறிது சிறிதாக விழுங்கிக் கொண்டிருந்தது. ஊரில் அடிபடும் பேச்சுக்களில் அவனும் கரைந்து கொண்டிருந்தான். அவனுக்காகச் சமைத்துக் கொண்டிருக்கையில் அவள் முகமெல்லாம் பரவசமாய் ஒரு பாட்டை முணு முணுப்பது கேட்கும். "எனக்குத் தலை நோகுது வாசுகி. எந்தச் சத்தமுமே தாங்க முடியலே. கொஞ்ச நேரம் பாடாம இருக்கியா?" என்பான். அவனுக்கே தன் பேச்சுக் கசக்கும். அவள் வேதனையும் இகழ்ச்சியும் இணைந்த ஒரு பார்வையை அவன் பக்கம் வீச முன்பே அவன் உள்ளம் கூசிக் குறுகிவிடும். ஆனால் மனசிலிருந்து நமைச்சலை நீக்க முடிவதில்லை. விரைவிலேயே அலுவலகம் சென்று விடுவான். அங்கு இருக்கும் போது, வீட்டில் அவள் அந்தப் பாட்டைத் தொடர்ந்து பாடிக் கொண்டிருக்கிறாளோ என்ற எண்ணம் வந்து குறுக்கிடும். வேலை ஓடாது. உறவு எதையும் உடைமையாக மட்டுமே அநுபவிக்க முடிகிற குறுகலிலின்று விடுபட முடியாமல் தவிப்பான். திங்களும் புதனும் வெள்ளியும் வந்து விட்டால் மாலைப் பொழுதே முள்ளாய் நெருடும். அந்த ஒரு மணி நேரம் யுகமாய், கற்பனை அரக்கர்கள் சூழ்ந்த கனத்தகாரமாய், நெஞ்சினுள் அழுந்தி வருத்தும்.

"நிறையப் புதுக் கீர்த்தனைகள் கற்றுக் கொண்டு விட்டாய் போலிருக்கே வாசுகி!" என்றான் ஒரு சமயம்.

"ஆமாம்."

"இனி மேல் வீட்டில் நீயாகவே சாதகம் செய்து கொண்டால் போதாது? நான் பணத்துக்காகச் சொல்லலே......"

"மாஸ்டரும் பணத்துக்காகச் சொல்லிக் கொடுக்கலே....."

"என்ன?"

"இந்த மாசம் அவர் சம்பளத்தை வாங்கிக்கலியே ! 'நீ நன்னாப் பாடுறியம்மா, உனக்குச் சொல்லிக் கொடுக்கிற சந்தோஷமே எனக்குப் போதும்'னுட்டார்."

"ரொம்ப அழகாயிருக்கு!" அவன் இனம் விளங்காத ஆத்திரத்தில் பொருமினான். "உனக்குச் சொல்லிக் கொடுக்கிற சந்தோஷமா? ஒரு பெண்கிட்ட இப்படி யெல்லாம்தான் பேசறதா?"

"நான் அவர் மாணவியானதினாலே அவருக்கு அந்தப் பேச்சைச் சொல்ல உரிமை வந்துடறது. அதில் விகல்பமே கிடையாது. மகளைப் பார்த்துத் தகப்பனார் பெருமைப் படறதில்லையா ?"

"நீ கடைசியில் வற்புறுத்திச் சம்பளத்தை அவர்கிட்டக் கொடுத்துட்டே இல்லையா ?" என்றான் ரங்கதுரை.

"அவர் தொடமாட்டேன்னுட்டாரே ! நான் கூடச் சொன்னேன், 'வித்தையை இலவசமாய்ப் பெறுவது தப்பு' அப்படின்னு. அதுக்கு அவர் 'வித்தையை விக்கறதும் தப்புத்தான்'னு பதில் சொல்லிட்டார். கடைசியில் நான் ரொம்ப வற்புறுத்தின பிறகு, 'சரி, ஒரு நாள் நீ எனக்குக் குருதட்சிணையாய் ஏதாவது கொடுத்துடு, உனக்கும் திருப்தியாயிடும்'னு சொன்னார். நானும் ஒப்புக் கொண்டு வந்தேன்."

"குருதட்சிணையா! அதாவது ?"

"அது என்னவோ!" அவள் மேலே பேசாமல் ஒரு ராகத்தை மெல்ல இழுக்கத் தொடங்கினாள்.

அவன் ஆத்திரத்துடன், ''எனக்கு அந்தக காம்போதி ராகமே ஆகிறதில்லே, பாடாதே'' என்றான்.

''இது காம்போதி இல்லே, சங்கராபரணம் !'' அவள் சிரித்துக் கொண்டே அங்கிருந்து சென்றாள்.

அவனுக்கு முகம் வெந்து விட்டது. சங்கீதத்தைப் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாது. அதை அவள் சுட்டியது ஒரு நுட்பமான வகையில் அவர்களிடையே வேறுபாடுவிளைந்து விட்டதை உணர்த்துவது போல் இருந்தது. அவள் அவனிடமிருந்து விலகி வேறொன்றுடன் இசையை அவனோடு சமமாய்ப் பங்கிட்டுக் கொள்ளும் ஒன்றுடன் — கட்சி சேருகிறாளா? குருதட்சிணை என்று வித்துவான் எதைக் குறிப்பிட்டார் ? அவளிடம் என்ன எதிர் பார்க்கிறார் ?......

ரங்கதுரை சட்டென்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான், உரக்க ஒருவரைத் திட்டும் போது யாராவது கேட்டு விட்டார்களோ என்ற குற்ற உணர்வோடு சுற்றிலும் பார்ப்பது போல். பிறர் அறிய முடியாத படி மனசில் மற்றொருவரைப் பற்றி இழிவு நினைவு தோன்றும் போதுகூடச் சட்டென்று சுற்று முற்றும் பார்த்துக் கொள்ள உந்தும் குற்ற உணர்வை எண்ணி அவனுக்கே வியப்பாயிருந்தது.

மாலையில் அவன் வீடு திரும்பும் போது அவள் சில நாள் தோட்டத்தில் மரத்தடியில் நின்று கொண்டிருப்பாள். இலைப் பச்சை மீதெங்கும் விரிப்பாய் மிதக்கும் செக்கச் சிவந்த காட்டுத் தீ மலர்கள் ரத்தச் சுடர் படர்ந்தது போல் கனன்று காட்சியளிக்கும். அவற்றின் கீழே அவள் நிற்பாள். ஒரு சமயம் சிவப்புச் சேலை அணிந்து அவள் அப்படி நின்று கொண்டிருந்த போது அவளும் காட்டுத் தீயின் ஓர் உயிர்க் கொழுந்தாய்த் தெரிந்த காட்சி நெஞ்சில் அச்சத்தை அப்பியது. அந்தத் தீச் சிறுமை யாராவது அணுகி விடத்தான் முடியுமா? விளையாட நெருங்கும் கையை அது பொசுக்காமல் விடுமா?

கண நேரம் அவன் ஸ்தம்பித்து அந்தப் பயங்கரப் பேரெழில் முன் செயலற்றுநின்றான். சிவப்புச் சேலைக்கு எடுப்பாக அவள் அதே ரகச் சிவப்பில் சோளியும் அணிந்திருந்தாள். நாகரிக முறைப்படி தைத்த சோளியின் குட்டைக் கையிலிருந்து அவள் கரத்தின் கொழுமிய வெண்மை விடுபட்ட நீரருவி போல் பீறி வந்து கொண்டிருந்தது. காட்டுத் தீ வலைந்த விதானத்தின் கீழ் பஞ்சபூதங்கள் தீண்டாத ஏதோ ஒரு பவித்திர மனக் கோலம் போல் அவள் நின்றிருந்த தோற்றத்தில் அவன் தன் கீழெண்ணங்களுக்காக ஒரு நிமிஷம் வெட்கிப் போனான்.

அவளது ஒருமித்த நிலை கலைந்தது. தலையைச் சாய்த்தவாறு அவனைப் பார்த்தாள். முகப் பொலிவின் தூய்மைச் சூனியத்துள் புன்னகை ஒன்று பெருகி வந்து நிறைந்தது. மீண்டும் அவன் நெஞ்சில் சலனம் கிளர்ந்தது.

''எப்போ வந்தீங்க? ரொம்ப நேரமாய் நிற்கிறீங்களா? காப்பி டிபன் சாப்பிட உள்ளே வாருங்களேன் !''



''டே! இந்த உலகத்திலேயே பெரிய சோம்பேறி கோடி வீட்டுக் குப்புசாமிதான்!''

''பெரிய சோம்பேறியா? அவர் எவ்வளவு உயரம் இருப்பார்?''

''தெரியாது. அவர் எழுந்து நின்றதையே நான் பார்த்ததில்லே!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''உனக்கு ஒரே அவசரம்! இல்லேயா? இன்னிக்கு வெள்ளிக்கிழமையாச்சே!''

அவள் எதுவும் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போக முற்பட்டாள். புன்னகையின் எலும்புக் கூடுதான் மிஞ்சியது.

''வாசுகி!''

அவள் நின்றாள். ''என்ன?''

''இன்று இவ்வளவு அழகாயிருக்கே! அதுக்கும் அதுதான் காரணமா?''

''எதுதான்?''

'இன்று வெள்ளிக்கிழமையாய் இருப்பது தான்' என்று சொல்ல நா எழவில்லை. அவளது சோளிக் கையின் கீழே இரண்டு அங்குலத்துக்கு உடலின் சதை அதற்குக் கீழே தெரிந்த கரத்தின் நிறத்தைவிடச் சற்று அதிக வெண்மையாய்க் காட்சியளித்தது. முன்பு நீளக்கை ரவிக்கையினால் மூடப்பட்டிருந்தது இப்போது மாறிய நாகரிகத்தோடே வந்த குட்டைக் கைச் சோளியினால் மூடப்படாத பாகமாய் இருப்பதன் காரணமாய்க் கரத்தின் அந்த இடத்தில் அந்தச் சிறிய நிற பேதம். யோசனையில் லயித்த குருட்டுக் கண்களை அந்த இடத்தில் பதிய விட்டவாறு ரங்கதுரை சிறிது நேரம் நின்றான்.

பிறகு திடீரென்று கேட்டான். ''இன்னிக்கு நாம் கோவிலுக்குப் போகலாமா ?''

''ஏது, திடீர்னு பக்தி!''

''ஒன்னுமில்லே. வெள்ளிக்கிழமையா இருக்கேன்னு சொன்னேன்.''

''நாளைக்குப் போவோமே?''

''நாளை வெள்ளியில்லையே !''

''அதனால் என்ன? வெள்ளிக்கிழமையன்று வந்தால்தான் அருள் செய்வேன் அப்படின்னு சுவாமி ஏதாவது நியமம் வைத்துக் கொண்டிருக்கிறாரா, என்ன?''

''நான் சொல்றதைக் கேக்கற வழக்கமே போய் விட்டது.''

''இன்று ஒரு நாள்தானே. இல்லே வாரா வாரம் வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போக ணும்கிறீங்களா ?''

''ஏன், போனால் என்ன? அதுவும் நல்ல வழக்கம்தான்.''

''சரி. உங்களுக்கேன் குறை? அப்படியே போவோம். அப்படின்னு, இன்மேல் திங்கள், புதனுக்கப்புறம் வெள்ளிக்குப் பதிலாய்ச் சனிக்கிழமைகளில் டியூஷனுக்கு வரேன்னு பாட்டு வாத்தியார்கிட்டச் சொல்லட்டுமா?''

அவள் பார்வை அவனை ஊடுருவியது. அவன் ஒரு சொல்லால் அன்பின் உறுதியை உருக்காட்டி விட்டால் போதும்; மொழி வேண்டாம், நம்பிக்கையைக் காட்டும் ஒரு முறுவல் தந்தாலும் போதும், அவள் ஆறுத லடைந்து விடுவாள். பெண்ணின் உரிமை என்பது மட்டுமல்ல; உறவு துளிர்ப்பதற் கான அமுதபிந்துவே அந்த நம்பிக்கைதான். அது வாதாடிப் பெறுவதல்ல. உணர்த்தி உணர்வதல்ல. கொள் என்றும் கொடு என்றும் அமைவதல்ல. கொடையும் ஏற்பும் உண்டானால் பின் சமத்துவம் எங்கே ? மண்ணிலே ஈரம் கசப்பது போல் அவனுள் நம்பிக்கை சுரக்க வேண்டும். அவள் கண் ணிமைகள் துடித்துக் கொண்டிருந்தன. அவன் அவள் பார்வையைச் சந்திக்க வில்லை. மரத் தின் மீது கொழுந்து வரிசைகளாக விரிந் திருந்த காட்டுத் தீப் பூக்களின் வழியாக அவன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். திட்டுத் திட்டாக வான நீலம் கிளைப் பின்னல் களிடையே சிறையுண்டிருந்தது.

''சீக்கிரம் உள்ளே வர்றீங்களா? உங் களுக்குச் சிற்றுண்டி கொடுத்துட்டு நான் போகணும். மாஸ்டர் காத்திருப்பார்'' என்றவாறு அவள் வீட்டினுள் நுழைந்தான்.

தயக்கத்தினிடையே நாட்கள் ஊர்ந்தன. அவன் ஒரு நாள் அழைத்தான். ''வாக்கிங் போய்ட்டு வரலாம், வரியா வாசுகி?''

''இதோ.''

அன்று டியூஷன் தினமல்ல. செவ்வாய்க் கிழமை. இருவரும் உலாவக் கிளம்பினார்கள்.

இதயத் தந்திகளை மீட்டும் இனிய தென் றல். அல்லி மலர்களையும் அரும்பனிமும் சுனைவுகளையும் அதுங்காமல் தலை மேல் சுமந்து கொண்டு மாலைக் கன்னி மென்னடை பயின்று வந்து கொண்டிருந்தாள். முன்னி லாக் காலம். மரமொன்றின் உச்சாணிக் கிளை மீது மதிய வட்டம் ஒரு குறும்புக்காரப் பையன் போல் அமர்ந்திருந்தது. அந்தரங்க மாய் நெஞ்சில் வந்து கிளுகிளுக்கும் இயற்கை யின் மெல்லோசைகளை அமுக்கி மும்முரமான நகர வாழ்வின் நெரிசலும் இரைச்சலும் எங்கும் ஆக்கிரமித்திருந்தன. கவனிப்பாரற்ற குழந்தை போல் அழகு கிடந்தது.

அவர்களும் கவனிக்கவில்லை. இருவருக்கும் தத்தம் தனியான எண்ண ஓட்டம். நெருங்கி நடக்கின்ற இரு உடல்களைப் பிரிக்கும் எத்தனை எத்தனையோ உணர்ச்சி பேதங்கள். இணையாய்ப் பகிர்ந்து கொள்ள வேண்டிய இளமைகளின் மேல் ஒரு திரை. உள்ளத்தின் அடித்தளத்தில் ஓட்டாத கலக்க அலைகள். அவற்றின் மோதலில் அவனுக்கு மூச்சு முட்டியது. ஆனால் கரை சேரத் தெம்பில்லை. புணையைப் பற்றித் தள்ளக் கோலில்லை. அப்படி என்பதாக ஒரு மலைப்பு. கோல் என்று நினைப்பது பாம்பாக இருந்து விட் டால்?.... அவனும் மௌனமாகவே நடந் தான். அந்த மௌனத்தில் கணக்கற்ற அர்த்தச் சிதறல்கள். சில சமயம் அவனுக்கும் பொருள் புரிவது போல் இருந்தது. ஆயினும் அந்தப் பொருளுக்கு அவள் ஏன் வாக்குருவம் தரக் கூடாது? 'நான் நல்லவள்' என்று ஒரு முறை வாய்விட்டுச் சொன்னால் என்னவாம்?

வாய் பேசாமல் நடந்து சென்று கடற் கரையை அடைந்தார்கள்.

''கொஞ்ச நேரம் உட்காரலாமா வாசுகி?''

''ம்.''

உட்கார்ந்த நிலையில் நேரம் கரைந்தது. அமுதமயமாய்க் கங்குல் படர்ந்து விட்டது. நிலவின் பொழிவிலே மணற்பரப்பெங்கும்

உபகாரி உத்தண்டன்



பொடித்தெழுந்தன. இடையென்று அருகில் பேச்சொலி. முகம்கூடத் தெரியவில்லை.

''ஆமாமாம், நானும் கேள்விப்பட்டேன். அவர் ரொம்பப் போக்கிரிதானும். என்ன வித்துவானுயிருந்தால் என்ன? மனுஷனுய்ப் பிறந்தவனுக்கு ஒழுக்கம் இருக்கணும்......''

''உண்மைதான். அங்கே பாட்டுச் சொல்லிக்கப் போகிற பெண்களுக்கு ரொம்பத் துணிச்சல்.''

''பாட்டுச் சொல்லிக்கவா போருங்க அங்கே ?''

''இப்போகூட.... யாரோ வாசுகின்னு பேராம். கல்யாணம் ஆனவுன்னு சொல்லிக்கிருங்க. கல்யாணமான பொம்புளைக்கு எதற்கையா இந்த எழவெல்லாம்? என்னமோ, நம்ம வாயாலே இதை யெல்லாம் சொல்லக் கூடாது!.......''

பேசியவர் மேலே தொடரவில்லை. அவர் சட்டைக் காலர் ரங்கதுரையின் கைப் பிடிக்குள் இருந்தது. அவருடைய கன்னத்தில் கொடுத்த அறையினுல் அவன் கை இன்னும் விறுவிறுத்துக் கொண்டிருந்தது.

''என்ன சொன்னே? எவண்டா நீ அவளைப் பற்றி இப்படி யெல்லாம் பேச ? அவள் நல்லவள், தெரியுமா ? என் வாசுகி தூய்மையானவள். அவளைப் பற்றி இந்த மாதிரி அபாண்டம் பேசற அற்பப் பயல்களின் பல்லை உடைச்சுடுவேன். ஜாக்கிரதை!'' இன்னேர் அறை. இன்னுமொன்று. ஆத்திரத்தில் அவன் அறைய அறைய வாசுகி மெய் மறந்து போனுள்.

கணப் பொழுதில் சுற்றிலும் கூட்டம், பிரிந்த கட்சிகள், வாக்கு வாதங்கள், போலீசை அழைப்பதான மிரட்டல்கள்— கடைசியில் ஒருவாறு எல்லோரும் விலகி இடம் காலியாயிற்று. கூட்டம் கலைந்த வெறுமையை வெறித்தவாறு ரங்கதுரை மெல்லிருளில் மூச்சிரைத்தபடி ஆவேசமாய் நின்றுன். அவன் வாயினின்று என்ன வார்த்தைகள்! அவள் தூய்மையானவள் ! அவள் தூய்மையானவள்! அவனுள் வெள்ளமிட்டுப் பொங்கிப் பாய்ந்தது இந்தஉணர்வு ஒன்றே. இழிவு பேசிய ஜனன் மீது கனன்றெழுந்த சீற்றத் தீயிலே அகத்தங்கள் போகங்கிப் போய் அடியில் நின்ற பொன் மய அன்புதான் ஒரே நித்தியப் பொருளாய்ச் சுடர்ந்து நின்றதா? அந்த அன்பும் நம்பிக்கையும் உறுதியும் அவனுள் எப்போதுமே இருந்தவைதானே? இந்த மோதல் தேவைப்பட்டதா, அவற்றை மூடியிருந்த கறையான் விலக? அவனே தன்னுள் நோக்கி உண்மையை உணர்ந்து கொள்ள ?


புதிதாய் உதித்த விழிப்பின் தெய்வீக ஒளிச்செறிவிலே அவன் திரும்பி அவளைப் பார்த்தான். வாசுகி இதயம் இன்பத்தில் பொங்கிப் பூரிக்க அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்கள் பனித்து விட்டன. அவன் நம்பிக்கை அவளுடைய பெண்மையின் பெருமிதம். சட்டென்று நிலவொளியில் இருவர் முகங்களிலும் புன்னகை ஆம்பலாய் அலர்ந்து விட்டது. அவளுக்கு உள்ளத்தில் ஏதோ விடுதலை உணர்ச்சி. சிறிது நேரம் உண்மையின் சந்நிதியிலே அன்பின் மோன நிறைவை ஏந்தி இருவரும் அமர்ந்திருந்தனர். பிறகு அவள் கூறினுள். ''நாளை மாஸ்டருக்கு நான் குருதட்சிணை கொடுத்துடறேன்.''

''செய்.''

''நீங்க என்னை நம்பறீங்க. அப்படின்னு என் ஒருத்தி விஷயத்திலாவது அவரைத் தவருதவர்னு நீங்க ஒப்புக் கொள்வதாய் ஆகிறது. இல்லையா? நல்லவரான அவருக்கு ஊர் முழுதும் அவப் பெயர். நாளைக்கு என்னேடு நீங்களும் அவர் வீட்டுக்கு வந்து நட்பு முறையிலே பேசிட்டு வாங்க. அப்போ உங்க நம்பிக்கை அவருக்குப் புரியும். தன்னை ஒருவராவது நம்பறுர் என்கிற திருப்தி அவருக்கு ஏற்படும். தவருய் எடை போடப்படும் அவருக்கு அந்த நம்பிக்கையைவிடப் பெரிய குரு தட்சிணை வேறு என்னதான் கொடுக்க முடியும் ?''

''ரொம்ப சரி. அப்படியே செய்வோம்.''

இருவரும் எழுந்து வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். அவன் அண்ணுந்து வானத்தைப் பார்த்தான். தடையாய் இருந்து சிறைப்படுத்துவது போல் பிரமை எழுப்ப மரங்களோ கிளைகளோ அருகில் இல்லை. நன்கு தடையின்றி விண்வெளி அண்டமெங்கும் பரந்திருந்தது.



சுவையான சர்ச்சைகள்

பட்டண வாழ்க்கைக்குப் பழைய காலத்திலிருந்தே தொடர்ந்து வரும் சாபக்கேடுகள் இரண்டு. ஒன்று கூவம்; மற்றொன்று பக்கிங்ஹாம் கால்வாய். மூன்றாவதாகச் சமீப காலமாகத் தோன்றியிருக்கும் சாபக்கேடு என்ன தெரியுமா? டாக்ஸி! முந்திய இரண்டையாவது கொஞ்ச நேரம் மூக்கைப் பொத்திச் சமாளிக்கலாம். மூன்றாவதைச் சமாளிக்க எந்த வழியும் இருப்பதாகத் தெரியவில்லை!

பொதுஜனங்களின் சௌகரியத்துக்காக டாக்ஸிகள் ஓடுகின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த வாசகத்துக்கு நான் ஒரு சிறு திருத்தம் கொண்டு வர விரும்புகிறேன். சௌகர்யம் என்ற பதத்துக்குப் பதிலாக அசௌகரியம் என்று போட்டுக் கொள்ள வேண்டியது. அவ்வளவுதான்!

தொழிலாளர் சமூகத்துக்கு மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் உதவக் கூடிய 'ஸ்டிரைக்' என்ற கண்ணியமான ஒரே ஆயுதத்துக்கு மாசு கற்பித்த பெருமை நம் சென்னை டாக்ஸி ஓட்டிகளையே சாரும். போலீஸார் இடம் போனால் ஸ்டிரைக், வலம் போனால் ஸ்டிரைக் என்ற முறையில் இவர் 'முறைப்பு'களைக் கையாண்டு பொதுஜனங்களை எவ்வளவு அல்லலுக்கு உள்ளாக்கலாமோ அத்தனையும் செய்துவிடுகிறார்கள். மீட்டருக்கு உடனே ஒரு முக்காட்டையும் போட்டுவிடுகிறார்கள். அதோடு தங்கள் கடமை, ஒழுங்கு எல்லாவற்றுக்கும்தான் ஒரு முக்காடு.

அன்றைக்கு ஒரு நாள் எங்கோ பிரயாணிகளுடன் ஓடிக்கொண்டிருந்த டாக்ஸி மவுண்ட் ரோடு பகுதிக்கு வந்ததும் திடீரென்று நின்று உள்ளிருந்தவர்களை வெளியே உறுப்பித் தள்ளிவிட்டதை நான் நேரடியாகப் பார்த்தேன். ஸ்டிரைக் என்ற வார்த்தை காற்று வாக்கில் அந்தக் காரோட்டியின் காதில் விழுந்துவிட்டதாம்! ஸ்டிரைக் நடத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகத்தானே என்னவோ அவர்கள் கார் ஓட்டுகிறார்கள் போலும்!

ஸ்டிரைக்காவது இன்புளூவென்ஸா ஜுரம் மாதிரி விட்டு விட்டுத் திடீரென்று வருகிறது. சதா கூடவே இருந்து வதைக்கும் பட்சவாதம் மாதிரி மற்றொரு வியாதியும் உண்டு. அதுதான் மரியாதை இல்லாமை! இரண்டொருவர் விதிவிலக்காக இருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால் பெரும்பாலானவர்களுக்கும் மரியாதைக்கும் இடையே ரொம்ப 'லாங் டிஸ்டன்ஸ்!' தங்கள் டாக்ஸிகளில் ஏறுபவர்கள் எல்லாமே தண்டையார்ப்பேட்டையிலிருந்து சைதாப்பேட்டைக்கோ, அமைந்தகரையிலிருந்து அடையாறுக்கோ, போகிற லாங் டிஸ்டன்ஸ் ஆசாமிகளாகவோ அல்லது எஸ். எஸ். ரஜூலாவில் வந்திறங்கும் கப்பல் பிரயாணிகளாகவோ இருக்க வேண்டும் என்று மாத்திரம் எதிர்பார்க்கிறார்கள்!

டான்டலஸ் என்பவனைப் பற்றிக் கிரேக்க நாட்டுக் கதைகளில் எப்போதோ படித்த நினைவு. அவனைத் தண்ணீரில் நிறுத்தி ஒரு கம்பத்தோடு கட்டிப் போட்டார்களாம். முன்னால் மேஜையில் ஆகாரம் படைத்திருந்தார்கள். அவனுக்குப் பசி எடுத்துக் கையை நீட்டினால் மேஜை கைக்கு எட்டாமல் பின்னால் நகர்ந்துவிடும். தாகத்துக்குத் தண்ணீரையாவது குடிக்கலாமென்று குனிய முயன்றால் நீர் மட்டம் கைக்கு எட்டாமல் கீழே இறங்கிவிடும். நம் பட்டணத்து டாக்ஸிகளைப் பார்க்கும்போது நாம் அந்த டான்டலஸாக மாறிவிட்டோமோ என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. அவசரமாகத் தெரு முனையில் நின்று கையைத் தட்டினால் காதிலே விழாதது போல் டாக்ஸிக்காரர் ஓடுவார். நின்றுகொண்டிருக்கிறதே என்று நெருங்கினால் 'கிட்ட தூரப் பிரயாணி' என்று புரிந்து கொண்டு 'வண்டியிலே பெட்ரோல் இல்லே' என்ற சாக்கைச் சொல்லுவார்கள். அவசரத்துக்கும் தேவைக்கும் டாக்ஸி கிடைக்காது. அதிகப்படியாக மீட்டருக்குச் சம்பந்தப்படாத தொகை கொடுக்கக் கூடிய ஆசாமிகளாகத்தான் அவர்களுக்குத் தேவை. பிறகு மீட்டரும் அளவும் எதற்கு? யார் கண்களைத் துடைக்க?

டாக்ஸி ஓட்டிகள் இலவசமாக ஒன்றும் வேலை செய்யவில்லை. அது அவர்களுக்கு நினைவில் இருப்பதாகவும் தெரியவில்லை. 'ஷெட் மாம்பலம்' என்ற போர்டை மாட்டிவிட்டு டிரைவர் ஹாய்யாக உட்கார்ந்திருப்பார். 'மாம்பலத்திற்குத்தான்' என்று யாராவது அப்பாவி வந்தால் 'இல்லே சார்! வண்டி மயிலாப்பூர் வழியாகப் போகுது சார்!' என்பார். மேற்படி போர்டைப் போடுவது மீட்டருக்கு மேலே அதிக பேரத்துக்கு விரிக்கும் வலை என்று அந்த அப்பாவி கண்டாரா?

நம் டாக்ஸி ஓட்டிகள் முதலாவதாக மரியாதையுடன் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும். எந்த தூரமாக இருந்தாலும் வண்டியை விட முன்வர வேண்டும். காரில் மனிதர்கள் தான் ஏறியிருக்கிறார்கள் என்ற பொறுப் புணர்ச்சியுடன் வண்டியை நிதானமாக ஓட்ட வேண்டும்! டாக்ஸியில் ஏறியிருக்கும் மனித உயிர்களைப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பு தங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழியின் ரீதியில்தான் எங்களைக் குறை கூறும் நண்பர் திரு சந்தானம் சற்று காரமாகவே பேசுகிறார். இந்தப் பழமொழி சோற்றுப்பானை ஒன்றுக்குத்தான் பொருந்துமே தவிர மற்ற எதற்கும் பொருந்தாது. இதை அந்த நண்பர் முதலில் உணரவேண்டும்.

நான் டாக்ஸி ஓட்டியாகவும் இருந்து பிறகு சொந்தக்காரனாகவும் ஆனவன்தான். இந்த இரண்டு சாராருக்குமே 'ஸ்டிரைக்' என்பது பிடித்தமான விஷயமில்லை; லாபமான விஷயமுமில்லை. வண்டிகள் ஓடாமலிருந்தால் டிரைவருக்குச் சம்பளம் நஷ்டம். சொந்தக்காரருக்கு வருமானம் நஷ்டம். எதிர்பாராத ஒன்றிரண்டு வம்புக்கார, மோட்டா ஆசாமிகள் சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும்போது இந்த வேலை நிறுத்தம் விஷவாயு மாதிரி பரவிவிடுகிறது. இதைப் பயன்படுத்திச் சில இடைவழிக் குண்டர்கள் வண்டிகளுக்குச் சேதம் விளைவித்துவிடக் கூடாதே என்றுதான் மீட்டருக்குக் கட்டுப்பாடு

தெரிந்தவர்கள் எட்டணு தூரம் என்று அலட்சியப்படுத்திவிட மாட்டார்கள். மொத்த வசூல் ஏற ஏற அவர்களுடைய தினசரி வரும்படியும் ஏறுகிறது. அவர்களுக்குத் தினசரி சம்பளம், எத்தனை வசூல் கம்மியாக இருந்தாலும் ஐந்து ரூபாய். முப்பது ரூபாய்க்கு மேல் வசூல் போனால் ஒவ்வொரு ஐந்து ரூபாய்க்கும் அவர்களுக்கு ஒவ்வொரு ரூபாய் பங்கு. ஆகையால் அவர்கள் பிரயாணிகளது எண்ணிக்கையைக் கண்டோ கனமையைக் கண்டோ ஒதுங்கலாமே தவிர அதிக தூர ஆசையினால் இருக்காது. ஓரிரு கற்றுக்குட்டி ஆசாமிகள் எடுத்த எடுப்பிலேயே ஐந்தும் பத்தும் வருவாகப் பார்க்க வேண்டும் என்ற நினைப்பில் குறைந்த. தூரப் பிரயாணிகளை அலட்சியப்படுத்தியிருக்கலாம். அதை அளவாக வைத்துக் கொண்டு நண்பர் எல்லோருக்கும் ஒரே லேபிளை ஒட்ட முயல்வது தவறு.

பிரயாணிகளில் பல தரப்பட்டவர்களைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு டாக்ஸி



சென்னை நகரத்தில் டாக்ஸி ஓட்டிகள் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை.

❀

குற்றம் சாட்டுபவர்:
ஆர். சந்தானம் (பிரயாணி)

●

மறுப்பவர் :
எல். பங்காரு
(டாக்ஸி சொந்தக்காரர்)



போடுகிறோம். எங்கள் கடமைக்கு அல்ல! இதை நண்பர் உணர வேண்டும். உடைமைகளைப் பத்திரப்படுத்திக் கொண்டல்லவா பிறகு உழைப்பதைப் பற்றி நினைக்க முடியும்?

எல்லா ஸ்டிரைக்குகளுமே நியாயமானது என்று நான் சொல்லத் தயாரில்லை. ஆனால் அவைகள் நியாயமானதா இல்லையா என்ற விஷயம் உடனடியாக யாராலும் புரிந்து கொள்ள முடியாது. அதுவரை இரண்டொரு நாள் வண்டிகள் ஓடாது. இதைப் பொது மக்கள் அநுசரித்துத்தான் போகவேண்டும்.

டாக்ஸி டிரைவர்களுக்கு ஒரு சங்கம், சொந்தக்காரர்களுக்கு ஒரு சங்கம் என்று வேறு இருக்கிறது. ஒன்றுக்கொன்று தாக்குப் போக்கில்லாமலும் இயங்குகின்றன. இது ஒரு சங்கடம்!

நண்பர் மரியாதைக் குறைவைப் பற்றிச் சொல்கிறார். அவர் என்னுடன் கூட வந்தால் எத்தனையோ 'கனவான்'களான டிரைவர்களை நான் காண்பிக்க முடியும். எட்டணு தூரத்துக்கும் மகிழ்ச்சியுடன் ஏற்றிச் செல்பவர்கள் நிறைய இருக்கிறார்கள். விஷயம்

ஓட்டிகளுக்கு உண்டு. 'ரயிலுக்கு நேரமாயிற்று வேகமாகப் போ' என்று விரட்டி டிரைவரை 'ஓவர் ஸ்பீட்' ஆபத்தில் சிக்க வைத்து விடுவார்கள் சிலர். திருவல்லிக்கேணியிலிருந்து ஷெனாய்நகர் போய்விட்டு அங்கிருந்து ஐயனாவரம் போய் அரைமணி நேரம் அரட்டை அடித்துவிட்டு மயிலாப்பூர் கச்சேரி ரோட் முனையில் இறங்கி, ஒரு வீட்டுக்குள் போய்விட்டு வருவதாகச் சொல்லி, பக்கத்துச் சந்து வழியாகக் கம்பி நீட்டித் தலைமறைவாகப் போகும் பாசஞ்சரை அந்த டிரைவரால் என்ன செய்ய முடியும்? மீட்டர் காண்பிக்கும் ஐந்து ரூபாய் எழுபது பைசாவுக்கு அவன் எப்படி ஈடு கட்டுவான்?

டாக்ஸி டிரைவர்களிடம் மரியாதைக்குப் பஞ்சம் இல்லை. அன்பைக் காட்டினால் அது அவர்களிடம் பிரதிபலிக்கும். அதிகாரத்துக்கு அவர்கள் கட்டுப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு. குறைந்த தூரம் போக வேண்டுமா? பேசாமல் ஏறி உட்கார்ந்து விடுங்கள். வண்டியை எடுக்கிறாரா இல்லையா—பாருங்கள்! பிரச்னை அவ்வளவுதான்!

காலச் சக்கரம்



அத்தியாயம் 37

பட்டப்பகலில் ஒரு மின்னல்!

மருத்துவ மனை நிர்வாகிகளும் மாருதிக்குச் சிகிச்சை செய்த டாக்டர்களும் தங்கள் கடமையை நிறைவேற்றும் வகையில் போலீஸுக்குத் தகவல் தெரிவித்ததன்பேரில் அதிகாரிகள் வந்து சட்டப்படி 'கேஸ்' பதிவு செய்து கொண்டு போனார்கள். ஆனால் இதனால் விசேஷமான பலன் ஏதும் விளையும் என்று தங்கப்பனோ மாருதியோ எதிர்பார்க்கவில்லை. இன்னார்தான் இன்ன காரியத்தைச் செய்தார்கள் என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்ட மாருதியினால் முடியாது. போலீஸாருக்கும் யார் இந்த அக்கிரமத்தைச் செய்தார்கள் என்று துப்புத் துலக்கத் தடயங்கள் ஏதும் அகப்படாது. அவர்களாகவே உண்மையை ஊகித்து உணர்ந்தாலோ அதன் பிறகு அச்சமின்றியும் நேர்மையாகவும் மேலே நடவடிக்கை எடுக்க அவர்களால் இயலுமா என்பது சந்தேகம். அவ்விதம் அதற்குத் துணிந்தாலும் தீனதயாளு தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் மறுத்து வெற்றி காண்பதுடன் தம்மைத் தேர்தல் சமயத்தில் மக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தி நற்பெயரை இழக்கச் செய்யவேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே தங்கப்பன் இப்படியெல்லாம் வீண் புரளிகளைக் கிளப்பிவிட்டிருக்கிறான் என்பதாகச் சொல்லி, ஏற்கெனவே அச்சுறுத்தியதுபோல் மான நஷ்ட வழக்குகூடத் தொடுக்கலாம்! ஆகவே தகுந்த சாட்சியங்கள் கிடைக்காததால் தீர்க்கப்படாமல் தூங்கும் எத்

தனையோ கேஸ்களில் ஒன்றாக இதுவும் சிக்கல் விடுவிக்கப்படாமலே கிடக்க வேண்டியதுதான்!

விசனத்துடன் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த தங்கப்பனுக்கு, இது தீனதயாளுவின் யோசனையோ அல்லது உஷாவின் மூளையில் உதித்த அருமையான திட்டம் தானோ எப்படியானாலும் சரி இந்தச் சூழ்ச்சி கண்டிப்பாக முறியடிக்கப்பட வேண்டும் என்று தோன்றியது: எவ்விதத்திலேனும் இதை அவர்களுக்கே பாதகமாக முடித்து வைத்து, அதர்மத்தினால் பயன் இல்லை என்பதை அவர்கள் உணரச் செய்ய வேண்டும்!- வலது கரத்தை முஷ்டியாக்கி இடது உள்ளங்கையில் ஓங்கிக் குத்திக் கொண்டே அவன் தீவிரமாகச் சிந்தித்தான்.

திடுமென அவன் துள்ளி எழுந்து நின்றான். ''மாருதி ஸார்! உங்களுக்குத் துன்பமோ வேதனையோ எல்லாவற்றையும் பொறுத்துக்கிட்டு எனக்கு நீங்க உதவித்தான் ஆகணும்! தேர்தலை யொட்டி நான் பேசப் போகிற ஒவ்வொரு மேடையையும் நீங்க வந்திருந்து அலங்கரிக்கணும்.''

''நான் வந்து உட்கார்ந்தால் அது அலங்காரமாவா இருக்கும்? அலங்கோலம் என்று சொல்லு!'' என்றார் மாருதி. அப்படிக் கூறி வருகையிலேயே தங்கப்பனுடைய சிந்தனை செயல்படுகிற விதத்தை அவரால் புரிந்து கொள்ளவும் முடிந்தது.

''ஆமாம், ஸார்! பயங்கரமா காட்சியளிக்கிற இந்தக் கட்டுக்களோடேயேதான் நீங்க மேடையில் கொலு வீற்றிருக்கணும்!''

மாருதி புன்னகை புரிந்தார். உடல் உபாதைகளை ஒரு கணம் மறந்தவர் போல், தமது கண்களில் சத்திய ஒளி பளிச்சிட மகிழ்ந்தார். ஆனால், ''கடைசித் துளி இரத்தம் இருக்கிறவரை நான் உண்மைக்கு உழைக்கத் தயாராயிருக்கிறேன், தம்பி! அப்புறம் நடப்பது நடக்கட்டும்'' என்று அந்தக் கிழட்டுத் தீரர் கூறிய போது அவர் மேனி அடைந்திருந்த தளர்ச்சியைத் தெளிவாக உணர்த்தியது ஈனஸ்வரத்தில் நடுங்கிய குரல்.

விஷயமறிந்ததும் ஆஸ்பத்திரி நிர்வாகிகளும், டாக்டர்களும், ''உங்களுக்கென்ன பைத்தியமா?'' என்று திகைத்து நின்றபடி கேட்டார்கள். ''இவரை வெளியே அழைத்துச் செல்வதாவது? இந்த நிலையிலா? அழகுதான்!''

அவர்கள் வற்புறுத்தலுக்கிணங்கி ஒரு வாரம் — ஏழு நாட்கள் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாகக் காத்திருக்கத் தீர்மானித்தான் தங்கப்பன்.

மறுநாள் செய்தி கேள்விப்பட்டு மாருதியின் மகளும் மாப்பிள்ளையும் வந்து சேர்ந்தார்கள். 'கோ'வென்று அந்தப் பெண் கதறி அழுவதைக் காணச் சகிக்கவில்லை தங்கப்பனுக்கு.

''துன்பத்தை மனசிலேயே வைச்சுக்கிட்டுப் புழுங்கறதைவிட அழுது புலம்பித் தீர்த்துவிடுகிறதே மேல். இன்னும் இரண்டு நிமிஷத்திலே இந்த அழுகை அடங்கிடும்'' என்றார் மாருதியின் மாப்பிள்ளை, தங்கப்பனை நோக்கி. ''நீங்க கவலைப்படாதீங்க!''

''என்னால்தானே, இத்தனை துன்பம் அவருக்கும் அவர் மகளுக்கும்?'' என்று நாத் தழுதழக்கக் கூறிக் கண் கலங்கினான் அவன்.

''நீங்க மனசைத் தேற்றிக்கிடுங்க; எல்லாம் தலைவிதி. அதுக்கு நீங்க என்ன செய்ய முடியும்?''

''என்ன செய்ய முடியுமா? தலைவிதியைத் திருத்தி அமைக்க முடியும்!'' என்று உறுதியான குரலில் சொன்னான் தங்கப்பன்.

அவர் ஒன்றும் புரியாமல் விழித்தார். தங்கப்பனைச் சில விநாடிகளுக்கு ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு மனைவியை அணுகி அவள் தோளில் கரம் பதித்துச் சமாதானப் படுத்தும் முயற்சியில் ஈடுபடலானார்.

ஃ ஃ ஃ

மாருதி வேண்டாம் என்று எவ்வளவோ கூறி மறுத்தும் தங்கப்பன் பிடிவாதமாகக் கதிர்வேலனை அவருக்குத் துணையாக அங்கிருக்கச் சொல்லிவிட்டுக் கிளம்பினான். ''எதற்குத் தம்பி? மகளும் மாப்பிள்ளையும் பக்கத்திலே தானே இருக்காங்க, என்னைக் கவனிச்சுக்கிட மாட்டாங்களா? உனக்கு உதவிக்கு இருக்கிறதே எண்ணி ஏழெட்டுப் பேருங்கதானே? அதிலேயும் ஒருத்தனை இங்கே வீண் பொழுது போக்க விட்டுப் போவானேன்?'' என்றார்.

''ஏதோ ஓர் அவசரத்துக்குக் கடை கண்ணிக்குப் போய் வர இருக்கட்டும் ஸார்! இரண்டு பேர்களைத் தாற்காலிகமாக இழந்த சுற்றுப் பதிலாக இரண்டாயிரம் பேர்களுக்குண்டான மனத் தெம்பை நான் இப்போ பெற்றிருக்கேன்! நான் சொன்னேனே, அந்த யோசனை பிரமாதமா பலனளிக்கப் போகுது, பாருங்க!''

ஆனால் அந்தத் திட்டத்தை நடைமுறையில் நிறைவேற்ற ஆரம்பிக்கவே இன்னும் ஏழு நாட்கள் ஆக வேண்டுமே?

அந்த ஒரு வாரமும் வாளாவிருந்து பொழுதைப் போக்கவில்லை தங்கப்பன். புயலென விரைந்து பல சிற்றூர்களுக்கும் கிராமங்களுக்கும் போனான்.

ஒரு நாள் இரவு வெகுநேரமாகி விட்டபடியால் பொன்னகரத்தில் பொதுக்கூட்டம் முடிந்த பிறகு அந்தக் கிராமத்திலேயே முக்கியஸ்தர் ஒருவர் வீட்டில் படுத்திருந்து விட்டு மறு நாள் அதிகாலையில் மீண்டும் சுற்றுப் பிரயாணத்தைத் தொடர்வது பற்றியோ சத்தியபுரிக்குத் திரும்புவது பற்றியோ யோசிக்கலாம் என எண்ணினான். அந்த நண்பரின் அன்பான உபசரிப்பில் உண்டு மகிழ்ந்து படுத்தவன்தான், அசதி மேலீட்டினால் அப்படியே மரக் கட்டை போலக் கிடந்து அயர்ந்து தூங்கிவிட்டான். ஓய்ச்சல் ஒழிவில்லாமல் பல நாட்களாய்ச் சுற்றி அலைந்த களைப்பு அவனுக்கு.

பளபளவென்று பொழுது விடிவதற்கு முன்பாகவே அதிகாலையில் கிளம்பிச் சென்று விடவேண்டும் என்று நினைத்துப் படுத்தவன்,



விழித்தெழுந்த போது சுற்றிலும் எங்கும் பனிப் படலம் படர்ந்திருக்க அதனால் ஏற்பட்ட சிலுசிலுப்பினூடே திண்ணையில் படுத்துக் கிடந்த தன் உடல், காலைக் கதிரவனின் இதமான வெய்யிலிலும் தோய்ந்து கொண்டிருப்பதால் ஏற்படும் சுகானுபவத்தை வெகுவாக ரசித்து அதற்கே அடிமையாகியும் விட்டான்! நீண்ட நேரத்துக்கு எழுந்திருக்கவே மனம் வரவில்லை அவனுக்கு.

உழைப்புத் தெய்வத்தை நாடிச் சென்று கொண்டிருக்கும் உழவனொருவன் ஏதோ ஒரு நாட்டுப் பாடலை உற்சாகமாகப் பாடிக் கொண்டு செல்வது இலேசாகக் கேட்டது. எதிரே இருந்த ஒரு வேப்ப மரம் அப்போது தான் புதிதாக இளம் பசுமை நிறத்தில் துளிர் விட்டிருக்க, மெல்லிய பூங்காற்றில் அசைந்தாடும் அந்த இலைக் கொத்துக்களினிடையே சூரிய கிரணங்கள் புகுந்து விளையாடி வர்ண ஜால வித்தை காட்டிக் கொண்டிருந்தன. கிட்டத்தில்தான் எங்கோ கண்ணுக்கு மறைவான இடத்திலிருந்து குயில் ஒன்று அக்கூ அக்கூ என்று கூவித் தங்கப்பனின் செவிகளில் இனிமை ததும்பச் செய்தது.

'படுத்த வண்ணமே மனோகரமான இது போன்ற பல காட்சிகளை உணர முடியுமென்றால் எழுந்து காலாரச் சற்றுத் தூரம் கிராமப் புறத்தைச் சுற்றி நடந்துவிட்டு வந்தால் எப்படி இருக்கும்?'

அடக்க முடியாமல் அந்த ஆசை பெருக, தங்கப்பன் தேர்தலையும், பிரசார வேலைகளையும் அடியோடு அப்போதைக்கு ஒதுக்கித் தள்ளினான். அலுத்துச் சலித்திருந்த அவனுக்கு இன்றைக்கு ஒரு நாள் ஓய்வாக இருந்து விட்டு நாளை முதல் மீண்டும் புத்துணர்ச்சியுடனும், புதுத் தெம்புடனும் பாடு படலாமே என்றொரு நப்பாசை. குளித்து முடித்துக் காலை ஆகாரம் சாப்பிட்டானதும் துணைக்கு வருவதாகக் கூறிய அவ்வீட்டுக்குரியவரைத் தட்டிக் கழித்து விட்டுத் தனியாகக் கிளம்பிச் சென்றான்.

நடக்க நடக்க அவன் இதயத்தில் இன்பம் நிலவியது. நிம்மதி பரவியது. குரோதம் கோபம், கவலை, துவேஷம், வெறுப்பு எல்லாம் எப்படியோ எங்கோ, இருந்த இடம் தெரியாமல் மறைந்து ஒழிந்து விடுவது போலவும், பரிபூரணமான சாந்தி நிலவும் நெஞ்சத்துடன் தான் போவது போலவும் அவனுக்கு ஒரு பிரமை உண்டாயிற்று.

பொன்னகரம் என்ற பெயர் தான் அந்த ஊருக்கு எவ்வளவு பொருத்தம்? செல்வம் கொழிக்கும் நகரமாக அது என்றோ ஒரு நாள், சரித்திர காலத்தில் இருந்திருக்கலாம். ஆனால் அது இன்று வேறொரு விதத்தில் பொன்னகரமாக விளங்கியது. பொன்னை உருக்கி வார்த்தாற் போல் எங்கும் பரவிய கதிரவனின் ஒளியில் குளங்களும் இதர நீர் நிலைகளும் தகதகத்தன. மக்களின் உள்ளங்களிலெல்லாம் அந்தப் பொன்னொளி பரவிப் பரிசுத்தமாக்கி இருந்தாற்போல் தோன்றியது. அந்த இதயங்களில் சூதுவாது, பொறாமை, துவேஷம் ஏதுமில்லை; நிச்சலனமான தூய்மையான பொன்னான மனங்கள்.

கலப்பையைத் தெய்வமாக மதித்துக் கடமையைச் செய்த, ஆரோக்கியமான உடலும் உள்ளமும் கொண்ட தொழிலாளர்கள் அவர்கள்.

பொன் விளையும் வளமான பூமி. பொன்னிறத்தில்தான் தானியக் கதிர்கள் அறுவடைக்குத் தயாராகக் காற்றில் மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்தன. இதையெல்லாம் பார்க்கப் பார்க்கப் பூர்வீகச் சொத்தில் உழுது பயிரிட்டு உற்சாகமாக வாழாமல் தாமரைத் தொழிலகத்தைத் தொடங்கியதே தவறோ என்றுகூட நினைக்க ஆரம்பித்து விட்டான் தங்கப்பன். தொழிலகம் திறக்கப்பட்ட நாள் முதலாய் ஒரே பிரச்னைகள்; பிரச்னைகள் பிரச்னைகள்தான்! மூச்சு விடக்கூட ஒழியாமல் ஒரே பரபரப்பு மிகுந்த வாழ்க்கைதான்! போதாக்குறைக்குப் பொதுத் தேர்தலும் அது கிளப்பிவிட்ட புதுப் புதுச் சிக்கல்களும் வேறு!

தன் மனம் தளர்வது தங்கப்பனுக்கே பிடிக்க வில்லை. 'என்னுடைய நோக்கங்களில் தவறில்லை; உயர்ந்த லட்சியங்களைச் சென்றடையும் பாதை எப்போதுமே யாருக்குமே எளிதானதாக இருந்ததில்லை' என்று சமாதானம் கூறிக் கொண்டான். 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்பது போல் வெளிப் பார்வைக்கு இங்கு எல்லாமே அமைதியாக, இன்ப மயமாகத் தோன்றினாலும் இந்தப் பாட்டாளி மக்களின் வாழ்க்கையிலும் சிக்கல்களும் பிரச்னைகளும் இல்லாமலா போய்விடும்? இங்குள்ளவர்களிடையேயும் சண்டை பூசல் போட்டி பொறாமை இவை இல்லாமலா இருக்கும்? இவ்விதம் எண்ணி மனத்தைத் தேற்றிக் கொண்டு மேலே நடந்தான் தங்கப்பன்.

கிராமப்புறங்களுக்கு அருகிலேயே இருந்தும் அவற்றின் வளத்தையும் வனப்பையும் இதுகாறும் நின்று நிதானித்து ரசிக்கக் கூட

தென்னிந்தியர்களின் சுவைக்கேற்றபடி பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது





ஜி. பி
பெருங்காயம்

உயர்தர மிஸ்கி கலவை

கோபால்ஜீ அண்டு கம்பெனி, 218, சாமுவல் ஸ்ட்ரீட், பம்பாய் 3

ஏஜெண்ட்: தென் இந்தியா

கோபால்ஜீ அண்டு கம்பெனி, 203, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, தபால் பெட்டி எண் 1255, மதராஸ்-1

ஏஜெண்டுகள் தேவை—

எல்லா முக்கிய பலசரக்கு கடைகளிலும் கிடைக்கும்.



மிடுக்கான மற்றும் சிரமமின்றி உபயோகிக்கத்தக்க *பிரைட்* பிளாஸ்டிக் சாமான்கள்.

பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் நேர்த்தியான மற்றும் நவீன காலத்திற்கு தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் வெளியில் சாமான் வாங்க கடைகளுக்குச் செல்லும்போதோ, அல்லது வீட்டிற்குச் சமையல் செய்யும்போதோ, இளைப்பாறுதலை வேலை செய்து போக்குகிறீர்களோ அல்லது நம் வேடிக்கைக்கேண்டு போக்குகிறீர்களோ — எதனாலேனும் உங்களுடைய வாழ்க்கையை சிரமமின்றியதாகவும், மகிழ்ச்சிகரமாகவும் பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் உங்கள் கம்பீரமாக்கும் பாத்திரமாகின்றன. ஒவ்வொரு தயாரிப்பும் இரண்டு விதம் கொண்ட தனிப்பட்ட தோற்றமுள்ளவை. ஒன்று-பிரகாசமானதும் மற்றும் வசீகரமானதும்; மற்றது, சிரமமின்றி உபயோகிக்கத்தக்கதும் மற்றும் பலமிக்கதுமாகும். அழகுக்கும் மற்றும் சிக்கனத்திற்கும் அதுவே ஒரு சரியான இணைப்பு. ஒவ்வொரு விருப்பத்திற்கும் மற்றும் ஒவ்வொரு தேவைக்கும் தகுதியான வகைகளில் பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் பல வண்ணம் கொண்ட ரகங்களில் கிடைக்கின்றன.

எல்லா முதல்தரமான ஸ்டோர்களிலும் கிடைக்கின்றன.

பிரைட் பிரதர்ஸ் பிரை. லிட்.,
155-A தாரதேவ் ரோடு, பம்பாய்-34.

பிரைட்தான் உங்கள் சரியான தேர்ந்தெடுப்பு!





ASP/ASF-42 TAM

நேரமின்றி ஒரே அவசர வாழ்க்கை வாழ்ந்து வந்திருப்பதை எண்ணி வெட்கப்பட்டவாறே ஒரு கேணியைச் சுற்றிக்கொண்டு வரப்புக்கு மேலாக நடந்து சென்றான். சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் ஒரு கூட்டம் திரண்டிருப்பதைக் கண்டான்.

'ஏதாவது தேர்தல் பொதுக் கூட்டமாக இருக்குமோ?' என்று நினைத்தவனுக்கு உடனே வேறு திசையில் திரும்பிவிட வேண்டும் போலிருந்தது. இன்று ஒரு நாள் அவன் தேர்தல் பிரச்னைகளை மறந்து ஓய்வெடுத்துக் கொள்ள வல்லவா ஆசைப்பட்டான்?

ஆனால் அங்கு தென்பட்ட கூட்டத்தில் ஒரு புதுமை, ஒரு விநோதம் இருப்பதாய் அவனுக்குத் தோன்றியது. அத்தனை பேர்களும் வண்ண வண்ணச் சேலைகள் அணிந்த மாதர்கள்! ஏதோ ஒப்புக்குக் கூட அங்கே ஒரு முண்டாசு கட்டிய ஆடவனைக் காணோம்!



பையன் : நன்றாக இருக்கிறது : யாரேனும் பார்த்தா இந்த வயசிலே கும்மி அடிக்கிறேன்னு சிரிக்கப்போறா! கோக அடிக்கிறேன்கிறது அவாளுக்குத் தெரியுமா?

தங்கப்பனுக்கு இது விசித்திரமாகப்பட்டது. அருகில் நெருங்கி ஆராய அவன் விரும்பினான்.

பக்கத்தில் போகப் போக அது ஒரு பள்ளிக்கூடம் என்பது புரிந்தது. 'முதியோர் பள்ளிக்கூடம் என்பார்களே, அதுதானோ இது? அதிலும் இது பெண்களுக்கென்றே பிரத்தியேகமாக ஏற்பட்ட முதியோர் பள்ளியா? கணவன்மார்களுக்கெல்லாம் கஞ்சித் தண்ணிக் கொடுத்தனுப்பிவிட்டு மனைவிமார்கள் பள்ளிக்கூடம் வந்து விட்டார்களா? பேஷ், நல்ல ஏற்பாடுதான்!'

மரத்தினடியில் ஒரு பக்கமாக கரும் பலகை யொன்று பூமியில் வேரூன்றினிட்ட ஆலமர விழுதொன்றில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அதில், 'க, கா, கி' என்ற மூன்று எழுத்துக்களும் அவற்றின் அருகில், 'கழுதை, காகம், கிளி' என்ற சொற்களும் எழுதப்பட்டிருந்தன. அதையடுத்து அவற்றின் படங்களும் வரையப்பட்டிருந்தன.... அந்தப் படங்களைப் பார்க்கும் போதே ஒரே வருப்பைக் கொண்ட அந்தப் பள்ளியின் ஒரே ஆசிரியருக்கு ஓவியக் கலையில் திறமை மிக மிகக் குறைவு என்பது புரிந்தது.

கரும் பலகையை விட்டுச் சற்றுத் தள்ளி ஒரு நாற்காலி கிடந்தது. 'அதுதான் உபாத்தியாயருடையது போலும்! மேஜை கிடையாதோ? எளிமையான இச்சூழலில் எளிய முறையில் நடத்தப்படும் இந்தப் பள்ளிக்கு, உபாத்தியாயருக்கு மேஜை, முதியோரான அந்த மாணவிகளுக்கு டெஸ்டுகள் என்றெல்லாம் எதுவும் வேண்டியதில்லையே. அதற்கெல்லாம் பணத்துக்குத்தான் எங்கேபோவது? அப்புறம் சுவர் என்றும் கூரை என்றும் தேவைகள் மேலே மேலே வளர்ந்து கொண்டே போகும். இப்போது இருக்கிற படி இருப்பதே நல்லது.

'அதெல்லாம் சரிதான், ஆனால் அந்த உபாத்தியாயர் எங்கே?'

சட்டென்று ஆசிரியர் அங்கு இல்லாத தற்குக் காரணம் தங்கப்பனுக்குப் புரிந்தது. அந்தப் பள்ளிக்கு உபாத்தியாயரே கிடையாது என்பதுதான் அந்தக் காரணம்! ஆம், உபாத்தியாயினிதான் இருந்தாள்!

முதியோர்களான அந்த மாணவிகளிடையே உலவி வந்தாள் அவள். அவளுடைய முதுகைத் தான் தங்கப்பனால் பார்க்க முடிந்தது. 'ஏதோ மாணவிகளிடம் பேசிக் கொண்டே அவள் கரும் பலகையை நோக்கி நிதானமாய் நடக்கிறாளா? அல்லது அவர்கள் சிலேட்டுப் பலகையில் எழுதுவது சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டே நகர்கிறாளா?'

கரும் பலகையை அணுகி அதில் ஏதோ எழுதி விட்டுத் திரும்பினாள் அவள்.

தங்கப்பனெதிரே பட்டப் பகலில் ஒரு மின்னல் பளிச்சிட்டது. அந்த ஒளியின் தாக்குதலால் விழிகள் நிலைகுத்தி நின்று விட்டன போல் அவன் ஆடாமல் அசையாமல் நின்று அவளையே நோக்கியபடி இருந்தான்.

அந்தப் பெண் தற்செயலாக அவன் இருந்த பக்கமாகத் திரும்பினாள். இரண்டொரு கணங்களுக்கு அவர்களுடைய விழிகள் சந்தித்தன. 'எதற்காக இவர் இப்படி நம்மையே வெறித்து நோக்குகிறார்' என்று சந்தேகிப்பது போல் அவள் புருவங்கள் சுருங்கின. சில விநாடிகள்தான்; அதை அடுத்து, தொடர்ந்து தன் கடமையை ஆற்றினாள் அவள். தமிழ் பாடப் புத்தகத்தை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தவாறே உரக்கப் படிக்கலானாள். சற்று நேரத்துக்குப் பின் அவள் தலை நிமிர்ந்தபோது அவன் அவ்விடத்தை விட்டு அகலவும் இல்லை, பார்வையை அவளிடமிருந்து அகற்றவுமில்லை எனக் கண்டாள்.

'இதென்ன வேண்டாத தொல்லை' என்று அலுத்துக் கொள்பவள்போல் பெருமூச்சு

விட்டபடி புத்தகம் இருந்த கரத்தைத் தாழ்த்தித் தொய்ய விட்டாள். பின்னர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாகப் புதியதொரு சுறுசுறுப்புடன் அவள் தனது வகுப்பிலிருந்த மாதர்களைப் பார்த்து, ''உங்களில் எத்தனை பேர்கள் நேற்று மாலை நடந்த பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

ஒரே சமயத்தில் பல குரல்கள், ''நான்! நான் வந்தேனுங்களே! நேத்துத்தானே? கேட்டேனுங்களே!'' என்பதுபோல் பரவலாக எழுந்தன.

அவர்களைக் கையமர்த்தி அமைதி நிலவச் செய்துவிட்டு அவள் குறிப்பிட்ட ஒரு பெண்மணியை மட்டும் சுட்டிக்காட்டி அவளிடம், ''நேற்று தேர்தல் கூட்டத்தில் பேசினாரே, ஒரு தொழிற்சாலை முதலாளி? அந்தப் பிரசங்கம் பற்றி உன் கருத்து என்ன?'' என்று விசாரித்தாள்.


தங்கப்பனின் செவிகளிலும் அவள் பேச்சு விழுந்தது. சுவாரசியத்துடன் அவன் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான். அந்தப் பெண் சாதாரணமாகப் பழகு தமிழில் உரையாடாமல் புத்தகத் தமிழைக் கையாள்வது கண்டு உடனடியாக அவள் தமிழகத்தைச் சேர்ந்தவளாக இருக்க முடியாது என்று அனுமானித்து விட்டான் தங்கப்பன். 'வடக்கேயிருந்து வந்து ரொம்பவும் சிரமப்பட்டு ஓரளவு தமிழ் கற்றுக் கொண்டவள் போலும். ஆரம்ப வகுப்புப் பாடங்களைப் போதிக்க அதிகமான புலமை தேவையில்லைதானே?'

''நல்லாத்தானுங்க பேசினாரு'' என்று விடை கிடைத்ததை யடுத்து அவள், ''அவருடைய சொற்பொழிவின் சாரம் என்ன என்பது விளங்கியதா உங்களுக்கு?'' என்று கேட்டு விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் தானே தொடர்ந்து கூறினாள் : ''சர்க்கார் துறையைவிடத் தனியார் துறை ரொம்பவும் நல்லது; தனியார் துறையிலே வர்த்தகமும் தொழில்களும் நடந்தால் போட்டா போட்டி காரணமாக உற்பத்தியாகும் பொருள்களும் நன்றாக இருக்கும், நிறைய விற்பனையாகும் என்றெல்லாம் தனியார் துறையைச் சொன்னார். தனியார் துறையை எவ்வளவு வேணுமானாலும் தாராளமாகப் புகழட்டும். ஆனால் சர்க்கார் துறை, சர்க்கார் துறை என்று பட்டம் சூட்டினாரே, அது என்ன என்று பார்க்க வேண்டும். சர்க்கார் என்றால் யார்? ஜனநாயகத்திலே மக்கள்தான் சர்க்கார். அதனால்தான் ஜனநாயகம் என்றே பெயர் வந்தது. ஆகவே அது சர்க்கார் துறையல்ல; மக்கள் துறை! ஆங்கிலத்திலே அதைப் 'பப்ளிக் எண்டர்பிரைஸ்' என்பார்கள். தமிழ்ப்படுத்தினால் மக்கள் துறை என்றுதானாகும். வேண்டுமானால் மக்கள் துறை என்றும் முதலாளிகள் துறை என்றும் சொல்லட்டுமே? மக்கள் துறையில் தொழிலோ, வியாபாரத்திலோ வரும் லாபமெல்லாம் அரசாங்கம் மூலமாக மக்களுக்கே வந்து சேரும். முதலாளிகள் துறையில் கிடைக்கும் லாபமெல்லாம் அந்தத் தொழிலதிபரின் பண மூட்டை பாத்துக் கொண்டே போக உதவும்! இதுதான் வித்தியாசம். இதை விட்டு விட்டு எங்கோ இருக்கிற, சர்க்கார் என்ற பெயர் கொண்ட எவரோ கொள்ளையடித்துக் கொண்டு போய் விடுவதுபோல் பயங் காட்டி, சர்க்கார் துறை என்று மக்களிடமிருந்து சர்க்காரைப் பிரித்துப் பேசி, ஜனரை ஏமாற்றப் பார்க்கிறார்கள். இப்போது நான் உங்களைக் கேட்கிறேன், 'உங்களுக்கு மக்கள் துறை வேண்டுமா, முதலாளிகள் துறை வேண்டுமா?''

''மக்கள்துறைதான்! மக்கள் துறைதான் வேண்டும்!'' என்று பல குரல்கள் ஒருமித்து எழுந்தன.

தங்கப்பன் வியப்பும் திகைப்பும் மிகநின்றான். 'இவள் கற்றுக் கொடுப்பது என்ன? 'அ'னா, 'ஆ'வன்னாவா, அரசியல் பிரச்னைகளா? இந்த முதியவர்கள் படிப்பது, கழுதை, காகம் கிளி என்று அல்லது கம்யூனிஸ சித்தாந்தங்களையா?' (தொடரும்)

போனால் போயேன்!







சேவைக்கு ஒரு சகோதரி!

மோனிகா ஃபெல்டன்
— அருந்ததமா

சகோதரி சுப்புலக்ஷ்மி இப்போது அந்தச் சம்பவத்தை நினைவுகூர்ந்து என்னிடம் கூறுகையில் சிரித்தாரே ஒழிய அந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது யாருக்குமே அது சிறிதும் வேடிக்கையாகத் தோன்றவில்லை. ''என் தகப்பனார் மிகவும் கலங்கிவிட்டார். அவர் எனக்காக மகத்தான தியாகங்கள் செய்திருந்தார். அவரைப் பற்றி இப்படியெல்லாம் சொன்னது எவ்வளவு கொடூரம், துஷ்டத்தனம்!'' என்று சகோதரி, பழைய ஞாபகங்களில் ஆழ்ந்து கூறினார்.

சுப்புலக்ஷ்மியின் உபாத்தியாயினிகளுக்கு அவளுடைய இந்த வெற்றியில் அதிசயப்படும்படியாக ஒன்றும் இருக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்ததைத்தான் சுப்புலக்ஷ்மி நிறைவேற்றியிருந்தாளே ஒழிய அதற்கு அதிகமாக எதையும் சாதித்து விடவில்லை. அவள் பரீட்சைகளில் நன்றாகச் செய்வாள் என்பது அவர்கள் எப்போதுமே அறிந்திருந்த விஷயம்தான்.

மேற்கொண்டு என்ன செய்வது என்பதுதான் இப்போதையப் பிரச்னை.

சுப்புலக்ஷ்மிக்கு வயது பத்தொன்பதரை.

''இனி நீ பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிடலாம். உன் கல்வி முற்றுப் பெற்று விட்டது'' என்று சுப்புலக்ஷ்மியிடம் அவள் தாயார் சொன்னாள்.

அன்றுவரை எப்போதுமே பெரியவர்களின் சொற்படி கேட்டு அடங்கி நடந்த சுப்புலக்ஷ்மி இப்போது மட்டும் இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இனி பி.டி. பள்ளியில் படிக்க ஒன்றுமில்லைதான். ஆனால் தொடர்ந்து கல்வி கற்கவே அவள் விரும்பினாள்.

''நீ எதற்காகப் படிக்க வேண்டும்? உபாத்தியாயினிகளாக ஆவதற்குத்தான் பெண்கள் கல்லூரிகளுக்குப் படிக்கப் போகிறார்கள்.'' சுப்புலக்ஷ்மி 'ஆமாம்' என்று தலையை ஆட்டினாள். ''நானும் ஆசிரியை ஆகத்தான் விரும்புகிறேன்'' என்றாள்.

அவள் தாயார் அவளை ஆச்சரியத்துடன் நோக்கினாள். அப்படியும் நடக்கலாம் என்று இதுவரை அவர்களில் யாரும் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. தவிர, அந்நாள்வரை எந்த ஒரு பிராமணப் பெண்மணியும், அதிலும் ஒரு விதவை, பள்ளி ஆசிரியையாக இருந்ததே இல்லை.

''உன் வயிற்றுப் பிழைப்புக்காக உன்னை நாங்கள் படிக்க வைக்கவில்லை. நீ அழுதுகொண்டேயிராமல் இருக்க வேண்டுமென்றுதான் படிக்க வைத்

தோம். இனி நீ வீட்டிலேயே இருந்து புத்தகங்களைப் படித்துக்கொண்டிருக்கலாம்'' என்றாள் விசாலாக்ஷி.

சுப்புலக்ஷ்மி தன் தகப்பனாரிடமும், சித்தியிடமும் முறையிட்டாள். இருவரும் அவள் கூறியதை ஆமோதித்து ஊக்குவித்தார்கள். மேல் படிப்பில் ஈடுபட்டுத் தனக்கென்று ஒரு வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று அவள் விரும்புவாளாயின், அதற்கு உதவி செய்ய வேண்டியது குடும்பத்தினரின் கடமை என்று அவர்கள் ஒப்புகொண்டார்கள்.

ஆனால் அவள் எங்கு படிப்பது?

அரசினரால் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டு, தன்னுடைய அலுவல்கள் நிமித்தம் அடிக்கடி பி. டி. பள்ளிக்கு விஜயம் செய்து கொண்டிருந்த ஓர் ஆங்கில மாது இப்போது அரச மரத்து வீட்டுக்கு வந்து சுப்புலக்ஷ்மியின் தந்தையுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தாள். தான் இந்தியாவுக்கு வந்திருப்பதே ஒரு பெரிய ஆசையினால் உந்தப்பட்டுத்தான் என்றாள் அந்த அம்மாள். ஒவ்வொரு தேசத்தினுடைய வருங்காலமும் அந்நாட்டுப் பெண் குழந்தைகளின் கல்வி நிலையையும், சமுதாயத்தில் மாதர்களுக்கு உள்ள மதிப்பையும் பொறுத்துத்தான் இருக்கிறது என்று அந்த அம்மாள் நம்பினாள். வருங்காலப் பிரஜைகளின் தாய்மார்களாக விளங்கப் போகும் இந்தியப் பெண்கள் மேல் நாட்டு யுவதிகளைப் போல அதே வகையில் இல்லாவிட்டாலும் தங்கள் நாட்டுச் சம்பிரதாயத்துக்கு ஏற்றபடி படிக்க வைக்கப்பட்டாலன்றிப் பாரதம் சந்தோஷமாகவும் செழிப்பாகவும் இறுதியில் சுதந்திரமாகவும் விளங்க முடியாது. — அந்த ஆங்கிலேய மாதின் ஆணித்தரமான கருத்து இது.

இதற்குக் கல்வி போதிக்கக் கூடிய இந்தியப் பெண்கள் தேவை என்றாகிறது. இங்கிலாந்துக்குப் போய் அங்கு கிடைக்கக் கூடிய கல்வியை எல்லாம் பெற்று மீண்டும் இந்தியாவுக்கு வந்து, இங்குள்ள பெண்களுக்கும் ஸ்திரீகளுக்கும் கல்வி போதிக்க வேண்டும். இந்தப் பணியை மேற்கொள்ளத் தகுதி வாய்ந்த பெண்கள் யாரேனும் உண்டா என்றுதான் சென்னை ராஜதானியில் தான் தங்கி யிருந்த பல ஆண்டுகளாக அந்த அம்மாள் தேடிக் கொண்டு இருந்தாளாம். ஆயினும் அவள் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. கடைசியில், இப்போது தம் ஆசை நிறைவேறக் கூடும் என்ற நம்பிக்கை அந்த அம்மாளிடம் துளிர் விட்டிருந்தது. ஆங்கில சர்வ கலாசாலை அளிக்கும் கல்வியை ஏற்கக் கூடிய பண்பும் மூளையும் சுப்புலக்ஷ்மிக்குப் பொருந்தி யிருந்தது என்பதை அவள் அறிந்திருந்தாள். சுப்புலக்ஷ்மி இங்கிலாந்து சென்று படிப்பதற்கு அவள் பெற்றோர்கள் அனுமதிப்பார்களேயானால் போக்குவரத்துச் செலவையும் இங்கிலாந்தில் அவள் தங்கியிருக்கும்போது நேரக்கூடிய செலவுகளுக்காக வருஷத்துக்கு மூந்நூறு பவுனும் சர்க்காரே தருவார்கள் என்று அம்மாது குறிப்பிட்டாள்.

அது மிகவும் அருமையான வாய்ப்புத்தான். ஆனால் சுப்பிரமணிய ஐயரும் அவர் மனைவியும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. வாழ்நாள் முழுதும் தெருவைத் தாண்டிப் பள்ளிக்கூடம் செல்வதைத் தவிர வேறு எங்கும் வெளியே செல்லாமல் பாதுகாக்கப்பட்ட இளமங்கையொருத்தி ஏழாயிரம் மைல்கள் தனியாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவது சாத்தியமே அல்ல என்பது ஒருபுறமிருக்க, அதைவிடப் பெரிய தடங்கலும் இருந்தது. ஒரு பிராமணன் கடல் கடந்து வெளி நாடுகளுக்குச் செல்வது என்றால் தீட்டாகும். அத்தகைய இழி செயல் ஜாதிப் பிரஷ்டத்தில் கொண்டு விடும். சில பிராமணர்கள் வெளி நாடுகள் சென்றார்கள் என்பது உண்மைதான். அவர்கள் திரும்பி வந்து நியமப்படி பிராயச்சித்தம் செய்து கொண்ட பிறகு தான் தங்கள் ஜாதியிலும் குடும்பத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் சம்பிரதாயத்துக்கு ஊறு நேரக்கூடியதைச் செய்வது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாக இருந்தது. அவள் குடும்பம் அவளுக்காகப் பல கோட்பாடுகளை மீறித்தான் இருந்தது. ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டல்லவா?

ஆகவே பிரச்னை முடிவு காணப்படாமல் அப்படியே இருந்தது. மேற்கொண்டு அவள் என்ன செய்வது?

சென்னை ராஜதானியில் எங்குமே பெண்கள் கல்லூரிகள் இருக்கவில்லை. பெண்கள் சர்வகலாசாலைப் பட்டம் பெறுவதற்கு ராஜதானிக் கல்லூரி ஒன்றுதான் இருந்தது. ஏதோ சில பெண்கள் அங்கு போனார்கள். அவர்கள் எல்லோருமே ஆங்கிலேயரோ அல்லது ஆங்கிலோ இந்தியரோ ஆவர். கல்லூரி முழுவதற்கும் ஒரே ஒரு பிராமணப் பெண்ணாக, இல்லை, ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒரே மாணவியாக மூன்று வருஷங்கள் அவள் இருந்து படிப்பது சரியாகத் தோன்றவில்லை.


SUNLIGHT
Soap

அது அவளுக்கே அச்சத்தை அளித்தது: சகோதரி சுப்புலக்ஷ்மி இப்போது என்னிடம் சொன்னார்: ''பல அந்நியப் பையன்களுக்கு மத்தியில் வகுப்பில் உட்கார நேரும் என்ற நினைப்பையே என்னால் அன்று தாங்க முடியவில்லை.''

கரும் பட்டினம் என்று அப்போது அழைக்கப்பட்ட ஜார்ஜ் டவுனில் பிரசன்டேஷன் கான்வென்டில் தொடர்ந்து படிக்க ஒருவேளை வாய்ப்பிருக்கலாம் என்று யாரோ அபிப்பிராயம் கூறினார்கள். அது நல்ல யோசனையாகத் தோன்றியது. ஆகவே சுப்பிரமணிய ஐயர் கான்வெண்டுக்குச் சென்று தலைவியைப் பேட்டி கண்டார். கட்டாயம் சுப்புலக்ஷ்மியை மாணவியாக ஏற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டாள் ஸேவியர் அம்மையார் (Mother Xavier). ஆனால் சர்வகலாசாலைப் பட்டம் பெற அங்கு படிக்க முடியாது. வேண்டுமானால், ஃபாகல்டி ஆப் ஆர்ட்ஸ் (Faculty of Arts) என்ற பரீட்சைக்குப் படிக்கலாம். கான்வென்டில் ஏற்கனவே ஒரு பெண் இந்தப் பரீட்சை எழுதத் தயார் செய்து கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் அதுதான் உசிதமானதாகத் தோன்றியது. விசாலாட்சி இதைத் தடை செய்யவில்லை. என்றாலும் அவளுக்கு சுப்புலக்ஷ்மி தொடர்ந்து படிப்பது சரிதான் என்ற நம்பிக்கையும் பிறக்கவில்லை. ஆனால் சித்தி அப்படியே மகிழ்ந்து போனாள்.

7

''உன்னுடைய நீண்ட பெயரைச் சொல்வதற்கு எங்கள் நாக்கு உருளாது போலிருக்கிறதே?'' என்றாள் மதர் பாட்ரிக். (Mother Patrick) அயர்லாந்திலிருந்து வந்திருந்த அவள் தனது செழுமையான ஐரிஷ் குரலில் இப்படிக் கூறிவிட்டு, அப்பொழுதுதான் அந்தப் பிரச்னை தனது மனத்தில் எழும்பியது போல் கொஞ்சம் நிதானித்தாள். 'உன்னை என்னவென்று அழைப்பது?' என்று கேட்டாள். சுப்புலக்ஷ்மி இதற்கு ஏதும் பதில் சொல்வதற்கு முன்பாகவே அவள், ''ஆ! நல்ல பெயர் கிடைத்து விட்டது. இனி உன்னை 'சிபில்' (Sybil) என்று அழைக்கிறோம். இது உனக்குப் பிடிக்கிறதா?'' என்று கேட்டாள்.

சுப்புலக்ஷ்மிக்கு அது கொஞ்சமும் பிடிக்கவில்லைதான். ஆயின் அந்தக் கான்வென்டில் சேர்ந்து அன்றைக்குத்தான் இரண்டாவது நாள். படிப்பை ஆரம்பிக்கும் முன்பேயே ஆசிரியைகள் கூறுவதை எதிர்த்துச் சொல்வது



''பிறந்த குழந்தைகளையெல்லாம் யாராரோ அழைத்துக் கொண்டு போகவில்லையா? என்னை யாரும் அழைக்கவந்து போகல்லேங்கறதுக்காக நான் எத்தனை நாள் இங்கேயே இருக்கிறது சிஸ்டர்?''

மரியாதைக் குறைவாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. அதனால், 'சரி'யென்று சம்மதித்து விட்டாள். அந்தப் புதுப் பெயரும் சீக்கிரமே அவளுக்குச் சகஜமாகி விட்டது.

இருந்தாலும், அந்த மாறுதல் ஒரு சந்தேகத்தையும் கிளப்பி விட்டது. கிறிஸ்துவ மதத்துக்கு மாறிவிட்ட பல இந்துக்கள், கிறிஸ்துவப் பெயர்களைச் சூட்டிக் கொண்டிருந்தனர். இந்தக் கன்னிகா ஸ்திரீ இதே விஷயத்தைத் தலைகீழ்ப் பாடமாக நடத்த முயல்கிறாள் என்றும், முதலில் கிறிஸ்துவப் பெயரைக் கொடுத்து விடுவது அவளைக் கிறிஸ்துவ மதத்துக்கு மாற்றுவதற்கு முதல் படியாக அமையும் என்று எதிர்பார்க்கிறாள் என்றும் சுப்புலக்ஷ்மி ஊகித்துக் கொண்டாள்.

அவளுடைய மற்றோர் உபாத்தியாயினி மதர் பால் (Mother Paul) என்பவள் தன்னுடைய புது மாணவி பாடங்களைச் சரிவரச் செய்ய வேண்டுமென்பதில் மட்டுமே கருத்தாக இருந்ததாகத் தெரிந்தது. உண்மையில் மதர் பால், மதர் பாட்ரிக் இருவருமே தரமான ஆசிரியைகள். சீக்கிரமே சிபில்—சுப்புலக்ஷ்மி, பி. டி. ஸ்கூலில் இருந்ததைப் போலவே கான்வெண்டிலும் சந்தோஷமாக இருக்க ஆரம்பித்தாள்.

ஒரு விதத்தில் அவள் முன்னைவிட அதிகமாக மகிழ்ச்சி கொண்டிருந்தாள் என்றுகூடச் சொல்லலாம். அந்தக் கான்வெண்டு அவர்கள் அரச மரத்து

வீட்டிலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருந்தது. கோடைக்குக் கோடை வெளியூர் கிளம்புவது தவிர எங்கும், வெளியே சென்றறியாத சுப்புலக்ஷ்மிக்குப் பள்ளிக்கூடம் போய் வரும் பிரயாணம் வேறோர் உலகத்துக்கே சென்று வருவது போல அத்தனை உற்சாகமாக இருந்தது.

சொந்தத்தில் ஒரு ஜட்கா வாங்கி, அதனை வாடகைக்கு ஓட்ட விரும்பிய ஒரு நிதான குணமுடைய வயோதிகனை வேலைக்கு அமர்த்திக் கொண்டார் சுப்பிரமணிய ஐயர். அவர் வண்டியை விலைக்கு வாங்கி ஜட்காக்காரனுக்குக் கொடுப்பது என்றும், இவர்களுக்குத் தேவைப்படாத சமயத்தில் அவன் அதைத் தன் இஷ்டப்படி பயன்படுத்திக் கொண்டு, மாதா மாதம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுப்பிரமணிய அய்யருக்கு வண்டி வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது என்றும் ஏற்பாடாயிற்று.

அது மிகவும் தரமான ஏற்பாடு தான். ஆனால் அந்தக் குதிரைதான் ஒரே ஒரு இடைஞ்சலாக இருந்தது. அது ரொம்பவும் பிடிவாதமும் முரட்டுத்தனமும் கொண்டதாய் விளங்கியது. சென்னை நகரத் தெருக்களைச் சுற்றிச் சுற்றி வருவதை அது வெகுவாக அநுபவித்தது போலும்! கான்வெண்டுக்குச் செல்லுவதற்கு அது அவசரப்படுவதாகவே காணோம். குறித்த நேரத்துக்கு முன்பாகப் போய்ச் சேர வேண்டும் என்று சுப்புலக்ஷ்மிக்கு அவா இருந்தும் நகரைச் சுற்றிப் பார்க்கவும் அவளுக்கு ஆசைதான்! அதனால், பாவம், அந்த வண்டிக்காரன் அந்த மிருகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தாலும் அவள் அதைப் பொருட்படுத்தவே இல்லை!

தினந்தோறும் காலையில் அவர்கள் சீக்கிரமே கிளம்பி மரங்கள் அடர்ந்து நிழல் விரித்த எழும்பூர்ச் சாலைகளைத் தாண்டி விடுவார்கள். வண்டிக்கூட்டில் உள்ளடங்கி அமர்ந்து வெளியே யார் கண்ணிலும் படாமல் மறைந்துகொண்டிருக்கும் சுப்புலக்ஷ்மி, சென்டிரல் ஸ்டேஷனிலிருந்தும், சென்ட்ரல் ஸ்டேஷனுக்கும் பூந்தமல்லி ஹைரோடு வழியாகச் செல்லும் கோச்சுகள், ரிக்ஷாக்கள், மாட்டு வண்டிகள் ஆகியவற்றை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பாள். குதிரை சரியான மார்க்கத்தில் சென்றால் சைனா பஜார் கடைகளும் அவளுக்குப் பார்க்கக் கிடைக்கும். காலையில் கடைகள் திறந்தவுடன் சாமான்கள் கடைகளுக்கு வெளியிலே குவிக்கப்பட்டு எங்கு நடைபாதை முடிகிறது, எங்கு கடைகள் ஆரம்பிக்கின்றன என்றே கண்டுகொள்ள முடியாதபடி காட்சியளித்தன. காஷ்மீரத்திலிருந்தும், இங்கிலாந்திலுள்ள கிட்டர்மின்ஸ்டரிலிருந்தும் வந்த கம்பளிகளும் விரிப்புக்களும் அங்கு இருக்கும். அற்புதமான மெல்லிய பத்தமடைக் கோரைப் பாய்களும் வாங்குபவரின் கண்ணெதிரே பரப்பப்பட்டிருக்கும். பாத்திரக் கடைகள் முன்னே பித்தளைப் பாத்திரங்களும், செம்புப் பாத்திரங்களும் கச்சிதமாகக் கோபுர வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும். துணிக் கடைகளில் மான்செஸ்டரிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் வந்த துணிகள் தோரணங்களாகத் தொங்கும். பக்கத்து ஷெல்புகளில் பெங்களூர், கொள்ளேகால், லக்னௌ, காசி, காஞ்சீபுரம் பட்டுக்கள் அடுக்கியிருப்பது தென்படும்.

அதற்குப் பிறகு அந்தக் குதிரை தவறான மார்க்கத்தில் திரும்பிவிட்டாலோ கருமான்களும், பூட்டு வேலை செய்பவர்களும் இருக்கும் தெருவிலோ அல்லது வீதியில் செல்பவர்களையெல்லாம் ஆயிரம் ஆயிரமாகப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் உள்ள தெருவிலோ சுப்புலக்ஷ்மி அழைத்துச் செல்லப்படுவாள். சில சமயம் அந்தக் குதிரை பழக் கடைக்குள் போய் விடும். அங்கு சிறியதும் பெரியதுமாக, கூரையிலிருந்து தொங்கும் வாழைப் பழங்களும் கடைகளில் நிரம்பி வழியும் கொய்யா, மூலாம், சப்போட்டா, மா, ஆரஞ்சு, திராட்சை, விளாம், மங்கொஸ்தீன், பப்பாளி போன்ற பழரகங்களும் தென்படும். அதற்குப் பிறகு ஷராப் கடைக்காரர்கள் தெரு. இருளடைந்த குகை போன்ற கடைகளில் தங்க வெள்ளிப் பாத்திரங்களும், தங்கச் சங்கிலிகளும், தாலிகளும் வளையல்களும் மின்னும். வைரம், கெம்பு, புஷ்பராகம், மரகதம் போன்ற ரத்தினங்கள் ஜொலிக்கும். சுப்புலக்ஷ்மி இத்தனை வருஷங்களாக மிகுந்த பாதுகாப்போடு வளர்க்கப்பட்டதன் காரணமாக உலகத்தில் இவ்வளவு அழகழகான பொருள்கள் இருக்கின்றன என்பதையே இதுவரையில் உணர்ந்திருக்கவில்லை.

அவள் வறுமையையும் பார்த்தாள். வீடில்லாத பல குடும்பங்கள் தெருக்களில் முகாமிட்டிருந்தன. ஹைகோர்ட்டின் கைப்பிடிச் சுவர்களை அடுத்துள்ள நடைபாதையில் அவர்கள் குடும்பம் நடத்தினார்கள். வருஷக் கணக்காகச் சுத்தமே செய்யப்படாதது போன்ற சட்டிப் பானைகளில் எதையோ சமைக்க,

அழுக்குக் கந்தை அணிந்த ஸ்திரீகள் துண்டுக் காகிதங்களையும் சருகுகளையும் கொண்டு அடுப்புப் பற்ற வைத்துக் கொண்டிருந்தனர். சுற்றிலும் குப்பை, கூளங்களில் தவழ்ந்து விளையாடின பச்சிளம் குழந்தைகள்.

கடைசியாக அவள் கான்வெண்டை அடைந்து, படியேறி, தன் வகுப்புக்குப் போய்ச் சேர்ந்த பிறகும்கூட அவளுக்கு அந்தப் பரிதாபப் பிறவிகளின் நினைவு மாறாது. அதை மறந்து மனத்தைப் புத்தகத்தில் லயிக்க வைப்பதற்கு அவளுக்கு மிகவும் மனோதிடம் தேவையா யிருந்தது.

* * *

அவள் கான்வெண்டில் சேர்ந்து சில வாரங்களே ஆகியிருந்த பொழுது, மதர் பாட்ரிக் ஒரு பைபிளை அவளுக்குப் பரிசளித்தாள். ''உன்னுடைய ஆங்கில ஞானத்தை அபிவிருத்தி செய்து கொள்ள நன்றாகப் பயன்படும்'' என்றாள்.

சுப்புலக்ஷ்மி அந்தப் பரிசைப் பெற்றுக் கொண்டாளே தவிர, வேறோர் உள்நோக்கத்தோடு இந்தக் காரியம் செய்யப்பட்டது என்று அவள் உறுதியாக நம்பினாள். ஆகவே அவள் அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று ஓரளவு சந்தேகத்துடன், ''நான் இதைப் படிக்கலாமா?'' என்று தன் தந்தையிடம் கேட்டாள்.

''கட்டாயம் படி. மிகவும் தூய்மையான, நேர்த்தியான ஆங்கிலத்தில் எழுதப்பட்டது இது என்பது உண்மைதான். மேலும், கிறிஸ்துவப் படிப்பினைகளில் எவ்வளவோ உன்னதமான விஷயங்கள் இருக்கின்றன. இனி நீ ஒரு குழந்தையல்ல. எல்லா மதங்களைப் பற்றியும் நீ அறிந்து கொள்வதுதான் முறை. பிறகு அந்தப் போதனைகளில் எவற்றிலெல்லாம் உனக்கு நம்பிக்கை ஏற்படுகிறது என்பதை நீயாகவே நிச்சயித்துக் கொள்ளலாம்'' என்று கூறினார் அவர்.

சில நாட்களுக்குப் பிறகு 'யூக்லிட்' பெரியப்பா வீட்டுக்கு வந்தார். அவர் மாடிக்குச் சென்று சுப்புலக்ஷ்மி தனியாகத் தன் அறையில் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், ''என்ன படிக்கிறாய்?'' என்று கேட்டார்.

''பைபிள்!'' என்று அவள் பதிலளித்தாள்.

''அதுதான் எத்தனை நன்றாக இருக்கிறது இல்லையா?'' என்று அவர் கேட்டார். பிறகு சிறிது நேரம் கழித்து, ''நீ படிக்க வேண்டிய புத்தகம் இன்னொன்று இருக்கிறது. நான் அடுத்த முறை வரும்போது அதைக் கொண்டு வந்து தருகிறேன். கர்னல் ராபர்ட் இன்கர்சால் (Colonel Robert Ingersoll) என்ற ஓர் அமெரிக்கர் எழுதியது அது'' என்றார்.

* * *

சகோதரி சுப்புலக்ஷ்மி இந்தக் கட்டத்தை விவரித்துக் கொண்டே வருகையில், மருமக்கள் பலர் அங்கு கூட்டமாக வந்தமையால் அவர் பேச்சு தடைப்பட்டு நின்றது. அவர் என்னிடம் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதை அந்த உறவினர்கள் அறிய விரும்பினார்கள். ஆனால் ஸிஸ்டர் தொடர்ந்து பேச மறுத்து விட்டார். கண்டிப்பான குரலில், ''இன்றைக்கு இவ்வளவு போதும். மற்றவை நீங்கள் அடுத்த முறை வரும்போது சொல்கிறேன்'' என்று கூறிவிட்டார். (தொடரும்)

வெள்ளித் திரையின் வெற்றி

என்தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்;
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்துநூறாக!
ஒன்றேனும் தமிழர்நடை யுடைபா வனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர் உள்ளதில்லை!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதாயில்லை!
ஒன்றேனும் உயர்நோக்கம் அமைந்ததுவா யில்லை!
ஒன்றேனும் உயர்நடிகர் வாய்ந்ததுவா யில்லை!
ஒன்றேனும் விழ்ந்தவரை எழுப்புவதா யில்லை!

என்று பாரதிதாசன் பாடிச் சென்ற காலத்துக்குப் பிறகும் தமிழ்ப் பட உலகில் கணிசமான முன்னேற்றம் ஏதும் காணுமே என்று சஞ்சலத்துடன் தலை குனிந்திருந்த ரசிகர்கள், ''என்னதான் முடிவு'' திரையிடப்பட்ட நாள் முதலாக 'இதோ ஒரு லட்சியப் படம்' என்று இப்போது மீண்டும் தைரியமாக நிமிர்ந்து உட்கார ஆரம்பித்திருக்கிறார்கள்! (ரசிகர்கள் என்னும்போது வெறும் பொழுது போக்குக்காக மட்டும் படம் பார்ப்போரை நாம் குறிப்பிடவில்லை.)

இடையிடையே அபூர்வமாய் ஒன்றிரண்டு நல்ல படங்கள் வரத்தான் செய்தன. ஆனால் 'என்னதான் முடிவை'த் தொடர்ந்து தமிழ்த் திரைப்பட உலகில் ஒரு புதிய சகாப்தம் தோன்றித் தழைக்க வேண்டும் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் அளவுக்குத் திரை உலகின் தரத்தை உயர்த்தி யிருக்கிறார் திரு கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

அவர் அப்படி என்னதான் சாதித்து விட்டார்? அல்லது எதைச் செய்யாமல் இருந்தார்?

திரு கே. எஸ். கோபாலகிருஷ்ணன் செய்யாத காரியங்கள்:

1. திரைக் கதைக்காக வடநாட்டுக்குப் படையெடுக்கவில்லை. தமிழ்நாட்டுப் பத்திரிகை யொன்றில் — சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் — வெளியான 'மகரிஷி'யின் சிறு கதையை ஆதாரமாகக் கொண்டு படம் எடுத்திருக்கிறார்.

2. இப்படத்தில் ஆபாச தொனிப் பொருள்களுடன் கூடிய தரக் குறைவான பாடல்கள் ஏதுமில்லை.

3. வடநாட்டு மெட்டுக்களையும் மேனாட்டு டியூன்களையும் காப்பி அடிக்கவில்லை.

4. ராக் அண்டு ரோல், டுவிஸ்டு போன்ற மேனாட்டுச் சாயலுடைய கேளிக் கூத்துக்களுக்கோ, எகிப்திய பெல்லி நடன பாணியில் அமைந்த பயங்கரங்களுக்கோ படத்தில் இடமளிக்கவில்லை. இதற்கு மாறாக, இவை தமிழ்த் திரை உலகைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஆட்டுவித்து வந்தும்கூடத் துணிந்து இந்நிலை தவறு என்று கருதித் தாக்கியும் இருக்கிறார்.

திரு கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இந்தப் படத்தில் சாதித்திருப்பவை:

1. ஏராளமான பணத்தைக் கறுப்பாகவும் வெளுப்பாகவும் அள்ளிக் கொடுத்துப் பிரபல நட்சத்திரங்களைப் பிடித்துப் போட்டு அவர்கள் ஆட்டுவிக்கிற மாதிரியெல்லாம் ஆடிப் படமெடுத்தால்தான் சிறப்பாக அமையும் என்ற மாயையைத் தகர்த்திருக்கிறார்.

2. பெருமளவு முதலீடு செய்து ஏகப்பட்ட லாபம் அல்லது மகத்தான நஷ்டம் என்ற சூதாட்டத்துக்கொப்பான திரை உலகப் பொருளாதார நிலையை மாற்றி, அத்தியாவசியமான குறைந்தபட்ச முதலீடு செய்து நியாயமான லாபம் பெற இயலும் என்கிற அடிப்படையில் படமெடுத்து, இவ்விதத்தில் இத்துறையில் உள்ள மற்ற எல்லோருக்குமே நல்லதொரு முன்னோடியாக விளங்குகிறார்.

3. அருமையான கருத்துக்கள் உள்ள நல்ல கதையைப் படமாக எடுத்திருக்கிறார். கதை, 'சினிமாக் கதை'யாக இராமல் கூடுமான வரை வாழ்க்கையோடு ஒட்டினதாக இயல்பாக அமைந்துள்ளது. நம்ப முடியாத கதைத் திருப்பங்கள், காட்சிகள் ஏதுமில்லை.

4. ஒரு படத்தின் உயர்வுக்குத் திறம்பட நடிக்கும் பிரபல நட்சத்திரங்கள்தான் முக்கியம் என்ற நம்பிக்கையைத் தவிடுபொடியாக்கி யிருக்கிறார். டைரக்ஷனுக்கு அதற்கு நியாயமாக உரிய முதலிடத்தைத் திரும்பவும் பெற்றுத் தந்திருக்கிறார். சிறந்த டைரக்ஷன் காரணமாக, சாதாரணம் — சுமார் என்றெல்லாம் நாம் நினைக்கக் கூடிய நடிகர்களும் சோபிப்பதை நிரூபித்திருக்கிறார். வி. எம். ராஜன், வி. எஸ். ராகவன் ஆகியோர் அபாரமாக நடித்திருப்பதைக் காண்கிறோம். ஏன், பழம் பெரும் நடிகரான டி. எஸ். பாலையா கூட இந்தப் படத்தில் நடித்திருப்பதுபோல் இதற்கு முன் வேறு எந்தப் படத்திலும் நடித்ததில்லை என்று நற்பெயர் பெறும் அளவுக்கு டைரக்ஷன் உயர்வாக இருக்கிறது.

'செட்'டில் டைரக்டரும் பாலையாவும்



5. காதல் அம்சம் இருந்து, பிரதம பாகங்களை ஏற்கும் ஆண் பெண் நடிகர்களும் ஃப்ரீயாக 'நடித்து'க் கட்டிப் பிடித்துப் புரண்டால்தான் படத்தில் ரசிகர்களுக்குப் பிடிப்பு இருக்கும் என்ற குதர்க்கவாதத்தைக் குழி தோண்டிப் புதைத்திருக்கிறார்! என்னதான் முடிவில் காதல் கட்டங்கள் மிக மிகக்குறைவு.

6. படத்துக்கு விறுவிறுப்பூட்ட நாலு 'ரும்' குத்துச் சண்டைகள், இரண்டு கழிச் சண்டைகள், காரில் துரத்திக் கொண்டு விரையும் காட்சிகள், துப்பாக்கி நீட்டும் கட்டங்கள் போன்ற எதுவுமே சேர்க்கப்படவில்லை. இவை ஏதுமில்லாமலேயே என்னதான் முடிவு விறுவிறுப்புடன் விளங்குகிறது; சஸ்பென்ஸ் அம்சமும் இருக்கிறது! இத்தனைக்கும் கதையில் மர்மம் என்று கூறும்படி ஒன்றுமில்லை!

ஃ ஃ ஃ

என்னதான் முடிவின் இறுதியில் கொலையாளி தப்பித்துக் கொள்கிறானே, இது ஒரு முடிவா என்று பொறுப்புள்ள சிலர்கூடக் கேட்பது வியப்பளிக்கிறது. அவர்கள் கதையில் இன்னும் சிறிது கருத்துச் செலுத்தி ஊன்றிப் பார்க்க வேண்டும்.

கொலை புரிந்தவன் தண்டனை பெறாமல் இல்லை. ஒரே சமயத்தில் அவன் தன் இன்னுயிர் மனைவியையும் அருமை மகளையும் இழக்கிறான். அதுவும் அவர்கள் இறக்கத் தானே காரணமாகிறான். இதைவிடக் கடுமையான தண்டனை வேறென்ன வேண்டும்? பிறகு எந்தச் சொத்துக்காக அவன் கொலை செய்யத் துணிந்தானோ அந்தச் சொத்தையெல்லாம் அந்தச் செல்வந்தன் அவனுக்கென்றே உயில் எழுதி வைத்திருப்பதைக் கண்டதும் அவன் நெஞ்சம் மேலும் வேதனையுற்றுத் தவிக்கிறது. அவன் யாரைத் தனக்குப் பதிலாகச் சிறைக்கு அனுப்பினானோ, அந்த நிரபராதியுடைய நெருங்கிய உறவினர்களே, மனமுடைந்து சாகும் தறுவாயிலுள்ள இவனுக்கு ஆதரவும் புகலிடமும் அளித்துக் காப்பாற்றுகிறார்கள். இறுதியில் இதனை அறியும்போது குற்றவாளியின் உள்ளம் எந்த அளவுக்கு நெகிழ்ந்து துன்புற்றுத் துடிக்கும் ?

குற்றவாளி ஒருவனுக்குத் தண்டனை அளிப்பதுதான் எதற்காக? அவன் மனம் திருந்தி நல்வழியில் செல்ல வேண்டும் என்பதற்காகத்தானே? என்னதான் முடிவில் அவன் மனம் திருந்துவது மட்டுமல்ல, ஊர் ஊராகச் சென்று ஆலயங்கள்தோறும் போய் நின்று உள்ளம் உருக ஆண்டவனிடம் பாவ மன்னிப்புக் கோரிக் கெஞ்சுகிறான். எத்தனையோ தான தருமங்கள் செய்து மக்களால் தெய்வம் என்று போற்றப்படும் அளவுக்கு உயர்கிறான். அப்படிப்பட்ட ஒருவனுக்குச் சமூகம் கருணை காட்டுவதில் தவறென்ன இருக்க முடியும்? தூக்குத் தண்டனைகளுக்கே முடிவு கட்ட வேண்டும் என்று அறிஞர்கள் கருதும் காலமல்லவா இது?

சரி, இத்தனை செய்தவன் தான்தான் உண்மைக் குற்றவாளி என்று போலீசாரிடம் சரணடைந்து, தவறாகத் தண்டிக்கப்பட்டவனுக்கு விடுதலை தேடித் தரக் கூடாதா என்ற தர்க்கவாதம் எழுகிறது.

இதற்குத் தேவையான துணிவை ஆண்டவன் அவனுக்கு அளிக்காமலே இருந்து அவனைத் தண்டித்து விட்டார் என்றுதான் கொள்ள வேண்டும். குற்றத்தை அவன் ஒப்புக் கொண்டு சட்டப்படி அவன் தண்டிக்கப்பட்டிருந்தால் அவன் துன்பம் சீக்கிரத்தில், சுலபத்தில் தீர்ந்து போகும். ஆனால் இறைவன் கொலை புரிந்தவனை அத்தனை சுலபமாக விட்டுவிட விரும்பவில்லை போலும்! சமூக கௌரவம் என்பதாக ஒன்றினை ஏற்படுத்தி அவனைப் போலீஸாரிடமும் சரண் அடைய விடாமல் இறுதி வரை மனச்சாட்சி உறுத்திக் கொண்டேயிருக்க, அவன் சங்கடப்பட்டு அணு அணுவாகச் சாகாமல் செத்துச் சித்திரவதைக்குள்ளாக வேண்டும் என்பதுதான் ஆண்டவன் அவனுக்கு விதித்த தண்டனை போலும்!

இவையும் இவை போன்ற இன்னும் பல உயரிய கருத்துக்களும் விண்டு கூறப்படாமல் கதைப் போக்கோடு அழகாக, பாங்காக இழைந்து காணப்படுகின்றன. அதுவே ஒரு தனிச் சிறப்பு.

எத்தனையோ குற்றங் குறைகளை உடைய அர்த்தமற்ற கதைகளைப் படமாக்கித் திரைக்கதையில் உள்ள பொத்தல்களை, ஆபாச நடனங்களாலும், கத்திச் சண்டைகளாலும், திறமையான டெக்னிக்குகளாலும் கண்ணைப் பறிக்கும் வண்ண ஜாலங்களாலும் இட்டு நிரப்பி விடுகிற இக்காலத்தில், 'என்ன தான் முடிவு' போன்ற உயர்தரமான ஒரு படத்தில் சிறுசிறு குற்றங் குறைகளைத் தேடித் துருவிப் பார்த்துக் கண்டுபிடித்து மிகைப்படுத்திச் சுட்டிக்காட்டுவதில் அர்த்தமில்லை.

'என்னதான் முடிவு' நூறு நாள் ஓடி வெற்றி விழா கொண்டாடாமல் போகலாம்; பாக்ஸ் ஆபீஸ் எனப்படும் பண வசூலைப் பொறுத்த மட்டில் பெரிய வெற்றியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் தமிழ்ப்பட உலகின் மானத்தைக் காப்பாற்றும் விதத்தில் 'என்னதான் முடிவு' மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது.

படக்கலைதான் வாராதா எனநினைந்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,
படக்கலையாம் சனியொழிந்தால் போதுமென எண்ணும்!
பயன்விளைக்கும் விதத்தினிலே பலசெல்வர் கூடி
இடக்ககற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்
படமெடுத்தால் செந்தமிழ்நா டென்னும்இள மயிலும்
படமெடுத்தாடும்; தமிழர் பங்கமெலாம் போமே!

— புரட்சிக் கவிஞர்

ஒப்பற்றவை!
தரத்திலும் சரி,
விலையிலும் சரி



"மான்ஸெயின்ஸ்டு" நேஷனல்–எக்கோ ரேடியோக்களின் அமைப்பு, மேன்மையான உறுப்புகள், உழைப்பின் தரம் இவற்றோடு இதர ரேடியோக்களின் அம்சங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நேஷனல்–எக்கோ தான் உங்கள் பணத்துக்கு ஏற்ற மதிப்பு தருகிறது என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். நேஷனல்-எக்கோ ரேடியோக்கள் உஷ்ணப் பிரதேச கால நிலைகளால் பாதிக்கப்படாதபடி அதன் உறுப்புகள் பாதுகாக்கப்பட்டுள்ளன; அதனால்தான் இவை நீடித்து உழைக்கின்றன. உங்கள் அருகில் உள்ள நேஷனல்–எக்கோ வியாபாரியிடம் இன்றே சென்று இவற்றை இலவசமாக இயக்கிக் காட்டச் சொல்லுங்கள்!

மாடல் 806 :
6 வால்வுகள், 3 வேவ் பாண்டுகள்,
அழகிய பெட்டி.
மாடல் U-806
ஏஸி/டிஸி ஸெட்
மாடல் A-806 ஏஸி ஸெட்
ரூ. 395.00

விலைகள் எக்ஸைஸ் ட்யூடி உள்பட வரிகள் தனி


நேஷனல் எக்கோ

மான்ஸெயின்ஸ்டு
ரேடியோ

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் . கல்கத்தா . பாட்னா . மதராஸ் . பெங்களூர் . டில்லி . ஹைதராபாத்

JWT GRA

காதல் இல்லையேல் காதல்



சோ

[கனகசபையின் நிபந்தனைப்படி பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்க நாகராஜனுக்கு உதவி புரிய நண்பன் சுரேஷ் முனைந்து விட்டான். அதற்காகச் சுரேஷ் பம்பாய்ப் பிரமுகர் சபேசனிடம் நாகராஜன் சார்பில் காவடி யெடுத்தான்!]

சுரே: பம்பாயிலேயிருந்து நான் வந்து ரெண்டு நாள்தான் ஆறது.... ஸார். ஒரு விஷயம்.....

சபே: என்ன?

சுரே: கொஞ்சம் சாவகாசமாப் பேசணும். அங்கே போய் மணைலே உட்காரலாமா ?

சபே: எனக்கு டைம் இல்லே! சட் புட்னு சொல்லி விஷயத்தை முடி!....

சுரே: அப்படி அவசரமா சொல்ற விஷயம் இல்லே ஸார்.

சபே: அப்போ சொல்லாதே.

சுரே: ஸார்..... நீங்க எவ்வளவோ கலைஞர்களுக்கெல்லாம் உதவி பண்ணியிருக்கீங்க ஸார். உங்களை மாதிரி கலை ஆர்வம் சில பேருக்குத்தான் இருக்கும்.

சபே: சில பேருக்கு இருக்குமா?

சுரே: சில பேர்னு என்ன? ஒருத்தர் இரண்டு பேருக்கு இருக்கும் அவ்வளவு தான்.

சபே: யாரவன், இன்னொருத்தன்....?

சுரே: இன்னொருத்தன் ஏது?.... உங்களை மாதிரி கலை ஆர்வம் இருக்கிறவங்களை நான் பார்த்ததில்லே. ஸார், நான் சொல்ல வந்த விஷயம்......

சபே: எனக்கு டைம் இல்லே....

சுரே: நான் சுருக்கமா சொல்லிடறேன்....

சபே: ஷார்ட்ஹாண்ட்லே சொல்லப் போறியா? ரிப்போர்ட்டர் புத்தியைக் காட்டறியே !......

சுரே (சிரிப்பு வராமலே சிரித்து): ஹாஹா! என்ன தமாஷா பேசறீங்க ஸார்... வந்து ஸார்...எனக்குத் தெரிஞ்ச கவிஞர் ஒருத்தர்...

சபே: கவிஞர்.... வாட் கவிஞர்?

சுரே: தமிழ்க் கவிஞர்.....

சபே: அவருக்கென்ன?

சுரே: கல்யாணம் பண்ணிக்கணுமாம். அதாவது.... தமிழ்க் கவிதையை மனைவியா ஏத்துக்கிட்டார் அவர்! அவ்வளவு தமிழ் ஆர்வம்!

சபே: வெரிகுட்! வெரிகுட்! நாளைக்கு வீட்டுக்கு அழைத்து வா, ஒரு டின்னர் வெச்சுடலாம்!

சுரே: ஏதோ உங்களை மாதிரி பெரிய மனுஷங்கதான் அவரைக் காப்பாத்தணும்.

சபே: ஏன்?

சுரேஷ்: கையிலே காலணா இல்லாம தவிக்கிற மானஸ்தன் — ஒருத்தர்கிட்டேயும் கேட்கவும் மாட்டாரு.

சபே: தனி ஆள்தானேய்யா? என்ன செலவு?

சுரே: நல்லாக் கேட்டீங்க. மாசத்துக்கு அஞ்சாயிரம் ரூபா இல்லாட்டா அவராலே சமாளிக்க முடியாது.

சபே: என்னய்யா இது? மாசத்துக்கு அஞ்சாயிரமா? சுரேஷ்! அவரு கவிஞர்தானே?

சுரே: ஒரு மாதிரி ஆள் ஸார் அவர். மொத்தமா இரண்டு மாசம் பத்தாயிரம் இல்லாட்டா அவராலே முடியாது. அப்புறம் வருஷக் கணக்கிலே காலணா இல்லாட்டாலும் கவலைப்பட மாட்டார். பெரிய ஜீனியஸ்!

சபே: ஆல் ரைட்... நான் போறேன். டைம் ஆறது.

சுரே: அவருக்கு உங்களாலே ஆன உதவி..

சபே: பணமா?

சுரே: ஏதோ கூடியவரைக்கும்....

சபே: நோ... நோ... தமிழ்க் கவிஞன் எல்லாம் இப்படித்தான் கெட்டுப் போறான். நானே இத்தனை நாட்கள் தப்புச் செய்துட்டேன். அவங்களுக்குப் பண உதவியே பண்ணக் கூடாது.

சுரே: என்ன சொல்றீங்க?

சபே: சுரேஷ், நேத்து ஒரு பத்திரிகையிலே ஒரு கட்டுரை படிச்சேன். பிரமாதம், பியூட்டிபுல்! அதுலே எழுதறான்: "தமிழ்க் கவிஞர்களைப் பழங்காலத்து ராஜாக்கள் எல்லாம் பணம் குடுத்து, பணம் குடுத்துக் கெடுத்துப்புட்டாங்க. அவங்களுக்குக் கை யேந்தி நிற்கிறதே வேலையாப் போச்சு. கவிஞன் சொந்தத் திறமையிலே பிழைக்கணும்" அப்படின்னு எழுதறான். எப்படி?

சுரே: எவன் எழுதினான் அதை? மடையன்!

சபே: நோ, நோ... அவன் சொல்றது தான் கரெக்ட். அதனாலே நான் இனிமே இந்த மாதிரி கவிஞன், ஆர்ட்டிஸ்ட், நடிகன் இவனுக்கெல்லாம் ஒண்ணுமே பணம் கொடுக்கப் போறதில்லே. அவங்களே சம்பாதிக்கட்டும். அப்பத்தான் அவங்களுக்கு மதிப்பு.

கரே: இவனுக்கு மதிப்பு வேணும் ஸார். பணம்தான் வேணும். அதாவது வந்து ஏற்கெனவே மதிப்பு இருக்கு. பணம் இல்லே.

சபே: சம்பாதிக்கச் சொல்லு.

கரே: அப்ப நீங்க அவனுக்கு உதவி பண்ண மாட்டீங்க!

சபே: அவனுக்குப் பணம் குடுக்க மாட்டேன். ஆனா அவன் குடும்பத்துக்குக் கொடுப்பேன்.


கரே: என்ன ஸார்?

சபே: ஆமாம்! கட்டுரையிலே போட்டிருக்கானே! கவிஞனுக்குப் பணம் கொடுக்கக் கூடாது. ஆனா அவன் இறந்துட்டா அவன் குடும்பத்தை யார் காப்பாத்துவாங்க? தமிழ்க் கவிஞன் குடும்பம் கஷ்டப்படலாமா? நம்பதான் உதவி பண்ணணும். தமிழ்க் கவிஞன் செத்துட்டான்னா, அவனே நம்பியிருந்தவர்களை நான் காப்பாத்துவேன்! கரேஷ், இந்தக் கவிஞன் செத்தப்புறம் எனக்குச் சொல்லு. அவன் சொந்தக்காரங்களுக்கு நான் பணம் தரேன்!

காட்சி – 13

(சென்னையில் ஒரு ஹாஸ்பிடல். மன்னிக்கவும் - சென்னையில் ஒரு ஹோட்டல் என்று இருக்க வேண்டும். தவறிப்போய் ஹாஸ்பிடல் என்று வந்துவிட்டது. மன்னிக்கவும் - யோசித்துப் பார்த்ததில் இந்தத் தவறுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமே இல்லையென்று தான் தோன்றுகிறது.

ஹோட்டலுக்கும் ஹாஸ்பிடலுக்கும் அப்படி என்ன பெரிய வித்தியாசம் இருக்கிறது? ஹாஸ்பிடலில் நுழைந்தவுடனே வேறெங்கும் இல்லாத ஒருவிதமான மணம் வீசி மூக்கைத் துளைக்கிறது - ஹோட்டலிலும் அப்படியே! ஹாஸ்பிடலுக்கு வந்து சேருகிறவர்களை மிரட்டி, அதட்டி அடக்கி வைக்க நர்ஸ்கள் இருக்கிறார்கள். ஹோட்டல்களில் அந்த நல்ல காரியத்தைச் செய்ய சர்வர்கள் இருக்கிறார்கள். ஹோட்டலில் நமக்கு ஒரு காரியமும் செய்யாமல் கவுண்டரில் பில் பணத்தை மட்டும் வாங்கிக்கொள்ள முதலாளி இருக்கிறார்.- ஆஸ்பத்திரியில் டாக்டர் இருக்கிறார்! ஹோட்டலுக்கு அடிக்கடி விஜயம் செய்பவர்கள் ஹாஸ்பிடலுக்கும் அடிக்கடி விஜயம் செய்ய நேரிடுகிறது! பசியைப் போக்க ஓர் இடம்,



பிணியைப் போக்க ஓர் இடம் - ஆனால் இரண்டு இடங்களில் எங்கு போனாலும் கடைசியில் நம்மை விட்டுப் போவது-பணம் மட்டுமே!

ஹோட்டலில் கசமுச என்று ஒரே சப்தம். ஒரு சர்வர் மசால் தோசை என்று கத்த, மற்றொருவன் அதே சமயத்தில் மெதுவடை என்று சமையலறையைப் பார்த்துக் கூச்சலிட, சரக்கு மாஸ்டர் இரண்டு கூக்குரல்களையும் சேர்த்து மசால் வடையை வெளியே அனுப்பி வைக்கிறார். மசால் தோசை கேட்டவரும் மெதுவடை கேட்டவரும், ஏதோ இந்த மட்டில் ஏதாவது கிடைத்ததே என்ற திருப்தியில் மசால் வடை என்ற பெயரோடு அளிக்கப்பட்ட அந்தப் பண்டத்தையே தின்கிறார்கள்.)

சர்வர்: டேபிள் கிளி.....ச...ச...ன்!

[அந்த டேபிளுக்கு நாகராஜனும் சுரேஷும் வருகிறார்கள்.]

சுரே: ஏம்பா, சர்வர்.... சூடா என்ன இருக்கு ?

சர்: டில்லி பாதுஷா, காசி ஹல்வா, பாம்பே பர்பி, கல்கத்தா ரஸகுல்லா, மைசூர் பாக், மங்களூர் போண்டா, காஞ்சீபுரம் இட்லி, ஆந்திரா சட்னி, பால்காட் சிப்ஸ் !

சுரே: ஆஹா! தேசிய ஒருமைப்பாட்டை இங்கேதான் பார்க்க முடியறது !

சர்: என்ன சார், சாப்பிடறேள்?

சுரே: காஞ்சீபுரத்தை ஆந்திராவோட கொண்டா.

சர்: என்ன ஸார்!

சுரே: காஞ்சீபுரம் இட்லி — ஆந்திரா சட்னி !

நாக: அப்படியே கொஞ்சம் குடிக்க ஜலம் கொண்டாப்பா.

(சர்வர் போகிறான்)

சுரே: எல்லாத்துக்கும் வெளியூர் பேர்—ஜலம் மட்டும் மெட்ராஸ் ஜலம்தான்! அதை எங்கேயாவது வெளியூர்லேயிருந்து கொண்டு வரக் கூடாதா? நம்ம தலைவிதி இந்த மெட்ராஸ் ஜலத்தைத்தான் குடிக்கணும்!

நாக: சுரேஷ், நீ போன காரியம் என்னடா ஆச்சு — அதைச் சொல்லவே இல்லையே ?

சுரே: இருடா, அதை விவரமா சொல்லத்தானே, இங்கே உன்னைக் கூட்டிக்கிட்டு வந்தேன்.

நாக: நீ பேசறதைப் பார்த்தா, போன காரியம் பலிக்கலே போலிருக்கே. அந்தப் பம்பாய் ஆசாமி ஏமாத்தலையா ?

சுரே: அவர் என்னை ஏமாத்திட்டார்டா.



நாக: நான் கவிஞன் இல்லேன்னு அவருக்குத் தெரிஞ்சிருக்கும்.

சுரே: அதில்லேடா. அவர் பணம் தரதுக்குத் தயாரா இருக்கார். ஆனா ஒரே ஒரு கண்டிஷன்.

நாக: என்னடா சொல்லு. நான் செய்யறேன்.....

கரே: நீ செத்துப் போகனும்.

நாக: உன்னை நான் என்னடா பண்ணி னேன்? ஏன்டா, இந்த மாதிரி வேண்டிக்கறே?

கரே: நான் சொல்லலேடா. அவர்தான் சொல்றார். உயிரோட இருக்கிற கவிஞர் களுக்கு உதவி பண்றதை நிறுத்திட்டாராம். செத்துப் போன கவிஞன் குடும்பத்தைக் காப்பாத்துவாராம் !

நாக: செத்துப் போனால் பணம் தருவாரா? அவர் என்ன இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியா?

கரே: டேய், நாகு! உனக்கு இவர்தான் ஒரே சான்ஸ். இவரை விட்டா வழியில்லே. எப்படியாவது இவர்கிட்டயே அந்தப் பணத்தைக் கறக்க வேண்டியதுதான்.

நாகு: எப்படிடா முடியும்? நான் செத் தாத்தானே பணம் தருவார்?

கரே: நீ செத்துப் போயிடு.

நாகு: உருப்படுவியா நீ! மகாபாவி, என்னைச் சாகச் சொல்றியேடா !

கரே: உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். கவிஞனுக்குச் செத்தால்தான் மதிப்பு. உயி ரோட இருந்தா ஒருத்தரும் கவனிக்க மாட்டாங்க.

நாகு: ஏன்டா, இந்த உலகம் இப்படி இருக்கு!

கரே: அதுக்குக் காரணம் இருக்கு. உயிரோட இருக்கறச்சே கவிஞனைப் புகழ்ந்தா, அவன் மேலே மேலே கவிதை எழுதிக்கிட்டே போய்ப் பிராணனை வாங்குவானே! செத்தப் புறம் புகழ்ந்தா அந்தப் பயம் இல்லே, பாரு.

நாகு: கவிஞர்களைப் பத்திக் கேவலமாப் பேசாதே. எனக்குக் கோவம் வரும் !

கரே: ஆஹா! இவர் பெரிய கவிஞர். என்னடா, நீ நிஜமாவே ஒரு கவிஞன்னு நினைச்சுக்க ஆரம்பிச்சுட்டியா ?

நாகு: கரேஷ், இப்ப என்னடா வழி ?

கரே: அதான் சொல்லிட்டேனே....

[சர்வர் இரண்டு பிளேட் இட்லியை டேபிளில் வீசிவிட்டுப் போகிறான்.]

நாகு: என்ன? என்னைச் செத்துப் போகச் சொல்றியா ?

கரே: ஆமாம்! இட்டிலியைச் சாப்பிடு... எல்லாம் தானா நடக்கும்....

சர்: என்ன ஸார், மேலே என்ன?

நாகு: காப்பி கொண்டாப்பா. போதும்.

(சர்வர் போகிறான்)

கரே: ஏன்டா இப்படி ஜீவன் இல்லாமே பேசறே! நாகு, ஒன்னும் பயப்படாதே. நான் பிளான் போட்டு வெச்சிருக்கேன்.

நாகு: செத்துப் போன்னு சொல்ல உனக்கு எப்படிடா மனசு வரது? உன்னை நம்பினேனே, நான் ஒரு முட்டாள் !

கரே: கரெக்ட்! இன்னும் பத்து தடவை சொல்லு. டேய், முட்டாள், நான் சொன் னதை நீ புரிஞ்சுக்கலே. நீ செத்துப் போக ணும். அவர் பணத்தைத் தரணும், நீயே உயிரோட இருந்து அதை வாங்கிக்கணும். அதான் என் பிளான்.

நாகு: என்னடா உளர்றே எழவு ?

கரே: டேய், கவனமா கேளு. நான் பாம்பே போகச்சே நீயும் என்னோட அங்கே வர வேண்டியது. போன உடனே நான் எங்க பேப்பர்லே ஒரு நியூஸ் 'பப்ளிஷ்' பண்ணப் போறேன்.

நாகு: என்ன நியூஸ் ?

கரே: ''பிரபல இளம் கவிஞர் நாகராஜன் மாரடைப்பினால் திடீர் மரணமடைந்தார்!'' இதான் நியூஸ். இதை வெச்சுக்கிட்டே இரண்டு பத்தி நியூஸ் எழுதிடுவேன்.

நாகு: அப்புறம்?

கரே: கையிலே அந்தப் பேப்பரை எடுத்துக் கிட்டு உன்னையும் அழைச்சுக்கிட்டு அவர் வீட்டுக்குப் போவேன்.

நாகு: என்னை எப்படிடா அழைச்சுக்கிட்டுப் போவே? நான்தான் செத்துப் போயிட்டேனே – அதாவது – நான் செத்துப் போயிட்டேன்னு நியூஸை அவர் படிக்கறச்சே அவர் எதிரிலேயே நான் எப்படிடா இருக்க முடியும்?

கரே: நிதானமாக் கேளு. நீ செத்துப் போயிட்டேன்னு நியூஸ் போடறேன் பாரு. அதுலேயே, ''நாகராஜனுக்கு ஒரு தம்பி உண்டு. நாகராஜனும் அவரும் இரட்டைப் பிறவிகள்'' அப்படின்னு போட்டு உன் போட்டோவையே இரண்டு காப்பி எடுத்து ஒன்னு நாகராஜன், ஒன்னு அவர் தம்பின்னு 'பப்ளிஷ்' பண்ணிடுவேன். பாம்பே வந்ததுலேயிருந்து, நீ நாகராஜன் இல்லே, நாகராஜன் தம்பி தியாகராஜன் ! உன்னைத் தியாகராஜன்னு அறிமுகப்படுத்தி, 'கவிஞன் நாகராஜன் செத்துட்டான். தம்பி தியாகராஜனுக்கு உதவி பண்ணுங்க'ன்னு அந்தப் பம்பாய் வள்ளல்கிட்டே கேட்பேன்!

நாக: இது நடக்குமா ?

கரே: நடத்திக் காட்டறேன். பாம்பேலே நாகராஜன் நினைவு நாள்னு ஒரு மீட்டிங்– தலைவர் நம்ப பம்பாய் வள்ளல்! அவர் கழுத் திலே மாலையைப் போடுவேன். தலையிலே ஐஸை வெப்பேன். காரியத்தைச் சாதிக் கிறேனா இல்லையா, பாரு.

நாக: எனக்குப் பயமா இருக்குடா.

கரே: பயந்தாங்கொள்ளி! இதை விட்டா வேறே வழி கிடையாதுடா.

(சர்வர் காப்பி கொண்டுவருகிறான்)

சர்: இரண்டு காப்பி நீங்கதானே கேட் டேள் ?

கரே: ஆமாம்! எப்பவோ கேட்ட மாதிரி ஞாபகம்.

சர்: இந்தாங்க பில்! (போகிறான்)


கரே: இதை மட்டும் உடனே குடுத்துடு.

நாகு: கரேஷ்.... நீ சொல்ற மாதிரி பண்ணினா கடைசியிலே ஏதாவது வம்புலே மாட்டிக்கப் போறேன்டா !

கரே: கவலைப்படாதே. மாட்டிக்கிட்டா என்ன ஆயிடும்? இரண்டு வருஷம் உன்னை தள்ளுவான். வெளியிலே வந்த உடனே, 'கம்பிக்குப் பின் இரண்டு ஆண்டுகள்'னு புஸ்தகம் போடு. நான் பப்ளிஷ் பண்றேன் ! அதுலே பத்தாயிரம் ரூபா பண்ணலாம், மாலதியைக் கல்யாணம் பண்ணிக்க !

நாகு: நல்ல ஐடியாதான் இது. ஆனா ஒரே ஒரு கஷ்டம். இரண்டு மாசத்துலே பத்தா யிரம்னு கனகசபை கண்டிஷன். நீ சொல்ற படி பார்த்தா இரண்டு வருஷங்கள் ஆறது ! மத்தபடி முதல்தர யோசனை. (ஆத்திரத் தோடு) ஏன்டா, ராஸ்கல்? என்னைக் கம்பி எண்ண வைக்கறதுன்னு பிளான் பண் ணிட்டியா ? (தொடரும்)


ஒரு கிளாஸ்
கிஸான்
ஸ்க்வாஷ் அருந்தி
இளைப்பாருங்கள்


KISSAN
ORANGE
SQUASH



கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

49. சிங்கமுகன் சமருக்கு ஏகினான்

ஸ்கந்த புராணத்தில் சிங்கமுகன் வதம் ஒரு சிறந்த பகுதி. சிங்கமுகனுக்கு ஆயிரம் தலைகள்; இரண்டாயிரம் கைகள். ஆன்மாக்களின் சுபாவம் எப்படியிருக்கிறது என்று ஆராய்ந்தால் ஒன்றுபோல் இன்னோர் ஆன்மா இருப்பதில்லை. ஒரே தாய் தந்தையர்க்கு நான்கு பிள்ளைகள் பிறந்தால் நான்கு பிள்ளைகளும் நான்கு விதமாக இருக்கின்றன. ஆனால் மரத்தில் பழுக்கின்ற பழம் அப்படியில்லை. ஒரு மரத்தில் பச்சரிசி மாங்காய் இனிப்பாக இருக்கிறதென்றால், அந்த மரத்தில் காய்க்கும் எல்லாக் காய்களும் இனிக்கும்.

மனிதன் அப்படியில்லை. ஒரே தாய் தந்தையருக்குப் பிறந்தவர்களில் ஒருவன் திருடனாக இருப்பான்; வேறொருவன் தர்மவானாக இருப்பான். ஒரே தாய் தந்தையருக்குப் பிறந்த சூரன் — சிங்கமுகன் இவர்களிடையே இத்தகைய குணசித்திர வித்தியாசத்தைக் காண்கிறோம். சூரன் முற்றிலும் தீயவன். சிங்கமுகனுக்கோ நீதி தெரியும். ஆனால் அதைக் கையாள முடியவில்லை. பாவம் என்று தெரிந்தும் அந்தச் செயலையே செய்வான். முருகப் பெருமானின் பிரபாவங்களைச் சூரபன்மனிடம் சிங்கமுகனைப் போல் வேறு எவரும் எடுத்துச் சொல்லவில்லை. அவ்வளவு எடுத்துச் சொல்லியும் பயனில்லாமல் போகவே அவனே முருகனிடம் போருக்குத் தயாராகி வந்து விட்டான்.

ஆன்மாக்களுக்கு மூன்று மலங்கள் உண்டு. ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம் என்று அவற்றுக்குப் பெயர். ஆணவ மலம் இயல்பாக இருப்பது. இடையிலே வருவது கன்ம மலமும் மாயா மலமும். ஆணவ மலத்தைப் போக்கவே இவை இடையில் வருகின்றன. தேரை ஓட்ட வேண்டுமானால் சன்னமும், மிதிக்கின்ற சறுக்கு மரமும் வேண்டும். சறுக்கு மரமாக இருப்பது கன்ம மலம். மூங்கில் சன்னமாக இருப்பது மாயா மலம். இந்த இரண்டு சாதனங்களைக் கொண்டு ஆணவ மலம் செயல் படுகிறது. சூரபன்மன் ஆணவ மலம், சிங்கமுகன் மாயா மலம்; தாரகாசுரன் கன்ம மலம்.

சூரபன்மனுக்கு உற்ற துணையாக இருந்தவர்கள் எல்லோரும் அழிந்து விட்டார்கள். சிங்க முகன் மட்டுமே உயிரோடு இப்போது இருக்கிறான். நால் வகைச் சேனைகளோடும் அவன் வீரமகேந்திரபுரம் வந்து சூரபன்மனை விரைவிலடைந்து அவனது காலில் அடியற்ற மரம்போல் விழுந்தான். ''தம்பீ!'' என்று துன்பமும் அன்பும் ஒழுக அழைத்து அவனை ஆசனத்தில் அமர வைத்தான் சூரபன்மன்.

''அண்ணா! தூதர்கள் எல்லாவற்றையும் சொன்னார்கள். மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் எட்டாத முழு முதற் கடவுளைப் பாலகன் என்று எண்ணிவிட்டீர்கள். என் பேச்சையும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. தானாகவும் தெரியாமல், பிறர் சொல்லியும் கேளாமல் கெட்டீர்களே'' என்று துக்கப்பட்டுச் சொன்னான் சிங்கமுகன்.

மூலமும் முடிவுமில்
லாத மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை
படுவ தோர்ந்திலை
ஆலம தானதே
ஐய என்மொழி
மேலையின் விதியையார்
வெல்லும் நீரினார்.

பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடினார் ஒருவர். வரப் போகிற வரன் முப்பத்திரண்டு குணங்களும் பொருந்தியவனாக இருக்க வேண்டும் என்று வந்த ஜாதகங்களை யெல்லாம் கவனமாகப் பார்த்தார். எந்த ஜாதகமும் முப்பத்திரண்டு குணங்களுடன் பொருந்தி வரவில்லை. கல்யாணத் தரகர் ஒருவர் அவரிடம் வந்தார். ''ஒரு வரன் இருக்கிறான். பெரிய இடத்துப் பிள்ளை. சர்வ லட்சணங்களும் பொருந்தியவன். முப்பத்திரண்டு குணங்களில் இரண்டு மட்டுமே குறைவாக இருக்கிறது. அந்த வரனைப் பேசி முடித்து விடலாமா?'' என்று கேட்டு மாப்பிள்ளையின் புகைப் படத்தையும் காண்பித்தார்.

புகைப்படத்தைப் பார்த்த பெண்ணின் தந்தை ''இந்த வரனையே நிச்சயம் செய்து விடுங்கள்'' என்று கூறினார். தரகருக்கு ஐந்நூறு ரூபாய் தரகும் தந்து விட்டார்.

திருமணம் நிச்சயமாகி விட்டது. காலையில் ஆறு மணிக்கு முகூர்த்தம். மாப்பிள்ளை வந்து மணவறையில் உட்கார்ந்தார். மணப் பெண்ணும் வந்து அமர்ந்தாள். திருமாங்கல்யதாரணம் நடந்து விட்டது. பொரி சிந்துவது என்று ஒரு சடங்கு. திருமணம் நடத்தி வைத்த புரோகிதர் மாப்பிள்ளையின் கையில் பொரியை அள்ளிக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்ட மாப்பிள்ளை வாயில் போட்டுக் கொண்டார். அதைக் கண்டு சபையிலிருந்தவர்கள் எல்லோரும் சிரித்துவிட்டார்கள். பெண்ணைக் கொடுத்தவருக்கு எப்படி இருக்கும்? முப்பது குணங்களை யல்லவா எதிர்பார்த்தவர்?

புரோகிதர் மெதுவாக மாப்பிள்ளையிடம் ''பொரியை நெருப்பில் போட வேண்டும்'' என்றார்.

''முதலிலேயே சொல்லக் கூடாதா? ஹூம்...இப்போது போட்டால் போகிறது'' என்று சொல்லிக் கொண்டே வாயில் போட்டுக்கொண்ட பொரியை நெருப்பில் துப்பினார்.

புரோகிதருக்கு ஒருபுறம் சிரிப்பு; மற்றொரு புறம் கோபம். ''மாப்பிள்ளை! நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம்; நானே உங்களுக்காக ஹோமம் செய்கிறேன். நீங்கள் சும்மா உட்கார்ந்திருங்கள்'' என்றார். உடனே மாப்பிள்ளை முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தார். அதைக் கண்ட புரோகிதர், ''இப்படி உட்காரக் கூடாது'' என்று கூறினார். உடனே மாப்பிள்ளை மணவறையை விட்டு எழுந்து வேகமாகச் சென்று விட்டார்.

மணப்பெண்ணின் தந்தைக்கு ஆத்திரம் பெருகியது. ''கொண்டு வா அந்தத் தரகனை'' என்றார். தரகர் வந்ததும் அவர் தம்மை ஏமாற்றி விட்டதாகக் கடிந்து கொண்டார்.

தரகர் சொன்னார்: ''நான்தான் அப்பொழுதே சொன்னேனே—முப்பத்திரண்டில் இரண்டு குணங்கள் குறைவு என்று; மாப்பிள்ளைக்குத் தன்னாலும் தெரியாது. பிறர் சொன்னாலும் தெரியாது.''

சூரபன்மனும் இதே குண விசேஷம் பெற்றவன்தான். இதனை எடுத்துக் காட்டிய சிங்கமுகாசுரன் ஒரு முத்தாய்ப்புக் கொடுத்தான். ''அண்ணா! வெள்ளம் வந்த பின் அணை போடுவதில் பயனில்லை. முன் வினையை யாரால் வெல்ல முடியும்? நான் அதிகம் பேசவில்லை. போருக்குச் செல்கிறேன். ஆனால் திரும்பி வரமாட்டேன். வேலாயுதத்திடம் சென்று யார் திரும்ப முடியும்? நீங்களாவது அழியாமல் இருக்க வேண்டும். தேவர்களைச் சிறையிலிருந்து விட்டுவிடுங்கள்.''

விடைபெற்றுக் கொண்டான் சிங்கமுகன்.

மகேந்திரபுரியிலுள்ள தன் மாளிகையைச் சென்றடைந்த சிங்கமுகன் அன்ன மலைகளையும், மாமிசக் குன்றுகளையும், பால், தயிர், நெய், கள், இரத்த ஏரிகளையும் தின்று, குடித்து, போர்க் கோலம் பூண்டான். பத்து லக்ஷம் குதிரைகளைப் பூட்டிய தேரில் ஏறி, மந்திரிகளும் மைந்தரும், இலட்சம் வெள்ளம் சேனைகளும் சூழப் போர்க்களத்துக்குச் சென்றான்.

சிங்கமுகாசுரன் போருக்குச் செல்வதை யறிந்த நான்முகன், இந்திரன் திருமால் முதலிய வானவர்கள் பயந்து பாசறைக்கு விரைந்தனர். திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கந்தக் கடவுளைத் தொழுது. ''ஆயிரம் தலைகளையும், இரண்டாயிரம் கைகளையும் உடைய சிங்கமுகாசுரன் போருக்கு வருகிறான். அவன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்றவன். ஆயிரம் யோசனை உயரமுள்ளவன். அளவில்லாத வரம் பெற்றவன். பூமியை ஒரு கையால் தாங்க வல்லவன். வீரத்தில் மட்டுமின்றி வஞ்சனையிலும் மாயையிலும் வல்லவன். மேரு மலையைத் தண்டாயுதம் என்று எடுத்து அண்டகடாகத்தை அடித்தவன். எவ்வுலகத்தையும் பிணிக்கத் தக்க இரண்டு பாசங்களை ஏந்திய கைகளை யுடையவன். சூரபன்மனுக்குத் தம்பியான இவன் எண்ணற்ற சேனைகளோடு வருகிறான். அவனைக் கொன்று எங்களைக்

நாளுக்கு நாள்...

உங்கள் மேனியெழிலை ஓங்கச் செய்வது

ரெக்ஸோனு

அழகுசாதனத் தைலங்கள் இணைந்த விசேஷக் கலவையாகிய 'கேடில்' அடங்கியது ரெக்ஸோனு ஒன்றுதான், பூரிக்கும் இன்ப நறுமணம் நேரமெல்லாம் உங்கள்மீது நின்றுநிலவச் செய்வது ரெக்ஸோனு ஒன்றுதான். அன்றாடம் உபயோகியுங்கள் ரெக்ஸோனு.



'கேடில்' அடங்கிய ரெக்ஸோனு
உங்கள் மேனியெழிலுக்கு உகந்தது

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

காத்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

வானவர் வேண்டுகோளைச் செவி மடுத்தார் கந்தக் கடவுள். வாயு தேவனை அழைத்து, ''நம்முடைய தேரைக் கொண்டு வா'' என்று பணித்தார். பெருமானே போருக்குப் புறப்பட எண்ணி விட்டார் என்பது புலனாயிற்று. அது அவரது கௌரவத்துக்குத் தகாது; சூரன் மீண்டும் போருக்கு வருமளவும் பெருமான் வர வேண்டியதில்லை எனக் கருதினார் வீரவாகு தேவர். முருகவேளைப் பணிந்து, ''எம்பெருமானே, வந்திருப்பவனோ சூரபன்மனின் தம்பிதான். நான் சுப்பிரமணியரின் தம்பி. தம்பி மீது தம்பியைப் போருக்கு அனுப்புங்கள் நம்பி'' என்று வேண்டிக்கொண்டார்.

'சிங்கமுகாசுரன் எதிரில் நிற்கக்கூட உனக்கு ஆற்றல் இல்லை' என்று சொல்லாமலே எம்பெருமான் திருவுள்ளத்தில் சிரித்துக் கொண்டு, ''நல்லது. சேனைகளுடன் முன்னே நீ செல்வாயாக'' என்று கூறியருளினார்.

தம் மாளிகைக்குச் சென்ற வீரவாகு தேவர் போர்க் கோலம் பூண்டு இலக்கத்தெண்மரும் ஆயிரம் வெள்ளம் பூதப் படைகளும் சூழப் போர்க்களத்தை யடைந்தார். போர்க்களத்தில் பூதப் படைகளும் அவுணப் படைகளும் போரைத் தொடங்கின.

அவுணப் படையினரின் வீராவேசத் தாக்குதலால் பூதப் படையினர் நிலை குலைந்தனர். பூத சேனைகளின் நிலையைக் கண்ட சிங்கன் என்னும் பூத சேனாபதி ஒரு தண்டத்தை எடுத்து ஆத்திரத்துடன் அவுணர்களைத் தாக்கினான். சிங்கனுக்கு எதிராக அவுணப் படையைச் சேர்ந்த தசமுகன் என்பவன் வில்லை எடுத்து மழை போல் பாணங்களைப் பொழிந்தான். அந்தப் பாணங்களையெல்லாம் சிங்கன் தண்டத்தால் அடித்து நொறுக்கினான். பின்னர் அதே தண்டத்தால் தசமுகன் அணிந்திருந்த கவசத்தையும் அழித்தான். கவசத்தை இழந்த தசமுகன் ஒரு தண்டத்தை எடுத்துச் சிங்கன்மீது வீசி யெறிந்தான். அந்தத் தண்டம் சிங்கன் மார்பில் பட்டதும் ஒடிந்தது. அதனைக் கண்டு ஆத்திரமடைந்த தசமுகன் ஒரு மழுவைச் சிங்கன் மீது எறிந்தான். அந்த மழுவை ஒரு தண்டினால் அடித்து வீழ்த்திய சிங்கன், அதே தண்டினால் தசமுகனின் வில்லை ஒடித்துத் தூளாக்கினான். தசமுகன் நெருப்புருவமாகிய வேல் ஒன்றைச் சிங்கனுக்கு எதிராகச் செலுத்தினான். சிங்கன் சக்கரப் படையை விடுத்து அந்த வேற்படையை அழித்தான். அதைக் கண்ட தசமுகன் ஒரு தண்டத்தை யெடுத்துச் சிங்கனின் மார்பை நோக்கி எறிந்தான். அந்தத் தண்டம் சிங்கனின் மார்பில் பாய்ந்தது. உதிரம் பொங்கியது. சிங்கன் கோபாவேசத்துடன் தசமுகனின் மார்பில் ஓங்கி அறைந்தான். அந்த அறை தசமுகனின் உயிரை மாய்த்தது.

பூத சேனையைச் சேர்ந்த அநகன் அற்புதமான போர்த் திறனைக் காட்டி அசுர சேனைகளை நிலைகுலைய ஓடச் செய்தான். துன்முகன் அவர்களைத் தடுத்து நிறுத்தி, ''வீரர்களே! இந்தப் பாணங்களைக் கண்டு நீங்கள் பயந்து ஓடலாமா? என்றைக்காவது சூரியனை மின்மினிப் பூச்சிகள் வெற்றி கொள்ள முடியுமா? என்னை நம்பிப் போரைத் தொடருங்கள்'' என்று ஊக்க மளித்தான். தனது வில்லை வளைத்துப் பாணங்களைப் பூதர்கள் மீது பொழிந்தான். அது பயனளிக்காதது கண்டு நூறு நூறு மாய வடிவங் கொண்டு ஒவ்வொரு பூதரையும் தாக்கினான்.

வீரவாகு தேவர் அவனுடைய மாய வடிவங்களை ஞானப் படையால் அழித்தார். அவுணர் படை யாவும் ஓட்டம் பிடிக்கத் தனித்து நின்றிருந்த துன்முகனின் வில்லையும், பாணங்களையும் கவசங்களையும் வீரவாகு தேவர் அழித்து விட்டார். 'இனி இவர்களுடன் போர் செய்தால் இறப்பது திண்ணம். ஆகவே ஒளிந்துகொள்வதே பிழைக்க வழி' என்று கருதி ஒரு மந்திரத்தை உச்சரித்தான் துன்முகன். மந்திர மகிமையால் விண்ணில் மறைந்தான். ''ஓடி ஒளிந்த அவனை விரைந்து சென்று பிடிப்போம்; வாருங்கள்'' என்று பூதர்கள் கூறினார்கள். வீரவாகு தேவர் ''யுத்தத்துக்குப் பயந்து ஓடியவர்களையும் சரணடைந்தவர்களையும் கொல்லுதல் தகாது'' என்று நீதி கூறினார்.

பூத சேனைகள் அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தன.

அவுண வீரர்கள் தோற்று நாலா திசைகளிலும் ஓடுவதைக் கண்ட சிங்கமுகாசுரன் முன்னணிக்கு வந்தான். பூதர்கள் அவன் முன் கூடி மலைகளையும் மழுக்களையும், தண்டங்களையும் எழுப்படைகளையும் வீசிப் போரிட்டார்கள். சிங்க முகாசுரன் அவற்றை நோக்கிப் பெருமூச்சு விட்டான். அவ்வளவுதான். பூதர்கள் சண்டமாருதத்தில் அகப்பட்ட பூளைப் பூக்கள் போல் போயினர். **(தொடரும்)**

ஜான்வர்

நண்பர் ஒருவருக்குப் பாகற்காய் என்றால் உயிர். மார்க்கெட்டுக்குச் சென்றவர் பச்சைப் பசேல் என்றிருக்கும் கொம்புப் பாகற்காயைப் பார்த்தார். 'பிட்லை' வைத்தால் எவ்வளவு ருசியாக இருக்கும்? நாக்கைச் சப்பிட்டுக்கொண்டு தேவையான அளவுக்கு வாங்கிவந்துவிட்டார். அரிவாள் மணையில் கொடுத்த அவரது மனைவிக்குப் பெரும்பாடாகப் போய்விட்டது. வெளியே நன்றாக இருந்த பாகற்காய்க்குள்ளே புழுக்கள். பிரயாசைப்பட்டுப் பூச்சியரித்த பகுதியைச் சீவி எறிந்துவிட்டு நல்ல பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு நாக்குக்கு ருசியான 'பிட்லை'யைத் தன் கணவருக்குப் பண்ணிப் போட்டுவிட்டாள்.

மிருகம் என்று பொருள் தரும் 'ஜான்வர்' என்னும் இந்த ஹிந்திப் படம் இந்தக் கொம்புப் பாகற்காய் கதையைத்தான் நினைவுறுத்துகிறது. விமரிசகனைக் காட்டிலும் ரசிகர்களே எடை போட்டு நீரையும் பாலையும் பிரித்து உண்ணும் அன்னப் பறவையாகத் திகழ்ந்தால்தான் திரைப் படங்கள் முன்னேற முடியும்.

பிருத்விராஜ், ஷம்மி கபூர், ராஜஸ்ரீ, ராஜேந்திரநாத் முதலியவர்கள் நடிக்கும் இந்தப் படத்தில் கதை



அம்சம் வெகு குறைவு. ஷம்மி கபூரின் நடிப்பைக் காட்டிலும் ராஜேந்திரநாத்தின் கேலி நடிப்பு நன்றாக இருக்கிறது. பிருத்விராஜ் தமக்கு இயல்பான கம்பீரத்துடன் நடித்தும் பேசியிருக்கிறார். டேப் ரிக்கார்டரின் பேச்சுக்கு இசைய ஷம்மி கபூரும் ராஜஸ்ரீயும் நடித்திருப்பது பாராட்டத் தக்கது. மேநாட்டுத் துரித நடனம் ஒன்றை அதற்கேற்ற பாட்டு, தாளம் ஆகியவற்றை உபயோகித்து மக்களின் மனத்தில் இனம் தெரியாத கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்டார்கள்.

மனிதன் தன்னிடையே எழும் மிருக உணர்ச்சிக்கு அடிமைப்பட்டாலும் மனிதனாக நடந்துகொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கூறும் இந்தப் படத்தில் தேசிய ஒருமைப்பாடு என்னும் சொல்லைக் கேலிக்கிடமான முறையிலே கையாண்டிருப்பதைக் கண்டுபிடிக்காமல் இருக்க முடியவில்லை.

பணம் படைத்தவர்கள் படம் எடுத்துவிடுகிறார்கள். படம் பார்த்துப் பார்த்துப் பழகிய மக்கள் பணம் கொடுத்துப் பார்த்து அவர்களுக்கு உற்சாகத்தை-, இந்த முறையில் படம் எடுக்கும் ஊக்கத்தை- ஊட்டுகிறார்கள், இதற்கு என்ன செய்வது?




கேரி ஆன் கிளியோ

சந்திரஹரி - இந்தனூர் - மிமாயணம் போன்ற (பிரபலமான கதைகளைத் தலைகீழ்ப் பாடமாக்கி) படங்கள் நம் நாட்டில் அந்தக் காலத்தில் வந்ததில்லையா? அதே போன்ற உத்தியை மேல் நாட்டிலும் கையாண்டு வெளியிடப்பட்ட படம்தான் கேரி ஆன் க்ளியோ - கிளியோபாட்ரா கதையைக் கேலி செய்வது போல் இக்கதை அமைந்திருக்கிறது. எல்லாம் எட்டிக்குப் போட்டி. சீசர் இளம் வயதினர், ஆண்டனி கிழவன். கிளியோபாட்ரா ஓர் அவலட்சணம் இப்படி எல்லாமே! தமாஷாக இருக்கிறது. ஆனால் இம்மாதிரி மாறுபட்ட பாத்திரப் படைப்புகளை ஏற்று நடிப்பது சுலபமானதல்ல. சீஸராக நடிப்பவர் பிரமாதப்படுத்தியிருக்கிறார். தமாஷ்ப் படம் என்பதற்காகக் காட்சி ஜோடனைகளில் குறை ஏதும் வைக்கவில்லை.

எலிஸபெத் டெய்லர் நடித்துச் சமீபத்தில் வெளி வந்த பிரபல கிளியோபாட்ரா படத் தயாரிப்பாளர் இந்தப் படத் தயாரிப்பாளர் மீது விளம்பரங்கள் தங்கள் படத்தைப் போன்றுள்ளதென்று வழக்காடியது நினைவிருக்கலாம். இந்த வகையிலும் தன்னைப் பிரபலப்படுத்திக்கொண்டுள்ள படம் இது- விளம்பரங்கள் மட்டுமல்ல, அப் படத்தில் வரும் பல காட்சிகளையும் இந்தப் படம் கேலி செய்கிறது. ஆனால் முந்தையது வருஷக்கணக்கில் உலகம் முழுதும் ஓடிக்கொண்டே இருக்க, இந்தப் படமோ...?





அவள் எங்கே?
சித்திரம்: ரமணி..
27
கதை: கௌசிகன்
மாலதியின் போட்டோ ஆல்பத்துடன் இருதயசாமியைப் போய்ச் சந்திக்கி-றார்கள்..
வாங்க.. வாங்க! அதிகாலை வேளையில இந்த ஏழையைத் தேடிக்கிட்டு...
உங்களுடைய திறமையைப் பத்தி இன்ஸ்பெக்டர் ரொம்பச் சொன்னாரு. உங்களாலே ஒரு முக்கியமான காரியம் ஆகவேண்டியிருக்கு.
இதோ இந்தப் படத்தைப் பார்த்தீங்களா? ... முடியுமா?
இந்தப் பொண்ணு போட்டோ எடுத்துக்கிட்டிருக்கிற இடம் இங்கிருந்து இருபது மைல்ல இருக்கிறது.. இந்த ஏரியை மாடத்தேவன் சுனைன்னு சொல்லுவாங்க. ஆனா ரொம்ப பேருக்குத் தெரியாது.. இது ஒரு ஒதுக்குப் புறமான-காடு.
இது மாடத்தேவன் சுனைதான் என்பதில் உங்களுக்குச் சந்தேகமில்லையே?
எனக்கா? அதோ பாருங்க அந்தப் பாறைக்குப் பின்னாலே அசோக மரத்து ஓரத்திலே வெள்ளையாத் தெரியுதே அது ஒரு ... பங்களா. இது போல ... பங்களாக்கள் அந்தக் காட்டுல இருக்கு. ஆனால் எல்லாம் பழசா ... அங்கே.
அப்போ இருதயசாமி நீ எங்க கூட வரணும். இந்த இடத்துக்குப் போக நீதான் வழிகாட்டியாகணும். என்ன?
ஐயா சொல்லிட்டா அப்புறம் அதுக்கு மறுப்புச் சொல்லுவேனா? ... கிளம்புங்க- போகலாம்



இனி நாம் மிகத் துரிதமாகச் செயல்பட வேண்டும். ஒவ்வொரு விநாடியும் ரொம்ப மதிப்புடையது.
குற்றவாளிகளுக்கு வசதியான நேரம் இரவு. நேற்றிரவு — என்ன விபரீதம் — நடந்திருக்கிறதோ?
இப்போது மணி ஏழாகப் போகிறது. ஓர் அரை மணியில் போய் விடலாமா இருதயசாமி?
சண்முகத்தின் டிரைவிங்கிலே வில்லிலிருந்து புறப்பட்ட அம்பென அற்புதமான வேகத்தில் வண்டி பாய்ந்து செல்லுகிறது...
அதோ.. அது என்ன கொட்டகை?
வேண்டாம். வேகமாகப் போவதே நல்லது.
ஆமாம்.. யாரோ ... சத்தம்.
வாருங்கள் போய்ப் பார்க்கலாம்.

தொடரும்..



உங்கள் கூந்தலின் உண்மையான
அழகை வெளிப்படுத்த
கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
COLGATE
HAIR OIL
பளபளப்புடனும், அடர்த்தியுடன் இளமைத் துடிப்போடும் விளங்கும் நீண்ட கூந்தலின் ரகசியம் தினந்தோறும் குளிக்குமுன் மயிர்க் கால்களிலும், கேசத்திலும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் தேய்த்துக்கொள்வதே என்பதை லக்ஷக்கணக்கான குடும்பத்தினர் அறிந்திருக்கின்றனர். அதன் உன்னதமான நறுமணத்திலும் நீங்கள் பரவசமடைவீர்கள்... கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் உங்கள் கேச வளர்ச்சிக்கு உதவுவதைக் கண்டு நீங்களே ஆனந்தமடைவீர்கள்!
அதன் பரவசமூட்டும் நறுமணத்தை உங்கள் குடும்பத்தினர் விரும்புவர்!
எகானமி சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கூந்தலுக்கு அழகும் நறுமணமும் சேர்க்க ரோஸ், லவண்டர், மல்லிகை ஆகிய 3 வசீகரிக்கும் சுகந்தங்களில் கிடைக்கிறது.
CCHO-G-6-TAM.

அத்தியாயம் நாற்பத்தொன்று

விதியின் நிழல்

மாலை நான்கு மணி இருக்கும். ஸ்ரீமான் மருதமுத்துவின் வீட்டுக்குப் பால் கறந்து கொடுத்துவிட்டு மாட்டை ஓட்டிக் கொண்டு தெருவுக்கு வந்த கன்னியம்மாள், அப்போதுதான் அங்கு வந்து நின்ற ஒரு டாக்சியைப் பார்த்தும் பாராதவளாய் மேலே நடந்தாள். மருதமுத்துவைப் பேட்டி காண எந்நேரமும் யாராவது வந்துகொண்டே யிருப்பார்கள் என்ற விஷயமும், அதனால் அவரது வீட்டெதிரே எப்போதும் ஒரு காரோ, டாக்ஸியோ, ஜீப்போ, லாரியோ, ஸ்கூட்டரோ — இவை இல்லை யென்றால் ஒரு குப்பை வண்டியாவது— நின்று கொண்டிருக்கும் என்பதும் அவளுக்குத் தெரியும். எனவேதான் அந்த டாக்சியைக் கவனியாமல் சென்றாள்.

''ஏ, பால்காரி! ஒன்மினிட் நின்னுக்கோ!''

இப்படி மரியாதை இல்லாமல் கூப்பிட்ட குரல் கேட்டுச் சுரீலெனக் கோபம் மூண்டவளாய்ச் சட்டென்று திரும்பிய கன்னியம்மாள், எழிலான உடையும், ஒயிலான புன்னகையுமாக டாக்சியை விட்டு இறங்கித் தன்னை நோக்கி வந்த ரோஸியை வெறித்துப் பார்த்தாள்.

''ப்ளீஸ், எக்ஸ்கியூஸ் மீ!'' என்று இளநகை புரிந்த ரோஸி, ''இது சினி—லாங்

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்



கம்போஸருடைய ஹவுஸ்தானே?'' என்று வினவினாள்.

அவளை ஏற இறங்கப் பார்த்த கன்னியம்மாள் தன் பிடியிலிருந்து திமிறிச் செல்ல முயன்ற எருமை மாட்டை 'ஹை' என்ற அதட்டலுடன் இழுத்துக்கொண்டு திரும்பி, ''வாட், மிஸி! நீ இன்னா கேட்கிறே?'' என்றாள் சற்றே கோபம் தணிந்த குரலில்.

ஒரு கணம் தயங்கிய ரோஸி இன்னும் சற்று அருகில் நெருங்கி, ''சினிமாப் படங்களுக்குப் பாட்டு எழுதறாரே, அவருடைய வீடுதானே இது?'' என்று மிகவும் கஷ்டப்பட்டுத் தமிழிலேயே கேட்டாள்.

''எனக்கு இங்கிலீஸ் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டியா, மிஸி? ஹவுஸுன்னா வூடுன்னு தெரியாதாங்காட்டியும்!'' என்று நகைத்த கன்னியம்மாள், ''விச் ஹவுஸ் யூ வாண்ட்?'' என்றாள் மிடுக்காக.

இதைக் கேட்டுப் பிரமித்துப் போன ரோஸி அவளைக் குறுகுறுவெனப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, ''இதோ, இதுதான்!'' என்று மருதமுத்துவின் வீட்டைச் சுட்டிக் காட்டினாள்.

''இந்தப் பங்களாவா?... ஐயே, இதுலே பயாஸ்கோப்புக்குப் பாட்டுக் கட்ற படுபாவிங்க எவனுமில்லியே! ஐ திங் யூ ராங்! இது ரொம்பப் பெரிய மனுசருடைய வூடு!'' என்றாள் கன்னியம்மாள் வெகு ஸ்டைலாக இடுப்பின் மேல் கையை வைத்துக்கொண்டு.

''இல்லே, ஆயா! நான் சொல்றதும் பெரிய மனுஷர்தான். அவருடைய ஹவுஸும் இதுதான். ஒரு வாரத்துக்கு முன்னாடி அவரே இதை எனக்குக் காட்டினார். நீதான் ஏதோ ராங்கா மீன் பண்ணிக்கிட்டுப் பேசறே!'' என்ற ரோஸி, வேறு யாரிடமாவது விசாரிக்க எண்ணியவள்போல் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள்.

''அட, இன்னடாது கதையாக்கீது!'' என்று மோவாயைத் தாங்கிக் கொண்டு யோசித்த கன்னியம்மாள், ''ஆமாம்; நீ இங்கே யாரை மீட் பண்ணனும், மிஸி?'' என்று கேட்டாள்.

''அவரைத்தான்.''

''எவுரை?''

''இந்த ஹவுஸ் ஓனரை.''

''அதான் அவரோட நேம் இன்னான்னு கேட்கிறேன்?''

''மிஸ்டர் நாச்!''

''இன்னாது?''

''டமில்லே நச்சின்னு சொல்லுவாங்கோ!''

திடுக்குற்று நிமிர்ந்த கன்னியம்மாள் கையில் பிடித்திருந்த மாட்டின் கயிற்றை விட்டுவிட்டுப் பால் குவளையை வலது கைக்கு மாற்றிக்கொண்டு பரபரப்பான குரலில், ''யாரு, நச்சியா? இது என்னோட மவன் பேருல்லே...'' என்றாள்.

அவளைவிட அதிகம் அதிர்ச்சியடைந்து திரும்பிய ரோஸி, ''வாட்? வாட் யூ ஸே?'' என்று வினவினாள்.

''எஸ், மிஸி! அது என் மவனோட பேருதான். அந்த மாதிரி பேரு இந்த வட்டாரத்திலேயே எந்தச் சோமாறுக்கும் கிடையாதுங்கிறது எனக்குத் தெரியும்.''

''ஸோ... இந்த வீட்டிலே இருக்கிறவருடைய நேம்?''

''உனக்குக் கூடத் தெரிஞ்சிருக்குமே; கெவருமெண்டைப் பத்தியும், எலெக்ஷனைப் பத்தியும் கூட்டம் போட்டுப் பேசுவாரே, அவரு!'' என்று கண்களை மலர்த்திப் பெரிதாக இழுத்துச் சொன்ன கன்னியம்மாள், மரியாதைக்கு அறிகுறியாகக் குரலைத் தாழ்த்தி, ''அவர் பேரு மருதமுத்து'' என்றாள்.

''ஓ.... ஐ நோ தட் ஜென்டில்மேன்!'' என்று முகம் வெளுத்துச் சிறுக்கப் பலத்த ஏமாற்றத்துடன் தலையாட்டிக் கொண்ட ரோஸி, ''பிளாக் போன், பிக் லிப்ஸ், ஸ்மால் அண்ட் ரெட்டிஷ் ஐஸ், கர்லிங் ஹேர், ஷார்ட் அண்ட் ஃபேட்....'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே சட்டென்று குறுக்கிட்ட கன்னியம்மாள், ''லேக் ஏ நீக்ரோ? அவன்தான் என் மவன் நச்சி! அவனையா பார்க்க வந்தே?'' என்றாள் பெருமையுடன்.

'ஆம்' என்பது போல் மெல்லத் தலையசைத்த ரோஸி தன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்துவிட்டு, ''அது சரி; நீ அவருடைய மதர்தானே?'' என்று தடுமாற்றத்துடன் வினவினாள்.

கன்னியம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது. ''இன்னாது? நான் அவனோட அம்மாக்காரியான்னு கேட்டே? இன்னுங் கொஞ்சம் போனா, அவனுக்கு மாமியாரான்னுகூடக் கேட்பே போலிருக்குதே?'' என்று அவளைச் சிடாய்த்தாள்.

''டோண்ட் ஸ்கோல்ட், ஆயா! கோவிச்சுக்காதே, ப்ளீஸ்!'' என்று வேண்டிக் கொண்ட ரோஸி, ''எதுக்கு அப்படிக் கேட்டேன்னா, இப்ப மணி நாலாயிடுச்சே; நீ இன்னும் லேடீஸ் கிளப்புக்கு டென்னிஸ் பிளே பண்ணப் போகலியான்னுதான்...'' என்று இழுத்தாள்.

''ஓ.......அப்படி அவன் உன்கிட்டே சொன்னானா?''

''எஸ்...''

''போவேன், போவேன்! ஆனால் டென்னிஸ் ஆடறதுக்கு இல்லே; ஃபுட்பால் ஆட!''

''என்னாது?''

''ஆமாம், மிஸி! இந்த நேரத்திலே என் வூட்லே என்னோட பொன்னு சாணியை மிதிச்சுக் கலவை பண்ணி வைச்சிருக்கும்; நான் போனதும் உருண்டை பிடிச்சு செவுத்துலே வரட்டி தட்டிப் போடுவேன். அதைத்தான் அவன் அப்படி ஒரு தினுசா சொல்லியிருப்பான்.''

வெட்கத்தால் வாயடைத்துப் போன ரோஸி சற்று நேரம் ஏதோ யோசனையிலிருந்துவிட்டுப் பிறகு தயக்கத்துடன் அவளைப் பார்த்து, ''அப்படீன்னா அவருடைய வீடு எது?'' என்று கேட்டாள்.

''அது இன்னா அவரோட வூடு? என் வூடு எதுன்னு கேளு!''

''எஸ். உன்னுடைய வீடுதான்.''

''எதுக்குக் கேட்கிறே, மிஸி?''

''நான் அவரைப் பார்க்கணும்.''

''அவனையா?... இந்த நேரத்திலா?... அந்தக் கேப்மாறிப் பையன் வூட்டுக்கு வந்து



இன்னையோடு எட்டு நாளாகிப்போச்சே! அப்படியே வந்தாலும் ராத்திரி ஒரு மணிக்கோ ரெண்டு மணிக்கோதான் வருவான்.''

''ஐ. ஸீ...'' என்று பரிதாபமாக முணு முணுத்த ரோஸி, ''சரி; அவர் வீட்டையாவது எனக்குக் காட்ட முடியுமா, ஆயா?'' என்றாள்.

''என் ஊடுதானே? வா, காட்டுறேன்'' என்று மாட்டை ஓட்டிக் கொண்டு முன்னே செல்லத் திரும்பினாள் கன்னியம்மாள்.

''டாக்ஸியிலே ஏறிக்கோ ஆயா, போவலாம்.''

''கார் வண்டியிலா?... ஐய, எதுக்கு மிஸி, அதெல்லாம்.?''



பையன் : என்ன சார்! நான் எப்ப விட்டுக் கணக்கும் போட்டுண்டு வந்தாலும் நீங்க பாவம் எங்கப்பாவையே பிடித்துத் திட்ட றீங்க? எங்க குடும்பம் ரொம்பப் பெரிசு சார், தாத்தா, மாமா, பாட்டி, அம்மா எல்லோரும் இருக்கா சார்!

''ஏண்டி, பொன்னே! இன்னு பண்ணிக்கிட்டு இருக்கிறே?'' என்றவாறு களைப்புடன் வந்து உட்கார்ந்தாள்.

அவளுடைய வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தவள் போல் முகமெல்லாம் சிரிப்பாக ஓடி வந்த வேதா, ''அம்மா! இப்ப அண்ணா வந்து விட்டுப் போனாரே, நீ வழியில் பார்த்தாயா?'' எனக் கேட்டாள்.

கன்னியம்மாள் அவளை ஒரு கணம் உற்று நோக்கி விட்டு வெறுப்பும் சலிப்புமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''ஹூக்கும்! வந்த உடனே கப்பை ஓடிப்பிட்டானு? அவன் ஏன் என்னைப் பார்க்கப் போறான்?'' என்றாள். ''அவரு இன்னு, இப்ப பெரிய தொரையாகிப்பிட்டாரு! இனிமேல் அவருக்கு இன்னு கொறச்சல்? கேடு கெட்ட கஸ்மாலம்!''

''பரவாயில்லே, சும்மா ஏறிக்கோ!''

''எருமை மாட்டையும் காரிலே ஏத்திக்குவானு? அது எப்படி ஊடு வந்து சேரும்?''

''ஓ.... ஐ ஆம் ஸாரி!'' என்று முனகிய ரோஸி, ''உன்னுடை ஹவுஸ் ரொம்பத் தூரமோ?'' என்று வினவினாள்.

''இல்லே; கிட்டத்தான். அதோ குட்சை ஊடுங்கல்லாம் இருக்குது பாரு, அதுக்கு அப்பாலே ஓட்டு ஊடு ஒண்ணு தெரியுதில்லே? அதுதான்!'' என்று பெருமையுடன் கையை உயர்த்திக் காட்டிய கன்னியம்மாள், ''ஆமாம்; எதுக்கு நீ அவனைப் பார்க்கணுமின்னு வந்தே? உன்கிட்டே அவன் எதனாச்சும் போட்லர் கிட்லர் வேலை கேட்டானு?'' என்று வெகு அக்கறையாக விசாரித்தாள்.

சில விநாடிகள் தலை குனிந்து மௌனமாயிருந்த ரோஸி, ''நோ, நோ, ஆயா! நான் அவரை....லவ் பண்றேன்!'' என்று பளிச் சென்று சொல்லிவிட்டு டாக்ஸியை நோக்கி விரைந்து நடந்தாள். சற்றைக்கெல்லாம் அந்த வாடகைக் கார் அவளை ஏற்றிக் கொண்டு பறந்து மறைந்தது.

வியப்பாலும் திகைப்பாலும் அப்படியே விறைத்து நின்றுவிட்ட கன்னியம்மாள், ''அட, ராஸ்கோல் பையா! இவ்வளவு தூரத்துக்கு நீ ஆளாகிப்பிட்டியா?'' என்று தன்னை மீறிய மகிழ்ச்சியுடன் முணு முணுத்துக்கொண்டே திரும்பி நடந்தாள்.

கடந்த ஒரு மாத காலமாகவே சிறகு ஒடிந்த பறவைபோல் ஒடுங்கி முடங்கிக் கிடந்து வந்த வேதா அன்று உற்சாகமும் சிறிதளவு மகிழ்ச்சியுமாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்ததைப் பார்த்து உள்ளூற வியப்படைந்த கன்னியம்மாள், மாட்டைக் கொட்டகையில் கட்டிக் கொஞ்சம் வைக்கோல் பிடுங்கிப் போட்டுவிட்டு,

'துரை' என்ற வார்த்தையை அவள் அழுத்தந் திருத்தமாகச் சொன்னதன் காரணத்தைப் புரிந்து கொள்ளாத வேதா, 'இது வழக்கமான அர்ச்சனைதான்' என்று எண்ணியவளாய் இளநகையுடன் அருகில் நெருங்கி, ''இந்தாம்மா, அண்ணா கொடுத்துட்டுப் போச்சு'' என்றபடி தன் இடுப்பில் பத்திரமாகச் செருகி வைத்திருந்த ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினாள்.

கடுகடுவென்றிருந்த கன்னியம்மாளின் முகம் அக்கணமே மலர்ந்தது. பணத்தை வாங்கிக்கொண்டு சுறுசுறுப்பாக எழுந்த அவள், ''ஆமாம்; அந்தப் பையன் வந்துச்சே, வவுத்துக்கு எதுனாச்சும் கொடுத்து அனுப்பினியா?'' என்று மிகவும் அக்கறையாக விசாரித்தாள்.

மெல்லச் சிரித்துக் கொண்ட வேதா, ''கேட்டேம்மா! ஒண்ணும் வேணாம்னு சொல்லிடுச்சு'' என்றாள்.

''மவன் ஊட்டுச் சோறு துன்னு ஒரு வாரத்துக்கு மேலே ஆயிடுச்சே!'' என்று கவலைப்பட்டுக் கொண்ட கன்னியம்மாள் புன்முறுவலுடன், ''ஊம்! அவரு இன்னு, இப்ப தொரை! மேசைக்கு எதிரே கால் மேல் கால் போட்டுக்கிட்டு முள்ளுக் கரண்டியாலே உணர்த்தியா துன்னுவாரு! பத்தாக் குறைக்கு பயாஸ்கோப்புக்கு வேற பாட்டு கட்றானும்! கேட்கணுமா?..... இதெல்லாம் இன்னு புதுவோ; யாரு கண்டா?'' என்றாள்.

சற்றே வியப்புடன் ஏறிட்டுப் பார்த்த வேதா, ''ஏம்மா இப்படிச் சொல்றே?'' என்று வினவினாள்.

''இன்னாத்தைச் சொன்னேன்? இருக்கிறதைத்தான் சொல்றேன்'' என்று நகைத்த

மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க முடியுமா உங்களால்?



SOBHAGYA.GR7

மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க எங்களால முடியுமென்று கூறிக்கொள்ளவில்லை நாங்கள். என்றாலும் அதற்கு அடுத்தபடியான ஒன்றை நிறைவேற்றுகிறோம். மூங்கிலையே பருத்தி போன்றதொரு பஞ்சாக மாற்றுகிறோம்.

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் என்று நாங்கள் வழங்குகிறோமே அது இயற்கைப் பஞ்சு போலவே இருக்கும். பருத்தியோடு அதனைக் கலந்து நெசவு செய்வதனால் கிடைக்கும் துணி, மாறாத புதுமெருகோடு என்றும் பொலிவுடன் சோபிக்கும். கிராஸிம் செயற்கைப் பஞ்சுடன் பருத்தி இணைந்த துணிகள் உயரிய பண்புகள் கொண்டவை, மேனிக்கு இணக்கமானவை, அணியக் கச்சிதமானவை, நீடித்துழைப்பதோடு, சலவைக்கும் எளிதானவை. அதே சமயம் விலையும் மிகக் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, துணி வாங்கும்போது குறிப்பிட்டுக் கேளுங்கள்:

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் இணைந்தது.

க்வாலியர் ரேயான் ஸில்க் மானுபாக். (வீவிங்) கம்., லிட்., நாக்தா (ம.பி)

தொழில்நுட்ப விவரங்களுக்கு தயவுசெய்து எழுதுக:
டெக்ஸ்டைல் ரிஸர்ச் டிபார்ட்மெண்ட், குவாலியர் ரேயான், இண்டஸ்ட்ரி ஹவுஸ்,
159, சர்ச்கேட் ரிக்லமேஷன், பம்பாய்-1.

கன்னியம்மாள், "அது போவட்டும்! ராசாத்தி, நான் கடைத் தெருவுக்குப் போயிட்டு வர்றேன்; அதுக்குள்ளாற அடுப்பை மூட்டி உலே ஏத்தி வை" என்றவாறு முந்தானையை உதறிச் செருகிக் கொண்டு வெளியே செல்லத் திரும்பினாள்.

"அம்மா!"

அவள் சட்டென்று நின்றாள். "இன்னாடி பொண்ணே, பொறப்படறப்ப கூப்பிடறே?"

"உனக்கு ஒரு விஷயம் தெரியுமாம்மா?" என்றபடி அவளருகில் வந்தாள் வேதா.

"இன்னாதாம், பொல்லாத விசயம்?"

"நல்ல விஷயம்தான்" என்று சிரித்த வேதா, "எனக்குக் கார்ப்பரேஷன் பள்ளியிலே டீச்சர் வேலே வாங்கிக் கொடுக்கும்படி நம்ம தலைவர் மருதமுத்துவிடம் நச்சி அண்ணா சொல்லியிருக்குதாம்மா! அதை என்கிட்டே தெரிவிச்சுட்டுப் போறதுக்குத்தான் அண்ணா இங்கே வந்ததாம்!" என்றாள் நெஞ்சுகொள்ளா மகிழ்ச்சியுடன்.

தலையைப் பலமாக ஆட்டிக்கொண்ட கன்னியம்மாள் ஏகத்தாளமான குரலில், "சரிதான்; அவன் சட்டைக்காரனாயிப்பிட்டான்! நீ காலிலே செருப்பும், கையிலே குடையுமா டீச்சர் உத்தியோவம் பார்க்கப் போறே! அது ஒண்ணுதான் இப்ப கொறைச்சல்!" என்றாள். "போயும் போயும் அந்தப் பித்தனை மாதிரிப் பையன் பேச்சை நம்பறயே! அவன் எதனாச்சும் சமயத்துக்கு டூப்பு அடிச்சுட்டுப் போவான்! உன் வேலையைப் போய்க் கெவனி, போ!"

"இல்லேம்மா! அண்ணா சொன்னது நிஜம்தான். அதற்காக அவருக்கு இவர் இருபத்தைஞ்சு ரூபாய்..." என்று வாக்கியத்தை முடிக்காமல் இழுத்து நிறுத்தினாள் வேதா.

"லஞ்சம் கொடுத்தானா? அட, பாவி!" என்று மார்பில் அடித்துக்கொண்ட கன்னியம்மாள், "அந்தப் பணத்தை என்கிட்டே கொடுத்திருந்தால் மாட்டுக்குப் பொட்டுப் புண்ணாக்கு வாங்கி வச்சிருப்பேனே! அது ரெண்டு படி பாலாவது கூடக் கறக்கும்!" என்று அங்கலாய்த்தாள்.

இந்தச் சமயம்—

"யாரு, வீட்டிலே? இதுதான் நச்சினார்க்கினியனின் வீடா?" என்ற அதிகாரமான குரல் கேட்டுப் பரபரப்படைந்த வேதா வெளியே எட்டிப் பார்க்க, கன்னியம்மாள் அவசரமாகத் தெரு வாசலுக்கு விரைந்தாள். அங்கே, தமது அந்தரங்கக் காரியதரிசி செங்கோடனுடன் அமர்த்தலாக வந்து நின்றுகொண்டிருந்தார் ஸ்ரீமான் மருதமுத்து.

அவரைக் கண்டதும் கன்னியம்மாளுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. திகிலும், திகைப்புமாகப் பரபரத்த அவள், "கும்பிடுறேனுங்க!" என்று குழறினாள்.

"நீதான் நச்சியின் தாயாரா?" என்று அவளைப் பார்க்காமல் வேறு பக்கம் திரும்பி நின்றுகொண்டு அலட்சியமான குரலில் கேட்டார் மருதமுத்து. அவருடைய பார்வை பயில்வான் தம்பையாவின் வீட்டுப் பக்கம் லயித்திருந்தது. அதிலே ஒருவித கலவரமும் குடிகொண்டிருந்தது.

"ஐயாவுக்குத் தெரியாதுங்களா? நான்தானுங்களே ஐயா வூட்டுக்குப் பத்து வருசமா பால் கறந்துக்கிட்டு இருக்கேன்?" என்று பணிவும் குழைவுமாகப் பதிலிறுத்தாள் கன்னியம்மாள். இதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தம்பையாவின் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்த மருதமுத்து, அங்கிருந்து வீர நடைபோட்டு வந்த அவரது மற்றொரு 'காரியதரிசி'யான கருப்பண்ணனை நோக்கி, 'என்ன?' என்பது போல் புருவங்களை உயர்த்தினார்.

"அவன் இல்லையாம், அண்ணே! சாகப் பிழைக்கக் கிடந்து அவனுடைய அண்ணன்மார் வீட்டுக்குப் போயிருக்கானாம்!" என்றபடி ஒரு வெற்றிச் சிரிப்புடன் வந்தான் கருப்பண்ணன்.

"ஓ.... அதனால்தான் வீடு பூட்டிக் கிடக்கிறதோ?" என்று மெல்ல முணுமுணுத்துக்கொண்ட மருதமுத்து ஏதோ புதுத் தெம்பும் தைரியமும் பெற்றவர் போல் நிமிர்ந்து கன்னியம்மாளை அலட்சியமாக ஏறிட்டுப் பார்த்து, "அது சரி; உன் பெண் உபாத்தியாயினி வேலைக்குப் படித்திருக்கிறாளாமே, உண்மைதானா?" என்றார் அடித்தொண்டையில்.

"ஆமாங்க" என்று குழைந்தாள் கன்னியம்மாள்.

"பாராட்ட வேண்டிய விஷயம்!" — ஓர் அலாரிப்புச் சிரிப்புடன் இவ்வாறு கூறிய மருதமுத்து, "அவளுக்கு வேலை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று உன் பையன் வந்து என் காலைப் பிடித்துக்கொண்டான்! ஏழை எளியவர்களுக்கு உதவுவதில் எனக்கு எப்போதுமே ஒரு தனி உற்சாகம்!" என்று மேடைப் பேச்சுப் பாணியில் கரகரத்தார்.

"வாஸ்தவம்தானுங்க! நாத்திலே ஒரு பேச்சு! ஐயாவைப் பத்தி எனக்குத் தெரியாதுங்களா?" என்று கூழைப் பாட்டுப் பாடினாள் கன்னியம்மாள்.

அமர்த்தலாகத் தலையசைத்துக் கொண்டு ஆகாயத்தை நோக்கியபடி ஒரு கணம் யோசித்த மருதமுத்து, "ஆமாம்; எங்கே அந்தப் பெண்? இருக்கிறாளா?" என்றார் கண்களை இடுக்கிக்கொண்டு.

உடனே கன்னியம்மாள், "இருக்கிறாங்க!.. ஏ, வேத கொமாரி!" என்று ஓசையாகக் குரல் கொடுக்க, இந்நேரம்வரை கதவிடுக்கில் மறைந்து நின்றுகொண்டிருந்த வேதா, "வணக்கம், சார்!" என்று இனிய மென் குரலில் பயந்தபடி கூறி அழகாகக் கரம்குவித்தவாறு வாசல் நிலையருகில் வந்து நின்றாள்.

அவளைப் பார்த்ததும் மருதமுத்துவின் கண்ணிமைகள் சில விநாடி நேரம் இமைக்க மறந்து பின் படபடத்தன. அவரது காரியதரிசிகளான செங்கோடனுடையவும், கருப்பண்ணனுடைய நிலையும்கூட அப்படியே ஆகியது.

சற்றைக்குப் பிறகு தொண்டையை விசாலமாகக் கனைத்துக்கொண்ட மருதமுத்து, "ம்.... சரி; ரொம்ப சந்தோஷம்! என்னால் ஆனதை அவசியம் செய்கிறேன்!" என்றவாறு வேதாவை மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டுத் திரும்பி நடந்தார். அவரை அவரது நிழல்போல் பின்தொடர்ந்த காரியதரிசிகளின் முகங்களில் அர்த்த புஷ்டியான விஷமப் புன்னகை ஒன்று தவழ்ந்தது.

[தொடரும்]

கரப்பு, மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவற்றை... தப்பாமல் கொல்லுவது:


புதிய

:ப்ளிட்

உடனடிப் பிரயோகப்

பவுடர்

அமுக்குத் தூவல் பெட்டியில் வருகிறது. தூவ இலகுவானது, பயன்மிக்கது.




கரப்பு, மூட்டைப்பூச்சி, பிறவகை ஊருமினப் பூச்சிகள் அனைத்தையும் ஒழிப்பதற்கென்றே தனிமுறைப்படி தயாரிக்கப்பட்டுள்ள :ப்ளிட் பவுடர், தப்பாமல் கொல்கிறது. நேரடியாகத் தூவப்படும் பூச்சிகளை மட்டுமின்றி தூவிய இடத்தை நெடுநேரம் கழித்து அண்டும் பூச்சிகளையும் பலிவாங்கி விடுகிறது. வேண்டும் போது பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ளது :ப்ளிட் பவுடர்... இலகுவாகத் தூவிப் பயன்காண வாகான அமுக்குத் தூவல் பெட்டியில் வரும் பூச்சிக் கொல்லி இதுவொன்றே.

மறவாதீர்கள்: ஊருமினப் பூச்சிகள் யாவினையும் கொன்றுகுவிப்பது :ப்ளிட் பவுடர்.

மற்றுமொரு எஸ்ஸோ ESSO தயாரிப்பு

கையாள மிக வசதியானது :ப்ளிட் பவுடர்



வீடுகளிலே: கரப்பான் பூச்சிகளை ஒழிக்க, அலமாரி, இழுப்பறைகள் ஆகியவற்றின் மூலைமுடுக்குகளிலும், சாக்கடைப் பொந்துகளுக்கு அருகேயும் தூவுக. மூட்டைப் பூச்சிகளுக்கு முடிவு கட்ட, படுக்கைகள் எங்கும் 4 வாரத்திற்கு ஒரு முறை தூவுக்கவும்.



நூல் நிலையங்களிலே, புத்தக அலமாரிகளிலே: வெள்ளிப் பூச்சிகளை விரட்ட, புத்தகங்கள், அலமாரித் தட்டுகள், புத்தகத் தட்டுகளுக்குப் பின்புறம் எங்கும் தூவிவைக்கவும்.





தோட்டங்களிலே: தாவர வர்க்கம் வளர்ச்சுற்றேறும் பாதிக்காமல், தோட்டப்பூச்சிகளை மட்டும் கொன்றுவிட வல்லது. இலைகள் மீதும் அடிப்பகுதியிலும் தூவி வைத்தால் தோட்டப் பயிர்களுக்கு அதுவே உறுதியான பாதுகாப்பு.

எஸ்ஸோ ஸ்டாண்டர்ட் ஈஸ்டர்ன் இன்க்.
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமையோடு யூ.எஸ்.ஏ. வில் இணைப்புப் பெற்றது).

CHEF-1A-TAM

ஏமாறச் சொன்னது யாராம்?



பஞ்சு, நாய்க் குட்டிகளின் பஞ்சு போன்ற உடல்களைத் தடவியவண்ணம் உட்கார்ந்திருந்தான். நாய்க் குட்டிகளின் மிருதுத் தன்மை அவன் கைகளையும், உடலையும், மனத்தையும் சிலிர்க்க வைத்தது.

"இதைவிட அழகான நாய்க்குட்டிகள் உலகத்திலே இருக்குமா?" – தானே கேள்வியைக் கேட்டுக் கொண்டு பஞ்சு மெதுவாகச் சிரித்துக் கொண்டான்.

தாய் நாய் 'ராணி' வெய்யிலில் காலை நீட்டிப் படுத்திருந்தது. காலைக் காற்றும், இளம் வெய்யிலும் அதன் உடலில் பட்டு இதமான உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதை அநுபவிப்பது போல் பாதிக் கண்களை மூடியபடி, மற்றப் பாதியால் தன் மேல் ஏறி விளையாடிய குட்டிகளையும் அருகில் உட்கார்ந்து அவைகளைத் தடவியபடியிருந்த பஞ்சுவையும் கண்காணித்துக் கொண்டிருந்தது.



பஞ்சுவின் பிஞ்சு விரல்கள் சலிக்காமல் ஒவ்வொரு குட்டியாகத் தடவியவண்ணமே இருந்தன. "இப்போது போய்க் குளித்துச் சாப்பிட்டால்தானே ஒன்பது மணிக்குப் பள்ளிக்கூடம் போக முடியும்" என்று பஞ்சு எண்ணினான். ஆனால் அந்த இடத்தை விட்டு நகரவே அவனுக்கு மனமில்லை.

"டேய், பஞ்சு! அங்கு என்ன செய்யறே?" – தூக்கிவாரிப் போட்டது பஞ்சுவுக்கு.

குமார் துவாலையால் தலையைத் துவட்டியபடியே வீட்டினுள்ளிருந்து வேகமாக வெளியில் வந்தான்.

"ஏன்டா, பஞ்சு! சும்மா சும்மா குட்டிகளைத் தொடாதே..... அப்புறம் அதெல்லாம் சரியா வளராதுன்னு எத்தனை தடவை சொல்லியாச்சு..... இது ரொம்ப உசத்தி ஜாதி நாயாக்கும். சரியா கவனிக்காவிட்டால் குட்டிகளெல்லாம் செத்துப் போயிடும்...." என்று சொன்னவன் பஞ்சுவின் ஏமாற்றம் நிறைந்த விழிகளைப் பார்த்துவிட்டு அத்துடன் நிறுத்திக் கொண்டான்.



எஸ்.பத்மாவதி



பஞ்சு எழுந்து மௌனமாகக் குட்டிகளைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். குட்டிகள் ஒன்றன் மீது ஒன்று தாவி ஓடி, பெரிய நாயின் மீது ஏறிக் குதித்து சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தன.

பஞ்சு நிமிர்ந்து குமாரைப் பார்த்தான். குமாரும் இந்த விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தான். பஞ்சுவின் முகம் மலர்ந்தது.

"என் குமார்! இந்த நாலு குட்டியிலே எது உனக்கு ரொம்பப் பிடித்தது?" என்று கேட்டான் பஞ்சு.

குமார் உடனே குந்திக் கொண்டு நாயின் அருகில் உட்கார்ந்து விட்டான். பஞ்சுவும் தன்னை யறியாமலேயே திரும்பவும் உட்கார்ந்து கொண்டான்.

குமார் குட்டிகளைப் பார்த்தவண்ணமே, "பஞ்சு, உனக்கு எதுரொம்பப் பிடிக்கதுன்னு சொல்லு..... முதல்லே......" என்றான்.

பஞ்சு தயங்காமல் பளிச்சென்று, "அதோ அந்த வெள்ளைக் குட்டியில்லே.... அதுதான் எனக்கு ரொம்பப் பிடிச்சது" என்றான்.

குமார் உரக்கச் சிரித்தான். பஞ்சுவின் முதுகைத் தடவியபடியே, "எப்படிடா, என் மனசிலே இருந்தது உனக்குத் தெரிந்தது? பஞ்சு! அந்த வெள்ளைக் குட்டிதான்டா.... நிஜமா அழகாக இருக்கிறது. நாலு காலையும் பார்த்தாயா? கால்கிட்டே மாத்திரம் பூட்ஸ் போட்டாற்போல் கறுப்பாயிருக்கு... மற்றபடி உடல் முழுவதும் துளிக்கூடக் கறுப்பு இல்லே. அது ஓடும் போது மல்லிச் செண்டு உருண்டு ஓடறாப்போல இல்லே..?" என்றான்.

உள்ளேயிருந்து குமாரின் தாயார், "குமார்! குமார்......!" என்று கூப்பிட்டுக் கொண்டே அவசரமாக வெளியே வந்தாள். குமாரும் பஞ்சுவும் இருந்த நிலையைப் பார்த்ததும், அவளுக்குச் சிரிப்பும் கோபமும் ஒரே சமயத்தில் ஏற்பட்டன.

"குமார்! என்ன இது. மணி எட்டே முக்கால் ஆகிறது. எப்பொழுது சாப்பிட்டுக் காலேஜுக்குக் கிளம்பப் போகிறாய்? உன் சிநேகிதன் வேறு வந்து விட்டானாக்கும்..... ஏண்டா, பஞ்சு! உனக்கு வேலை வெட்டி ஒன்றும் இல்லே? ஓடு வீட்டுக்கு...." என்று அதட்டினாள்.

அடுத்த நிமிடம் பஞ்சு எழுந்து ஒரே ஓட்டமாக ஓடி வேலியைத் தாண்டிக் குதித்துப் பக்கத்து வீட்டினுள் சென்று மறைந்தான். இரண்டு வீடுகளுக்கும் 'கேட்' இருந்தும் பஞ்சுவுக்கு இதுதான் குறுக்குவழி.

குமார் பரபரப்பாகத் தட்டின் முன் வந்து அமர்ந்தான். அவன் தாய் பரிமாறிய படியே, "ஏண்டா, குமார்! இன்னும் சின்னப் பையன் போலவே இருக்கிறாயே, நாய்க் குட்டிகளுடன் விளையாடிக்கொண்டு! அந்தப் பஞ்சுவுக்கு உன்னைப் போல இரண்டு பங்கு நாய்ப் பைத்தியம் பிடிச்சிருக்கு. சதா இங்கேயே பழியாகக் கிடக்கிறான். அவனுக்குத்தான் ஒரு குட்டியைக் கொடுத்து விடேன். பாவம் ஆசையாக வளர்ப்பான்..." என்று கூறினாள்.

உடனே குமார் குறுக்கிட்டு, "போம்மா! உனக்கு ஒன்றும் தெரியாது. கண்ட கண்ட பேருக்கெல்லாம் இந்த உசத்தி ஜாதி நாய்க் குட்டியைக் கொடுக்கக் கூடாது. நான் முன்னாலேயே யார் யாருக்கோ வாக்கு கொடுத்திட்டேன். முதல்லே..... மாமாவுக்கு ஒன்னு கொடுக்க வேண்டும். ராணியைத் தன் நண்பரிடமிருந்து எனக்கு விலைக்கு வாங்கிக் கொடுத்த போதே..... அது குட்டி போட்டால் நமக்கு முதலில் ஒன்று தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்...... கொடுக்கா விட்டால் கோபிப்பார். குட்டிகள் எல்லாம் இனி மேல் தாயை விட்டுப் பிரியலாம். இன்றைக்கே முடிந்தால் கொடுக்க நினைத்தவர்களுக்கெல்லாம் கொடுத்து விடப் போகிறேன்......" என்றான்.

"என்ன வேண்டுமானாலும் செய்துகொள். இலையைப் பார்த்துச் சாப்பிடு முதலில்... நாய்ப் பேச்சை ஆரம்பித்தால் உனக்கு எல்லாமே மறந்துவிடும்." — குமாரின் தாயார் உள்ளே சென்று விட்டாள்.

அன்று மாலை பஞ்சு பள்ளியிலிருந்து நேராக வீட்டுக்கு ஓடி வந்து விட்டான். பக்கத்து வீட்டுக் குமாரின் நாய், 'ராணி' குட்டி போட்டதிலிருந்து பஞ்சு பள்ளியிலிருந்து பறந்துதான் வந்து கொண்டிருந்தான். இல்லாவிடில் நண்பர்களுடன் விளையாடி விட்டு, பேசி அரட்டை அடித்துக் கொண்டு மெதுவாகத்தான் வீடு திரும்புவான். அதுவும் அவனுக்குப் பிடித்த 'கிரிக்கெட்' விளையாட்டைக்கூட அல்லவா துறந்து விட்டு ஓடி வருகிறான்! நாய்க் குட்டிகள் காந்தம் போல அவனை இழுத்தன.

பஞ்சுவுக்கு நாயென்றால் உயிர். அவன் குமாரிடம் வெகு நாட்களாக 'ராணி' குட்டி போட்டால் தனக்கு ஒன்று தரும்படி கேட்டுக் கொண்டிருந்தான். குமாரும், "ஆகட்டும், ஆகட்டும்...." என்று சொல்லி அவன் ஆசைத் தீயில் நெய் ஊற்றினான்.

அன்று மாலை குமார் கல்லூரியிலிருந்து சீக்கிரம் வீடு திரும்பினான். பஞ்சு அதற்கு முன்பாகவே வந்து நாய்க் குட்டிகளின் அருகில் உட்கார்ந்திருந்தான்.

குமார் நிதானமாக வந்து உட்கார்ந்து 'ராணி'யின் கழுத்துப் பட்டையில் சங்கிலியை மாட்டினான். பஞ்சு குதிப்பதை நிறுத்தி அவன் செய்வதைக் கவனித்தான்.

"ஏன் மாமா! ராணியைக் கட்டறேள்?" என்று கேட்டான் பஞ்சு.

குமார் முறுவலித்தவாறே, "இரு, சொல்கிறேன்....." என்று கூறி ராணியை இழுத்துக்கொண்டு வீட்டின் பின்புறம் சென்றான்.

குட்டிகள் திருதிருவென்று விழித்தவண்ணம் தாயைத் தேடி மூலைக்கு ஒன்றாக ஓடின. பஞ்சு இங்குமங்குமாய் ஓடி அவைகளை ஒரே இடத்துக்குத் துரத்தினான். அதற்குள் குமார் கையில் ஒரு தூக்குக் கூடையுடன் வந்தான்.

"எதுக்கு மாமா கூடை? என்ன செய்யப் போகிறீர்கள்..... குட்டிகளை?" என்று பஞ்சு பரபரப்புடன் கேட்டான்.

குமார் சிரித்துக் கொண்டே, "பஞ்சு! என் சிநேகிதர்கள் எல்லாம் ஆளுக்கு ஒரு குட்டி கேட்டிருக்கிறார்கள். குட்டிகளெல்லாம் பெரிதாகி விட்டன. அதனால் கொண்டு போய்க் கொடுக்கப்போகிறேன்" என்று கூறிக் கூடையில் மூன்று குட்டிகளை வைத்தான்.

பஞ்சுவின் முகம் தொங்கி விட்டது.


தீபாவளி கலர் - கற்பகம்
பட்டுச் சேலைகளைப் பார்த்தீர்களா?
NALLI SILKS
SILK SAREES
நல்லி சில்க்ஸ்
நல்லி சில்க்ஸ்
82, ராயப்பேட்டை ஹைரோட்,
லஸ் - மயிலாப்பூர் - போன் 74862 - சென்னை - 4
10-10-65 ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு!


கால்கேட் டூத் பிரஷ்
மேலும் துப்புரவாக உங்கள்
பற்களை சுத்தம் செய்யும்படி
அமைக்கப்பட்டிருக்கிறது!
COLGATE
NYLON TOOTH BRUSH
புதியது
மிகவும்
கவர்ச்சியானது!!
கால்கேட்
சூபர் டீலக்ஸ்
டூத் பிரஷ்
வாய் துர்நாற்றத்தை அகற்ற கால்கேட் காட்டும் வழி

''எல்லாக் குட்டிகளை யுமா...கொடுத்து விடப் போகிறேன்...? எனக்கு ஒன்னு தரேன்னு சொன் னேளே.....'' என்று பர பரப்புடன் கேட்டான்.

''எல்லாக் குட்டிகளை யும் இல்லேடா...! அந்த வெள்ளைக் குட்டியைக் கொடுக்கப் போவ தில்லே......'' குமார் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் பஞ்சுவின் குஞ் சுக் கால்கள் குதி போட் டன.

''ஜோர்....ஜோர்.... வெள்ளைக் குட்டிதான் ரொம்ப அழகு.....நான் ரொம்ப நன்ருக வைத் துக் கொள்ளுவேன்... மாமா.....!''

'' எதையடா.....?''

'' இந்த வெள்ளைக் குட்டியைத்தான்.....''

''என்னடா...! இது உனக்கென்று யார் சொன்னு? எனக்கு ஒரு குட்டி வேண்டாமா?''

பஞ்சுவின் கால்கள் மண்ணில் பதிந்தன. கொட்டிய கைகள் தளர்ந்து விழுந்தன. முகம் ஏமாற்றத்திருல் வெளிறியது. கண்களில் நீர் பளபளக்க, துக்கம் தொண்டையைஅடைக்க ''என்ன மாமா! எனக்கு ஒரு குட்டி கண்டிப்பாகத் தருவதாகச் சொன்னீர் களே! இப்போ இல்லே என்கிறீர்களே.........'' என்ருன்.

உடனே ஆத்திரத் துடன், ''நல்ல ஆசை யடா உனக்கு!.... எவ் வளவு உயர்ந்த ஜாதி நாய் தெரியுமா...... இது....! உனக்கு இதன் அருமை தெரியுமாடா? சும்மா வேடிக்கைக் குச் சொன்னேன், ஒரு குட்டி தருகிறேன் என்று....! அதை நிஜமென்று நம்பிக் கொள்ளுவாயென்று கண்டேனு?'' என்ருன்.

ஏமாற்றம்..... பெரிய இடியாகத் தாக்கி யிருக்க வேண்டும் பஞ்சுவை ! இப்பொழுது அவனுக்கு அழக்கூடத் தோன்றவில்லை. சிலை போல் அசையாமல் நின்றுவிட்டான்.



குமாருக்கு.... பஞ்சுவின் ஏமாற்றம் சிறிது இரக்கத்தைக் கொடுத்தது. குரலைத் தாழ்த் திக் கொண்டு, ''சரிடா, பஞ்சு! அடுத்த தடவை 'ராணி' குட்டி போட்டால் கண்டிப் பாக.....நிச்சயமாக.....உனக்கு ஒன்று தந்து விடுகிறேன்.....'' என்று சொல்லிவிட்டுப் பஞ்சுவின் பக்கம் திரும்பியபோது, பஞ்சு நின்றிருந்த இடம் காலியாக இருந்தது. பஞ்சு மெதுவாக நடந்து குமார் வீட்டுக் 'கேட் டை'க் கடந்து போய்க் கொண்டிருந்தான். அவன் உள்ளே சென்று மறையும் வரை குமார் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இதுதான் முதல் தடவை...... பஞ்சு தன் குறுக்கு வழியான வேலியைத் தாண்டு வதை மறந்து 'கேட் டி'ல் நுழைந்து தன் வீட்டுக்குச் செல்லுவது.! 'பஞ்சு இவ்வளவு நம்பிக் கையா வைத்திருந் தான் ?...... இல்லையென் றதும் ஒரேயடியாக ஏமாற்றத்தில் இடிந்து விட்டானே....! என்ன இருந்தாலும் பஞ்சு அவ் வளவு தூரம் மனத்தில் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டது அவன் தப் புத்தான்' என்று குமா ரின் மனம் தப்புக் கணக் குப் போட்டது. கூடை யில் மூன்று நாய்க் குட்டி களும் எழுப்பிய ஓலமும் சேர்ந்து குமாரின் மனத்தை மேலும் குழப்பின. குமார் உதட் டைக் கடித்துக் கொண் டான்.

'முதலில் மாமா வீட் டுக்குச் சென்று அவருக் குப் பிடித்த நாய்க் குட் டியை எடுத்துக் கொள் ளச் சொல்லி விட்டுப் பிறகு மாதவன் வீட் டுக்கும், சேகர் வீட்டுக் கும் போய் மற்ற இரு குட்டிகளையும் கொடுத்து விட்டு வர வேண்டும்...' என்று குமார் தன் மனத் துக்குள்ளாகவே பாதை வகுத்துக் கொண்டான்.

கூடையை எடுத்துத் தன் சைக்கிள் பிடியில் மாட்டிக் கொண்டு புறப்பட்டான். பஞ்சுவின் ஏமாற்றம் நிறைந்த முகம் அவ்வப் போது அவன் மனத் திரையில் தோன்றி, உற்சாகத்தைக் குறைத்தவண்ணம் இருந்தது.

''மாமா.... மாமா.....!'' என்று உரக்க அழைத்துக் கொண்டு, குமார் தன் மாமா வீட்டினுள் நுழைந்தான். சமையற்காரன் எதிர்ப்பட்டு மாமா மாமி இருவரும் வெளி யில் சென்றிருப்பதாகத் தெரிவித்தான். குமார் கூடையைத் திறந்து, குட்டிகளை ஆராய்ந்தான். வெள்ளையும் கறுப்பும் கலந்த நிறமுடைய இரண்டு குட்டிகள்..... நல்ல கறுப்பு நிறமுடைய ஒரு குட்டி.... இந்த மூன்றில் கறுப்புக் குட்டிதான் அவன் மனத்தை மிகவும் கவர்ந்தது. அதை மாமாவும், மாமி யும் விரும்புவார்கள் என்று தோன்றியது.

அதைக் கூடையிலிருந்து எடுத்துக் கீழே விட்டான்.

பசியால் அது தன் கீச்சுக் குரலில் குரைத்துக் கொண்டு அறையைச் சுற்றிச் சுற்றி வந்தது. பால் கொண்டு வரச் சொல்லி அதன் முன் வைத்தான். ஆவலுடன் அது நக்கிக் குடிக்கும்போது 'வெல்வெட்' போல் பளபளக்கும் அதன் கறுத்த உடலை மெதுவாகத் தடவிக் கொடுத்தான்.

மாமா வந்தால் தெரிவிக்கும்படி சமையல்காரனிடம் சொல்லிவிட்டு நேராக மாதவன் வீட்டை அடைந்தான். மாதவனும், சேகரும் குமாரின் ஆப்த நண்பர்கள். மாதவன் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். சேகரோ பெரிய பணக்காரன். மாதவன் வெகு நாட்களாகக் குமாரிடம் தனக்கு ஒரு நாய்க் குட்டி தரும்படி கேட்டுக் கொண்டிருந்தான். பெரிய பணக்காரனுகிய சேகர் தனக்கு அந்த ஜாதி நாய்க் குட்டி ஒன்று வேண்டுமென்று வலுவில் குமாரிடம் கேட்டபோது குமாரின் உச்சி குளிர்ந்து விட்டது.

சேகரின் தகப்பனுர் பெரிய மில் முதலாளி. பணக்காரர் வீட்டில் தன் நாய்க் குட்டி வளருவது தனக்குக் கௌரவம் என்று குமார் எண்ணினுன். அந்த உயர்ந்த ஜாதி நாய் சேகர் வீட்டில் சொகுசாக வளரும் என்பது குமாரின் கற்பனை.

மாதவன் வீட்டில் குமார் நுழைந்ததும், ஒரு குட்டியை எடுத்து வாசற்படியினருகில் விட்டான். அது தன் சிவந்த வாயைத் திறந்து கத்திக் கொண்டே..... தன் தாயாரைத் தேடிக்கொண்டு உள்ளே ஓடியது. குரலைக் கேட்டு மாதவன் சந்தோஷத்துடன் வெளியில் ஓடி வந்து குட்டியைத் தூக்கி அணைத்துக் கொண்டான்.

''நன்றி....ரொம்ப நன்றி.....'' என்று ஆயிரம் 'நன்றி' சொல்லிக் குமாரைத் திணற அடித்து விட்டான்.

குமார் விடைபெற்றுக் கொண்டு சேகர் வீட்டுக்குச் சென்றுன். அந்தப் பெரிய பங்களாவில் நுழையும் போதே அவன் மனம் குதூகலித்தது. 'உயர்ந்த ஜாதி நாய் வளருவதற்கு இதுதான் ஏற்ற இடம். சேகர் சொகுசாக வளர்ப்பான்' என்று எண்ணிக் கொண்டே வேலைக்காரன் காட்டிய 'சோபா'வில் அமர்ந்து சேகர் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் சேகர் தடபுடலாக உடையணிந்து வெளியில் வந்தான். குமாரின் கைகளில் நாய்க் குட்டியைப் பார்த்ததும் அவன் முகம் மலர்ந்தது. அதை வாங்கிப் பக்கத்திலிருந்த சோபாவின் மீது விட்டான். சிற்றுண்டி வரவழைத்துக் குமாரை உபசரித்தான். உற்சாகமாகப் பேசிக் கொண்டே இருந்தவன் அடிக்கடி தன் கைக் கடிகாரத்தைப் பார்ப்பதைக் கவனித்த குமார், நண்பன் வெளியில் செல்லுவதற்குத் தான் தடையாக இருக்கக் கூடாதென்று உணர்ந்து விடைபெற்று வெளியில் வந்தான்.

பங்களாவின் காம்பவுண்டைத் தாண்டிச் சிறிது தூரம்கூடக் குமார் போயிருக்க மாட்டான். சேகரின் கார் தன்னைத் தாண்டிப் போவதையும், முன்சீட்டில் அவனுக்குப் பக்கத்தில் தன் நாய்க் குட்டி அமர்ந்து கத்திக் கொண்டே செல்லுவதையும் பார்த்தான். அவனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ''நல்ல ஆள் இந்தச் சேகர்! அதற்குள் குட்டியையும் வெளியில் அழைத்துச் செல்ல ஆரம்பித்து விட்டான்.....'' என்று எண்ணிக் குமார் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

'வெள்ளைக் குட்டி தனக்காக....' என்று எண்ணிக் குமார் தனக்குள் இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

வெள்ளைக் குட்டி தனக்காக என்று பஞ்சுவிடம் சொன்னுன் குமார். ''ஆனல் அதை யாருக்காகத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறேம்......'' என்று எண்ணமிட்ட போது குமாரின் உள்ளம் குதி போட்டது. மல்லிகாவின் உருவம் அவன் மனக்கண் முன் விரிந்தது.

'மல்லிகா'—குமாரின் கணக்குப் பேராசிரியரின் பெண். அதே கல்லூரியில் படிக்கிறுள். அவளுக்கு நாய்க் குட்டியென்றல் 'உயிர்' என்று அவள் வாயிலாகவே பல தடவை குமார் கேட்டிருக்கிறுன். ''வளர்த்தால் நல்ல உயர்ந்த ஜாதி நாயைத்தான் வளர்ப்பேன்'' என்று வேறு சொல்லுவாள்.

எதிர்பாராதவிதமாக இந்த மல்லிச் செண்டு போன்ற வெள்ளை நாய்க்குட்டியைக் கொண்டு போய், மல்லிகாவின் குமுத மலர்க் கைகளில் காதல் பரிசாக வைத்து, தன் மனக் கதவைத் திறந்து, அவள் எழில் உருவத்தை அங்கு பிரதிஷ்டை செய்திருப்பதைக் காட்ட வேண்டும் என்று குமார் காத்திருந்தான். இன்னும் ஒரு வாரத்தில் மல்லிகாவுக்குப் பிறந்த நாள் வருகிறது. ''அதுவரை அந்த வெள்ளைக் குட்டியின் உதவியால் பஞ்சுவைச் சமாதானப்படுத்த வேண்டும்'' என்று குமார் எண்ணிக் கொண்டான்.

அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு பஞ்சு குமார் வீட்டுக்கு வருவதில்லை. அவனை வரவழைக்க வேண்டும் என்பதற்காக அடிக்கடி வெள்ளைக் குட்டியை எடுத்துத் தோட்டத்தில் விளையாட விடுவான். பஞ்சு ஆவலை அடக்க முடியாமல் வேலியின் மறைவில் நின்று அதன் விளையாட்டை ரசித்துக் கொண்டிருப்பான். ஆனல் தன்மானம் அடிபட்ட உணர்ச்சி இன்னும் பஞ்சுவுக்கு மறக்கவில்லை.

அன்று திடீரென்று குமாரின் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. அவனுடைய குடும்ப டாக்டர் மிஸ்டர் ராமகிருஷ்ணனை அழைத்து வரச் சென்றுன். அவர் வீட்டினுள் நுழைந்ததுமே ஒரு நாய்க் குட்டி கத்திக் கொண்டு வெளியில் ஓடிவருவதைப் பார்த்து நின்றுன். எந்த நாயைப் பார்த்தாலும் சிறிது நேரம் நின்று அதன் அழகை ரசிக்கும் உள்ளம் உடையவன் குமார். ஆசையாக அந்தக் குட்டியை அள்ளி எடுத்தவன் திடுக்கிட்டான்.

''இது என் நாயல்லவா?...மாதவனுக்குக் கொடுத்தது...இங்கு எப்படி வந்தது? இதோ கறுப்பு நிறமுடைய இடது காதில் காலணு அகலத்துக்கு ஒரு வெள்ளை வட்டம். சந்தேகமே இல்லை... அதே குட்டிதான்...''

அதற்குள் டாக்டர் வெளியில் வந்தார். ''என்ன குமார்! நான்கு நாட்களுக்கு முன்பு தான் ரூபாய் இருநூற்றைம்பது கொடுத்து வாங்கினேன். யாரோ பாவம் நல்ல குடும்பத்துப் பையன் பணம் தேவை என்பதால் விற்கிறேன் என்றுன். உயர்ந்த ஜாதி நாய்

போலத் தோன்றியது. உடனே வாங்கி விட்டேன். நன்றாக இருக்கிறதா?'' என்றார்.

குமாருக்குத் தலை சுற்றியது. தான் கேட்பது உண்மையா? மாதவன் தன்னிடம் பெற்றுக் கொண்ட நாயை விலைக்கு விற்றிருக்கிறான். எதற்கும் மாதவனை நேரில் கேட்டுவிடுவதென்று அன்று மாலையே அவன் வீடு தேடிச் சென்றான். சகஜமாக முகத்தை வைத்துக் கொண்டு, ''என்ன மாதவன்! என் நாய் எப்படி இருக்கிறது? பார்த்துப் போகலாம் என்று வந்தேன்...'' என்று கூறினான்.

மாதவன் திடுக்கிட்டாற்போல் குமாரைப் பார்த்துவிட்டு, வருத்தத்துடன், ''குமார்! நாய் நீ கொடுத்து விட்டுப் போனதிலிருந்து ஆகாரம் சாப்பிடாமல் ஓயாமல் கத்திக் கொண்டிருந்தது. ஒரு நாள் திடீரென்று இறந்து விட்டது'' என்று கூசாமல் ஒரு பொய்யைச் சொன்னான்.

குமாரின் உதடுகள் தான் தெரிந்து கொண்ட உண்மையைச் சொல்லத் துடித்தன. 'தன் உயிர் நண்பன் என்று இதுவரை எண்ணிய மாதவனா இப்படிப் பேசுகிறான்?' குமாருக்கு அவன் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. ஒன்றும் பேசாமல் விடுவிடென்று நடந்தான்.


திரானித்து அவன் சுற்றுப்புறத்தை ஆராய்ந்தபோது மாமா வீட்டு வாசலை அடைந்து விட்டதை உணர்ந்தான். அவனுடைய படபடப்பு இன்னும் தணியவில்லை. 'மாமி கையால் ஒரு கப் காப்பி சாப்பிட்டால் சரியாகிவிடும்' என்று குமார் எண்ணமிட்டபடியே தோட்டத்தில் நுழைந்தான்.

முன் அறையிலிருந்து மாமியின் குரல் கேட்டது. அதில் தன் பெயர் அடிபடுவது போலத் தோன்றவே குமார் தயங்கி நின்று ஊன்றிக் கவனித்தான். மாமிதான் சொல்லிக் கொண்டிருந்தாள்: ''உங்கள் மருமான் செய்த மோசடியைப் பாருங்கள். இந்தக் கறுப்பு நாயை நம் தலையில் கட்டிவிட்டுச் சென்றிருக்கிறான். வேண்டுமென்றே திட்டம் போட்டுக் கடனே என்று இதைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறான். 'அமங்கலமான இதன் கறுப்பு நிறம் என் கண்ணைக் கரிக்கிறது. மாமா பொரிக செய்து கஷ்டப்பட்டு வெள்ளைக்கார அதிகாரியிட்டே இருந்து நாய் வாங்கிக் கொடுத்தாரே அவருக்கு நல்லதாக ஒரு குட்டி தரவேண்டுமென்று தோன்றியதா? இதற்குத்தான் நாம் இல்லாத நேரம் பார்த்து வந்து கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போயிருக்கிறான். இதைக் கொண்டு போய் அவனிடமே கொடுத்து விட்டு வாருங்கள். இல்லையென்றால் வேறு யாருக்காவது கொடுத்துத் தொலையுங்கள்.''

குமாருக்குத் தன் காதையே நம்ப முடியவில்லை. 'மாமியா இப்படிப் பேசுகிறாள்? என்மேல் எவ்வளவு அன்போடு, பாசத்தோடு இருப்பாள்! இந்த நாய்க்குட்டி விஷயத்தாலே பாசம்கூட மனத்திலிருந்து மறைந்து தப்பாகப் பேசும்படி செய்து விட்டதா?'

குமார் உள்ளே நுழையாமல் அதே பரபரப்புடன் வீதியில் இறங்கி நடந்தான்.

போகும் வழியில்தான் பேராசிரியர் வீடு. மல்லிகா தோட்டத்தில் உலாவுவது தெரிந்தது. சோர்ந்த மனத்தில் மகிழ்ச்சி பொங்கியது. நடந்த நிகழ்ச்சிகளை ஒரு நொடியில்



'பல் பிடுங்க வேண்டாம்! நாளைக்கு வாருங்கள், 'சிமெண்ட்' அடைக்கிறேன்!' என்று பல் டாக்டர் சொன்னதின் பலன் அன்றிரவு இப்படி அவர் ஒரு கனவைக் காண்கிறார்!

மறந்தவனாக இரும்புக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

மல்லிகா அவனைக் கண்டதும் துள்ளி ஓடி வந்தாள். 'அட ராமா! அவள் கையில் என்ன? தான் சேகருக்குக் கொடுத்த நாய்க்குட்டி அல்லவா சொகுஸாக வீற்றிருக்கிறது?' குமாருக்கு மூச்சுத் திணறியது.

''ஹல்லோ, மிஸ்டர் குமார்! வாருங்கள்! என்ன நாயையே உற்றுப் பார்க்கிறீர்கள்? மிஸ்டர் சேகர் எனக்குப் பரிசாகக் கொடுத்தார். அடுத்த மாதம் எனக்கும் சேகருக்கும் கல்யாணம்...பத்திரிகை வரும். கண்டிப்பாக வர வேண்டும். என்ன?''

மீதியைக் கேட்கக் குமார் இருந்தால் தானே! ஆத்திரத்தினாலும், அவமானத்தினாலும், ஏமாற்றத்தினாலும் அவன் உடல் நடுங்கியது. 'மல்லிகாவுக்குக் கொடுக்கத்தான் அன்று அவ்வளவு அவசரமாகச் சேகர் நாய்க்குட்டியுடன் காரில் போனானா?' குமாருக்குப் பைத்தியம் பிடிக்கும்போல் இருந்தது. வெறி பிடித்தவன் போல வீட்டை நோக்கி நடந்தான்.

கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்ததும் அவன் பார்வை பக்கத்து வீட்டு வராந்தாவின்மீது சென்றது. அங்கே பஞ்சு மௌனமாகக் கால்களைக் கட்டியபடி யோசனையில் ஆழ்ந்திருந்தான். விடுவிடென்று உள்ளே போனான். வெள்ளை நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து வேலியினருகில் நின்றான்.

''பஞ்சு.... பஞ்சு!'' என்று கத்தினான்.

பஞ்சு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். குமார் ஆவேசத்துடன் ''இந்தா பஞ்சு! இந்த நாய்க்குட்டி உனக்கேதான்...'' என்று சொல்லிக் குனிந்து குட்டியை வேலியின் மறுபுறம் விட்டான்.

பஞ்சு துள்ளி எழுந்தான். அவன் உதடுகள் துடித்தன. ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. ''நிஜம்மாவா மாமா! எனக்குத் தெரியும் என்னை நீங்க ஏமாத்த மாட்டேன்னு.''

நாயின் பஞ்சுக் கால்கள் பஞ்சுவின் குட்டிக் கால்களை நோக்கி ஓடின. பஞ்சு தாவி நாய்க்குட்டியை எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டான். அந்த ஆனந்தத்தில் தன் துக்கத்தை யெல்லாம் மறந்தான் குமார்.



பிளாட்பாரம் டிக்கெட்டுடன் நான் நுழைவதற்கும் வண்டி வருவது பற்றி ஒலி பெருக்கி அலறுவதற்கும் சரியாக இருந்தது.

வேகம் குறைந்து ஊர்ந்து வந்தது வண்டி.

ஜன்னல் வழியே தலையை நீட்டிக் கொண்டு கைகளை ஆட்டியபடி வந்தான் தினேஷ். அவன் முகத்தை ஒதுக்கிக் கொண்டு ஓட்டினாற்போல் ஒரு ரூபவதியின் முகம். என்னை அவன் சுட்டிக் காட்ட அவள் முகத்தில் ஒரு விகசிப்பு.

கைகூப்பி முகமலர்ந்து வரவேற்றேன்.

''டேய் தன்ராஜ்! என்னடா, சந்நியாசி மாட்டமா தனியா வந்து நிக்கிறே? கடிதாக மட்டும் ஜபர்தஸ்தாய் 'நாங்கள் ரெண்டு பேரும் தம்பதி சமேதராய் உங்களை வர வேற்க வழி மேல் விழி வைத்துக் காத்திருப் போம்' என்று எழுதிக் கொண்டிருந்தாயே!''

''ஆமாண்டா! என்னிக்கோ எழுதினேன். அவ ஊர்லே இல்லையே, இப்போ. எப்படிடா அழைச்சிண்டு வர்றது?'' என்றேன்.

டாக்ஸியில் ஏறி அமர்ந்தோம். பத்து நிமிஷங்களில் வீடு வந்து சேர்ந்தோம்.

''அப்ப நாங்க எங்க சொந்தக்காரங்க வீட்டிலே தங்கிடறோம். என்ன ப்ரமீள்!''

''அவர் ஏதாவது நினைக்கப் போறார். அடிக்கடி வந்து போயிண்டிருக்கோம்னு சொல்லுங்கோ.'' அவள் வாயசைத்தாள்.

''அதெல்லாம் இல்லே. அதுக்கென்ன இப்போ. அவள் இல்லாட்டா எங்க வீட்டிலே தங்கக் கூடாதா? ஹோட்டல்லேயிருந்து தருவிச்சுச் சாப்பிடலாம்.''

''சரியாப் போச்சு. நாங்க என்ன விருந் தாளியா வந்தா விருந்தாளியாவே நடந்துக் கணுமா? ப்ரமீள் குக்கிங். தன்ராஜ் பீல்டிங். என்ன ப்ரமீள்!''

''நான் தயார்!''

உபசாரத்துக்காகக்கூட வேண்டாம் என்று சொல்ல வாய் வரவில்லே எனக்கு. விருந்துக்கு வந்தவர்களை வெளியே அனுப்ப இஷ்டமில் லாமல், எனக்கு விருந்து வைக்க ஒப்புதல் கொடுக்கச் சம்மதமுமில்லாமல் தயங்கினேன்.

''என்னத்துக்குத் தன்ராஜ், யோசனே? அவ எல்லாம் செட்டா பார்த்துக்குவா. உனக்குச் செலவுகூடக் குறையும்டா. கிழும்!''

''சேச்சே! அதற்கில்லேயப்பா. சரி...'' என்று அரை மனத்துடன் சொல்லியபடி சமைய லறையைக் காட்டினேன். ப்ரமீளா காப்பி கலந்து வர உள்ளே போய்விட்டாள்.

நாங்கள் தனித்து விடப்பட்டோம்.

''என்னடா, தன்ராஜ்! எல்லாப் படங் களையும் பார்த்துட்டேன். ஒரு படத்துலே கூட உன் மனைவியைக் காணுமே. ரொம்ப ரூபவதின்னு எழுதியிருந்தாயே. நேரில் தான் பார்க்க முடியலே. படத்திலேயாவது பார்க்கலாம்னு அதையும் காணுமே. திருஷ்டி திருஷ்டிப் பட்டுடப் போறதேன்னு எடுத்து வைச்சுட்டேயா? எங்க கண்ணு நல்ல கண்ணுப்பா!''

நண்பன் சுவரில் உள்ள படங்களைப் பார்த் துக் கொண்டிருக்கும்போதே இந்தக் கேள் வியை நான் எதிர்பார்த்தேன். மிக உரிமை யுடன் வெகுளித்தனமாக அவன் கேட்கப் போகும் கேள்விக்குப்பதிலாக எதைக் கொடுப் பது என்றுதான் யோசனே; வேதனே.

''சேச்சே! அப்படி சொன்னுமில்லேயப்பா! அப்படி இருப்பதானாலும் உன் மனைவியைக் கண்டவுடன் அவைகளை எடுத்துத் தாராள மாக மாட்டியிருப்பேனே! ப்ரமீளாவின் அழ குக்கு முன் அவள் அழகு எங்கே?''

''என்னடா பூசி மறைக்கிறே! ஏதோ ஒன்னு உன் மனசுலே ஊடாடறது தெரி யறது. சொல்லலாமா, வேண்டாமான்னு, எப்படிச் சொல்றதுன்னு தெரியவில்லே உனக்கு. குட்டைக் குழப்பறே. என்னடா சோகம் உனக்கு அப்படி?''

அவன் ஏதோ என்று நினைத்துக் கொண்டு எதை எதையோ பேசிக் கொண்டு போனான்.

இடையில் காப்பி வந்தது. உட்கார்ந்து அருந்திவிட்டுப் ப்ரமீளா உள்ளே போய் விட்டாள். நான் தருக்குத் தெரிந்தாற் போல் சொல்ல ஆரம்பித்தேன்.

''என் மனைவி மஞ்சுளா ரூபவதிதான். பெட்டியில் இருக்கின்றன அவள் புகைப் படங்கள். அவைகளை எடுத்து உள்ளே வைத்து ரொம்ப நாட்களாகி விட்டன.''

''ஏன்? என்ன நேர்ந்தது அப்படி......? உங் களுக்குள் ஏதாவது சண்டையா, இல்லே...?'' என்றான் நண்பன் திகைப்புடன்.

''சண்டைதான். அதுக்காக அவள் படத்தை எடுத்து வைப்பானேன் என்பாய். அதை விளக்கமாகச் சொன்னால்தான் உனக் குப் புரியும். அதில் ரூபவதியாகக் காட்சி தரும் அவள் இப்போ கோர ஸ்வரூபியாக மாறி விட்டாள்.''

அவன் ஆரம்பினான். அந்தத் தெளியாத நிலை அவன் பார்வையில் பளிச்சிட்டது.

''ஆமாம், நிஜம்! கோர ஸ்வரூபிதான். கோர ஸ்வரூபியே. கண் கொண்டு பார்க்க முடியாத சகிக்காத வடிவம். தீக்குளித்துத் திரும்பிய உருவம் என்றும் பார்த்துக் கொண்டேன்.''

''அப்ப அவ பிழைத்ததே புனர்ஜென்மம்னு சொல்லு. அப்பா! கேட்கவே பயங்கரமா இருக்கே......''

''அதுவும் எதுக்குத் தெரியுமா? அந்த மூதேவி வேலைக்கார நாயைக் காக்கத்தான். மூஞ்சியும் மோறையும் வெச்சிண்டு ஒண்ணு எதிரிலே நின்னுதே, நீ வர்றப்போ. அந்தப் புண்ணியவதியின் ரூப லாவண்யம் அழிந்து விடக் கூடாதேன்னு தன் எழில் உடம்பை அழிச்சிண்டிருக்கா பாவி. அது வெந்நீர் அடுப்புக்குத் தென்னை ஓலையில் மண்ணெண்ணெய் வைச்சிருந்தாம். அப்படியே அசட்டையா நகர்ந்ததுலே புடவை பத்திண்டுடுத்தாம். அய்யோ, அம்மான்னு அலறியடிச்சுண்டு கூடத்துக்கு ஓடித்தாம் அது. அதைக் காப்பாத்த வெறுங் கையோடே போய்த் தீப் புடவையைக் கசக்கினளாம் இவள். டெரிலின் புடவை, புடிச்சிண்டுத்து..... அழகெல்லாம் அழிஞ்ச அப்புறம்தான் மூடியா தோணிச்சாம். கீழே படுத்துருண்டாளாம்.''

''ம்..... ஈசுவரா!''

''அந்த ஈசுவரன்தான் அவள் உயிரைக் காப்பாத்தினான்னு எல்லாரும், டாக்டர்கள் உள்பட ஆறுதல் சொன்னாங்க. யாருக்கு வேணும், அவங்க ஆறுதல்? அந்தக் கடவுள் என் ஆசையையும் சேர்த்து அந்தத் தீயோடே போகவிட்டானே நிஜ. என் இன்பமெல்லாம் கொள்ளை போயிட்டுதுடா அந்த நிமிஷத்திலேயே.....!'' இதைக் கூறி முடிக்கு முன்னே 'ஓ'வென்று அழுது விட்டேன்.

குரலெடுத்து அழுதுவிடவே பிரமீளாகூட வந்து விட்டாள் வெளியே.

''கவலைப்படாதேப்பா, நன்ராஜ்! அவங்கல்லாம் சொல்றப்படி உயிராவது மிஞ்சித்தேன்னு நாம் நன்றி செலுத்த வேண்டியதுதான். வேற எதையும் எண்ணி ஏங்கறதிலே அர்த்தமில்லே.'' என் தோள்களைத் தன் இரு கரங்களாலும் அழுத்திப் பிடித்தபடி அழுகையை அடக்கி அழாத நிலையில் மெதுவாக உருக்கமாகச் சொன்னான்.

''யாரோட அனுதாபமும் எனக்கு உதவப் போறதில்லே. அந்த நிமிஷத்திலேயே நான் ஏன் சாகலேன்னு இருக்கு எனக்கு. செக்கச் செவேல்னு வாளிப்பான தேகம். வாழைத் தண்டு போல் வழவழன்னு எப்படி இருக்கும் தெரியுமா அவள் கைகள்? அலர்ந்த பூ மாதிரி அப்படி இருக்கும் முகம். தளதளன்னு ஒரு மெருகு ஏறி எப்படிச் சுத்தி வந்தா தெரியுமா ? பாவி! எல்லாத்தையும் அந்த நாய்க்காகக் கொளுத்திட்டாளே!''

நெடுமூச்செறிந்தேன் நான்.

''அப்படிப் பார்த்தவளை வெந்த புண் அடையாளங்களோட பார்க்க முடியலே. அதான் ஊருக்கு அனுப்பிச்சுட்டே. அந்த நினைவுகூட வரப்படாதுன்னு பழைய நிலையிலே இருந்த போட்டோவைக்கூட எடுத்து வைச்சுட்டே உள்ளே. அப்படித்தானே?''


நான் எதுவும் சொல்லவில்லை. என் செயல்களைத்தான் அவன் சொல்கிறானே!

என் செயல் நியாயமற்றது என்று வாதாடினான் என் நண்பன். ''எல்லாம் பிறத்தியாருக்குப் போதனை சொல்றது சுலபம்தான். நான் எவ்வளவு வேதனைப்படறேன்னு உனக்குத் தெரியாது!''

''என்னடா, பிரமாதமா பேசறே? நாளைக்கு நாம செத்தாலும் இந்த உடம்பைத் தீயிலேதானேடா விடப் போறே? உன் மனைவி எப்படிப்பட்ட தியாகம் பண்ணியிருக்கிறது சுயநலக்காரனான உனக்குத் தெரியாது. என்னைப் போல் வெளியே இருக்கிறவங்களுக்கு நன்னாத் தெரியும். அந்தத் துணிச்சலுக்கு எங்க பாராட்டும் உண்டு.''

''போதும், போதும். என்னைக் கொடுமைக்காரன்னு வேண்டுமானாலும் சொல்லு. என் இழப்பின் கொடுமை எனக்குப் புரியும்.''

''மூர்க்கத்தனமா பேசினா எப்படிப் பேசறது? அவள் ஒரு பெண். பெண்ணின் அழகு போனாலும் பெண்மை போகவில்லை. ஞாபகம் இருக்கட்டும். அந்தக் கூட்டிலும் ஆசை



பாசமெல்லாம் ஊசலாட இடமுண்டு. உன் ஏமனைக்கு அவள் வாழ்வையே பலி வாங்கப் போறியா?''

தீவிரமாக விவாதித்து எப்படியாவது எங்களை ஒன்று சேர்த்து விடுவதில் அத்தனை துடிப்பு இருந்தது அவனுக்கு.

நான் பதில் ஏதும் தரவில்லை. பிரமீளா புரிந்தும் புரியாததுமாக எங்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவ ளுக்கும் என் இறுப்புத் தெரிய விரும்பினேன். அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தக் குளிய லறைக்குச் சென்று சற்றுத் தாமதித்து வந்தேன். இதற்குள் தினேஷ் சுருக்கமாக அவளுக்குச் சொல்லியிருக்க மாட்டானா ?

அவள் என்னைப் பார்த்தாள். என் மீது பரிதாபப்படுகிறாளா இல்லை.... என் மனைவிக் காக இரங்குகிறாளா என்று தெளிவு காண முடியவில்லை என்னால்.

என் நட்பின் பலவீனத்தைப் பயன்படுத்த முற்பட்டான் அவன்.

''ஒரு வீட்டிலோ பொது மண்டபத் திலோ ஒரு நல்ல காரியம் நடக்கிறது என்று வைத்துக் கொள். முதல் காரியமாக வாசல் தோரணம் நடக்கிறது. வாழை அளாவும் பந்தலோ, முடியா விட்டால் இனி கொஞ்சம் தோரணங்களோடு கூடிய அலங்காரப் பந்தலோ போட்டு வாழை மரத் தோரணம் கட்டு கிறோம். உள்ளே நடப்பது கலை நிகழ்ச்சி என்றால் நிகழ்ச்சி நிரல் அட்டவணை கூட வாசலிலேயே காட்சி தருகிறது. மக்கள் மணப்பது இளமைப் பருவத்தில். இல் லையா ? அந்தப் பருவத்தில் பெண்களிடம் ஏற்படும் வனப்பைப் பார்க்கிறோமே, எப்படி ஆண்களின் மனத்தைச் சுண்டி இழுக்கிறது அந்தக் கவர்ச்சி? எதற்கு? ஒரு தாம்பத்திய உறவை உண்டு பண்ணத்தான். அந்த வனப்பில் மனம் நெகிழ்ந்து மணம் முடிக்கத் தான் அத்தனை வர்ண ஜாலமும். அந்த அழகு குன்றுவதற்குள் உள்ளே உள்ள நெஞ் சத்தில் ஒட்டிக் கொண்டு விடுகிறது நுழைந்து வந்த மனம். அழகு அழிய அழிய அன்பு மட்டும் அழியாமல் அதிகமாகிக் கொண் டிருக்க வேண்டிய சிறுவ்டி ரகசியம்தானப்பா, நீ மெச்சி மொய்க்கும் அழகு. ஆண்டவன் அளவில் அது ஒரு நுழை வாசல். அவ்வளவே. பிரதான பீடம் அல்ல.''

நண்பனின் வாய் வண்ணத்தில் மெய்ம் மறந்து கிடந்தேன்.

''அந்த நுழை வாசலில் என்றோ நுழைந்துவிட்ட நீ உள்ளே நடக்கும் நிகழ்ச்சியை அல்லவா கண்டு ரசிப்பவன் இப்போ. உனக்கேன் வாசல் தோரணை பற்றிய கவலை ?''

நான் சிரித்து விட்டேன். சோகம் மறைந்து விட்டதாக நினைக்க வேண்டாம். சோகத்தை மறக்கச் செய்ய நண்பன் காட்டும் வாய் ஜாலம், நட்பில் கையாளும் நைச்சியம், உரிமையோடு உபதேசிக்கும் உத்தி — அத் தனையும்எனக்குப் பிடித்திருந்தன.

''சிரிப்பு வரும் போது மட்டும் சிரித்தால் போதாது. சிரிப்பு வராத நேரத்தில்கூட அதை வலிய வரவழைச்சுச் சிரிக்கும் ஆற்றல் வேண்டும். நாம் அழுவதைப் பார்த்து நம் விதி சிரிக்கும். அந்த வாய்ப்பை அதற்குக் கொடுத்து விடக் கூடாது. எங்கே சிரித்துக் கொண்டே உன் மனைவிக்குக் கிளம்பி வரும் படி ஒரு கடிதத்தை விடு, பார்க்கலாம்!''

எனக்கு ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டு விட்டது. சேர்ப்பதற்காகவே வந்தானா? சேர்த்து வைத்து விட்டுத்தான் போவானா?

களிப்புடன் திரும்பினேன். முற்றத்தை நோக்கித் திரும்பின என் விழிகள். அங்கே பத்துப் பாத்திரம் தேய்த்துக் கொண் டிருந்தது அந்தக் குட்டி.

''என்னப்பா! கேட்டதற்குப் பதிலைக் காணோம். எங்கோ பார்க்கிறயே!''

திடுக்கிட்டுத் திரும்பினேன். தலைதான் திரும்பியது. நிலையில் தடுமாற்றம்தான். வாய் குழறிக் கொட்டியது. ''அது முகத் தைப் பாரேன்.... விரலும் கையுமா பிறந்த மேனிக்கு.'''

''ச்சீச்சீ! என்ன இவ்வளவு மட்டமாப் போயிட்டே நீ. உனக்கு வந்த அவலத்தில் அவளைப் போய் வர்ணித்துக் கொண்டு. அழகாகத்தான் இருக்கு.....அதைப் பார்த்து ஏன் காயறே? அதுவும் ஒரு நுழை வாசல். அதற்கேற்ற தோரணை இருக்காதா?....... வேண்டாமா!''

நான் மௌனமானேன். நான் எதைப் பேச? இருக்கோ, இல்லையோ! குற்றம் சாட்டப்பட்டிருப்பவனுமிற்றே நான்.

''என்ன சொல்கிறாய்? எழுதிப் போடற உத்தேசம் உண்டா இல்லையா??'' என்று முடுக்கினான் நண்பன்.

''என்ன கெடுபிடி பலமாயிருக்கேன்னு பார்க்கிறயா? நீ சரின்னுத்தான் தொடர்ந்து தங்குவோம். இல்லேன்னு....என்ன ப்ரமீள்?'' பிரமீளா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளுக்கும் இவன் இல்லாமை பிடிக்கவில்லை.

இணக்கம் தந்தேன் நான்.

ஊருக்காக.... உலகத்துக்காக.... நண்ப னின் வற்புறுத்தலுக்காக.... அவளுக்காக.... அவள் பெண்மைக்காக...அவள் வாழ்வுக்காக.. வாழ வந்த உறவுக்காக..... உரிமைக்காக....

என் எண்ணங்கள் அப்படித்தான் போயிற்று. எனக்காக என்ற சொல்லே என்னில் இல்லை.

''டேய், பிரகஸ்பதி! தினேஷ் வந்தான். வாசல்னான். நுழைடான்னான். கழுத்தைப் பிடிச்சுத் தள்ளிட்டான். அப்படி இப்படின்னு அவகிட்டே எசிஞ்சு விழுந்தயோ தெரியும் சேதி. வாழைப் பொத்தின்னு வழக்கம் போல் வாழணும்.'' குரலில் உரிமை மிகுதிப் பட்டுக் கண்டிப்பு தெறித்தது.

நான் நிமிர்ந்து பார்த்தேன்.

''என்னடா, பார்க்கிறே ? நுழைஞ்ச வாசல்தான். தைரியமாப் போ.''

''அன்புள்ள மஞ்சுளா! கடிதம் கண்டதும் கிளம்பி வா!''

ஒரு சமயம் புகழ் மண்டிக் கமழ்ந்து கலை கொஞ்சி நின்று கிளுகிளுக்க நுழை வாசலில் தான் நுழைகிறேன்......

எப்படி ?

உணர்ச்சி பரவசத்தில், மகிழ்ச்சிப் பெருக் கில், ஆசைத் துடிப்புடனா ? — அல்ல !

அழிவு கண்ட அப்பெரு வாசலில் நிற்கும் சிதிலமடைந்த சிற்பங்களைக் கண்டு அதன் சிறப்பிழப்பை, சீரழிவை எண்ணி மறுகும் சரித்திர ஆய்வாளனின் சாந்த நிலையுடன்.... சகிப்புத் தன்மையுடன்.

வட்ட மேஜை

- பதுக்கல் ஏன்?
- வேலைப் பிரச்னை!
- தமிழ்ப் படங்கள்
- கருத்தடைத் திட்டம்

இரண்டு நாட்களாக மண்ணெண்ணெயை அடுப்பெரிக்கவும் விளக்கெரிக்கவும் தவிர வேறு எதற்கும் உபயோகிக்கக் கூடாதெனத் தடை விதிக்கப் போவதாய் ரேடியோவில் கூறினார்கள். தற்செயலாய் நேற்று நான் மண்ணெண்ணெய் வாங்கக் கடைக்குப் போனேன். அங்கே மண்ணெண்ணெயே இல்லை என்றும், ஒரு வாரம் சென்றுதான் வரும் என்றும் கூறினார்கள். மண்ணெண்ணெய் அங்கே இல்லாமலா போய் விட்டது? தடை வரப் போகிறதென்ற செய்தி அரையும் குறையுமாய் ஒலிக்க ஆரம்பிக்கும்போதே இந்தக் கொடுமையும் ஆரம்பமாகிவிட்டது. இதே போலத்தான் சர்க்கரையும். கடந்த ஒன்றரை மாதகாலமாக, 'கோட்டா வரவில்லை, கோட்டா வரவில்லை' என்ற பல்லவிதான். ஒன்றரை மாத காலமாகவா கடைகளுக்குச் சர்க்கரை விநியோகம் இல்லாமல் போய்விட்டது?

கம்பம்
8–9–65 ஆர். அம்புஜம்

திருமணமானபின் பெண்கள் வேலைக்குச் செல்லலாமா என்ற விவாதத்தைப் படித்தேன். திருமணமான பின்பு மட்டுமல்ல— பொருளீட்டுவதற்குக் குடும்பத்தில் ஆண்கள் இல்லாதபோது தவிர — பொதுவாகப் பெண்கள் வேலைக்குச் செல்லக் கூடாது.

கணவன் — மனைவி இருவரும் வேலை செய்தால் பொருளாதார நிலை நன்றாக இருக்குமே; வசதியான வாழ்வு வாழ முடியுமே என்பதற்காக வேலைக்குச் செல்லும் தம்பதிகள், ஆயிரக்கணக்கான குடும்பங்களில் படித்த ஆண் மகன்கூட வேலையற்று இருப்பதைக் கவனிக்க வேண்டும். அந்தக் குடும்பம் முழுவதும் வறுமையால் வாடுகிறதே! உத்தியோகம் செய்யும் படித்த பெண்கள் பலரும் அந்த வருவாயைக் கொண்டு ஆடம்பர வாழ்வு நடத்தவே விரும்புகின்றனர். இதே வேலை வேறொரு படித்த ஆணுக்குக் கிடைத்தால் இன்னொரு குடும்பம் நிமிர்ந்து நிற்க முடிகிறது. மேலும், வேலை கிடைத்த அந்த வாலிபன் விரைவில் மணம் புரிந்து கொள்வான். வயது வந்தும் மணமாகாது நிற்கும் பெண்ணொருத்திக்கு வாழ்வு கிடைக்கிறது. ஒரு குடும்பத்துக்குக் கிடைக்கும் இரு உத்தியோகங்கள் இரு குடும்பங்களுக்குக் கிடைக்குமானால் அங்கு சமதர்மம் நிலவும். படித்த பணக்காரப் பெண்கள் பலர் கற்ற அறிவு வீணாகாமல் இருக்கவும், பொழுது போவதற்காகவும் வேலைக்குச் செல்வதாகக் கூறுகிறார்கள். அவர்கள் வேலைக்குச் செல்வானேன்? தர்ம காரியமாகச் சமூக சேவை செய்யலாமே?

அரக்கோணம்
19–9–65 இ. சுந்தரராமன்

திரு 'சோ' அவர்கள் எழுதி வருகின்ற 'சாதல் இல்லையேல் காதல்' சுவையான கதைப் போக்கும் நகைச் சுவை மிக்க நடையும் கொண்டு வாசகர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்பதில் ஐயமில்லை. ஆயினும் சென்ற வாரம் (5–9–65) திரு 'சோ' தமிழ்ப் படங்களைத் தரக் குறைவாக எடைபோட்டு எழுதியிருப்பது எனது மனத்தைப் புண்ணாக்கியுள்ளது. தமிழ்த் திரையுலகை அவர் கேலி செய்து எழுதியுள்ளமை, இன்னும் தமிழ்த் திரையுலகு வளர்ச்சியுற வேண்டும் என்ற திரு 'சோ'வினுடைய விருப்பமிக்க எண்ணத்தையே பிரதிபலிக்கிறதா அல்லது தமிழ்த் திரையுலகின் சிறு குறைகளைப் பெரியனவாய்க் காட்டிக் கிண்டல் செய்ய வேண்டுமென்ற ஆசிரியரின் உள்ளப் பாங்கைக் காட்டுகிறதா?

வாணியம்பாடி
2-9-65 எஸ். குருமூர்த்தி

[எல்லாத் தமிழ்ப் படங்களுமே மட்டம் என்று திரு 'சோ' குறிப்பிடவில்லை. பெரும்பாலான தமிழ்ப் படங்களில் பொதுவாக உள்ள குறைகளையே இடித்துக் காட்டியுள்ளார். தமிழ்த் திரை உலகம் முன்னேற வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் எல்லோருக்கும் உள்ளதுபோல் திரு சோவுக்கும் உண்டு. இப் பத்திரிகைக்கும் உண்டு. இவ்விதழ் அட்டைப்படம் தரமான தமிழ்ப் படங்களைப் பாராட்ட கல்கி தயங்குவதில்லை என்பதனை நிரூபிக்கிறதல்லவா? — ஆசிரியர்.]

“கருத்தடைத் திட்டம் தருமத்துக்கும் பண்புக்கும் ஊறு விளைவிக்கும் என்பதோடு தற்போதைய ராணுவத் தேவைக்கும் விரோதமாகும்” என்று ராஜாஜி கல்கியில் எழுதியவற்றையும் அதை ஒரு பத்திரிகை கண்டனம்செய்து எழுதியதையும் படித்தேன்.

பின்னர், 5-9-65 கல்கியில் “ஜனத்தொகை என்பது கொள்ளை நோயும், பஞ்சமும் போல் திடீரென்று விசுவரூபம் எடுக்கும் பிரச்னையல்ல. சிறுகச் சிறுகத்தான் ஜனத்தொகை உயரும். எனவே பெரும் போரைப் போன்ற எதிர்பாராத நிகழ்ச்சிகளால் இந்த உயர்வு வெகுவாகப் பாதிக்கப்படக்கூடும். இச்சமயத்தில் மக்கட் தொகையைக் கட்டுப்படுத்துவது பற்றிப் பேசுவது விவேகமல்ல” என்ற ராஜாஜி அவர்களது கருத்தையும் படித்தேன்.

நான் ஓர் அரசியல் மாணவன். ராஜாஜியின் கருத்துக்கள் வார்த்தைக்கு வார்த்தை அர்த்த புஷ்டி நிரம்பியதாக வந்துகொண்டிருக்கின்றன. அவற்றைப் படித்துப் பயன் பெறுகின்றேன். இம்மாதிரி பல கருத்துக்களை அவ்வப்போது அவர் கொடுத்து வர வேண்டுகிறேன்.

பாளையங்கோட்டை
20-9-65 பி.எஸ். சண்முகசுந்தரம்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon